# யாழ்ப்பாணம்

## ப. ஸ்ரீஸ்கந்தன்



### இன்றைய யாழ்ப்பாண நிலைமைகள்

### - 1994 -

# யாழ்ப்பசணம்

ப. ஸ்ரீஸ்கந்தன்

## இன்றைய யாழ்ப்பாண நிலைமைகள்

- 1994 -

மஞ்சரி வெளியீடு

# YARLPAYANAM
(Travelogue)

| | |
|---|---|
| By | Pa. Sriskanthan<br>38 Wallis Crescent<br>Rexdale, Ontario<br>M9V 4K3 |
| First Edition | June 1994 |
| Typesetting | Mrs. K. Arunthavarani |
| Design & Layout | Nishanth |
| CopyRight | Author |
| Price | Cdn $ 2.00 |
| Publication | "Muncharie"<br>1221 Markham Road<br>Box 21<br>Scarborough<br>Ontario<br>M1H 3E2 |
| Printing | Quality Printing Services |

என்னில் உயிராகி
என்னுள் உணர்வாகி
தன்னை எருவாக்கி
என்னை உருவாக்கிய

***என் அப்பாவுக்கு***

# பதிப்புரை

சொந்த நாட்டினை நீங்கி புலம் பெயர்ந்து வாழ்பவர்களில் அதிகமானோர் உள்ளங்களில் வியாபித்து நிற்கும் எண்ணக்கரு திரும்புதல் (The concept of return) என்பதாகும். அந்த வகையில் இலங்கைத் தீவின் இனப்பிரச்சினையால் புலம் பெயர்ந்து வாழும் லட்சோபலட்சம் ஈழத்தமிழர்களையும் பிறந்த மண்ணுக்குத் திரும்புதல் என்ற எண்ணக்கரு ஆட்கொண்டுள்ளது என்று கூடச் சொல்லலாம்.

அண்மையில் யாழ்ப்பாணம் சென்று திரும்பிய நண்பர் ஸ்ரீஸ்கந்தன் தனது யாழ்ப்பயண அனுபவங்களை "மஞ்சரி" யில் எழுதினார். குறுந்தொடராய் பிரசுரமான யாழ்ப்பாணத்தில் இன்றைய யாழ்ப்பாணத்தின் நிலைமைகளையிட்டு தான் கண்ட, கேட்ட, அவதானித்த, அனுமானித்தவற்றை "மஞ்சரி" வாசகர்களுடன் பகிர்ந்து கொண்டார். புலம் பெயர்ந்த ஈழத்தமிழர்களான "மஞ்சரி" வாசகர்களை இக்கட்டுரைத் தொடர் பெரிதாகக் கவர்ந்து விட்டது. சொந்த மண்ணுக்குத் திரும்புதல், பிறந்த மண்ணின் நிலைமைகள் ஆகிய இரண்டு கோட்பாடுகளை அடிநாதமாகக் கொண்டு வரையப்பட்ட கட்டுரை, புலம் பெயர்ந்த வாசகர்களின் அடிமனதைத் தொட்டதில் ஆச்சரியம் ஏதுமில்லை.

ஸ்ரீஸ்கந்தனின் யாழ்ப்பயணம் தொடரை மீண்டும் பிரசுரிக்க வேண்டும் என்றும் வெளிநாடுகளிலுள்ள உறவினர்கள், நண்பர்களுக்கு அனுப்பி வைக்க பிரதிகள் வேண்டுமென்றும் எம்முடன் தொடர்பு கொண்டு வேண்டுகோள் விடுத்தவர்கள் ஏராளம். அபரிமிதமான இவ்வரவேற்பினை மதிக்கும் விதத்தில் இக்கட்டுரைத் தொடரை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

மரணப்படுக்கையில் இருந்த தன் தந்தையைத் தரிசிக்க அவசர, அவசரமாக மேற்கொண்ட பயணமே யாழ்ப்பயணம். நண்பர் ஸ்ரீஸ்கந்தன் சென்ற போது கட்டுரை வடிக்கும் திட்டம் ஏதுமில்லை. கனடா திரும்பிய பின்னரே அவரது அனுபவங்களை எழுத்தில் பதிவு செய்யும் எண்ணம் தோன்றியது. ஒரு பயணக் கட்டுரைக்கான எந்த முன்னேற்பாடுகளும் செய்யப்படவில்லை. ஒரு கோணத்தில் நோக்கினால் இது கட்டுரைத் தொடரின் பலவீனமே.

ஆனால் திட்டமிட்ட பயணக்கட்டுரை எழுத வேண்டும் என்ற முனைப்புடன் பயணத்தை மேற்கொள்ளாது தனது எதேச்சையான அனுபவங்களை, இயல்பான எண்ணங்களை எழுதியது இன்னொரு கோணத்தில் வாசகர்களை ஈர்த்துள்ளது. ஸ்ரீஸ்கந்தனின் எளிமையான நடையும், ஒளிவு மறைவில்லாத யதார்த்த எண்ணப்பாங்கின் வெளிப்பாடும் "எங்களில் ஒருவன் யாழ்ப்பாணம் போய் வந்திருக்கிறான்." என்ற தாக்கத்தையே வாசகர்களிடம் ஏற்படுத்தியுள்ளது. அதுவே கட்டுரைக்குக் கிடைத்த வரவேற்புக்கு அடிப்படைக் காரணம்.

பயணக் கட்டுரை எழுத வேண்டும் என்ற நோக்கமில்லாது நடந்த பயணம் கட்டுரைத் தொடரானது. புத்தகம் போட வேண்டும் என்ற எண்ணமில்லாது எழுதப்பட்ட பயணத்தொடர் இன்று புத்தகமாகியுள்ளது. இன்றைய யாழ்ப்பாணத்தின் நிலைமைகளைத் தெளிவாகச் சித்தரிக்கும் காலத்தின் பதிவாக இச்சிறுநூல் விளங்கும்.

புலம் பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்கள் "யாழ்பயணம்" நூலினை வரவேற்று ஆதரவு தெரிவிப்பார்கள் என்ற நம்பிக்கையுடன் "மஞ்சரி"யின் கன்னி வெளியீடாக இதனைப் பிரசுரிக்கிறோம்.

30.04.1994

**டி.பி.எஸ். ஜெயராஜ்**

ஆசிரியர் — மஞ்சரி

# முன்னுரை

இது ஒரு வேதனையான அனுபவம்.

மாதங்களுக்கு முன்பாக தீர்மானம் எடுத்து, வீட்டுக்கு அறிவித்து, வாங்க வேண்டிய சாமான்களுக்கு லிஸ்ட்டும் போட்டு, எனது மகளை என் பெற்றவர்களுக்கும் உற்றவர்களுக்கும் காட்ட வேண்டும் என்பது போன்ற ஆயிரம் கனவுகளைச் சுமந்து கொண்டு, நாட்களை எண்ணி எண்ணி, பின் புங்கங்குளம் புகையிரத நிலையத்தில் இறங்கிக் குதூகலமாக எனது வீதிகளில் நடந்து சென்று வீட்டிற்குப் போகவேண்டிய பயணம் இப்படி திடீரென கனவு போல் ஆகிவிட்டதே என்ற கவலையும் எனக்கு.

அப்பாவுக்குச் சுகமில்லை, நான் நாளைக்குப் போக வேண்டும் என மனேஜரிடம் அனுமதி கேட்டபோது, மிகவும் Busy யான RRSP விற்பனையாகிற காலம் என்பதனையும் பொருட்படுத்தாது அனுமதி தந்தது மட்டுமல்லாது, பயணத்தின் பயங்கரமான பகுதிகளைக் கடந்து கொழும்பு வந்ததும் தனக்கு அறிவிக்கும்படியும் கூறினார். இங்கு பிறந்து வளர்ந்த அந்தப் பெண்மணியின்(Ms. Ingrid March) மனிதாபிமானம் எனக்கு வாழ்நாளில் மறக்க முடியாதது.

போன பயணம் கடுமையானது. விமானம், புகையிரதம், கப்பல், வள்ளம், பஸ், ஸ்கூட்டர், சயிக்கிள் என்று மாட்டுவண்டில் தவிர்ந்த அங்கிருக்கும் அனைத்து வாகனாதிகளும் என் பயணத்திற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. தவிர, யாருடைய கட்டுப்பாட்டின் கீழுமல்லாத ஓமந்தை-தாண்டிக்குளத்திற்கு இடைப்பட்ட தூரத்துக்கான நடையும் குறிப்பிடத்தக்கது.

கிளாலி வள்ளப் பயணம் தான் சற்றுப் பயங்கரமானது. வள்ளம் கவிழ்வது தொடக்கம் விமானத் தாக்குதல் வரை எதுவும் எந்நேரமும் நடக்கலாம் என்ற மரண பயத்தைக் கொண்டது. நினைத்துக் கொண்டு வரும் விடயங்கள் நிறையவே மறந்து போக வல்ல பயணம் அது. உதாரணத்துக்கு, அங்கு பிணை நின்ற ஒருவருக்கு ஏற்பட்ட பிரச்சினை பற்றி இங்குள்ள ஒருவருக்குச் சொல்லிவிடச் சொன்ன முக்கியமான ஒரு விடயம் இங்குள்ளவர் என்னிடம் கேட்கும் வரை என் நினைவுக்கு வரவில்லை. மேலும் இத் தொடர், அறுந்து அறுந்து வருவதும் அவ்வப்போது மீட்டெடுத்து நான் எழுதுவது தான் காரணம்.

மேலும் போய் வந்த காலகட்டம் தான் முக்கியமானது. இங்கு வந்து எழுதிமுடிப்பதற்கிடையில் விடுதலைப்புலிகள் ஏற்படுத்திய சீதனத் தடைச் சட்டமும், 20 சித்திரை 1994 இலிருந்து வடபகுதிக்குள் கொண்டு போக முடியாத பொருட்கள் என மேலதிகமாக வர்த்தமானியில் அரசு அறிவித்துத் தடைவிதித்ததும் குறிப்பிட வேண்டியவை. தடைவிதிக்கப்பட்ட பொருட்கள் பற்றிய விபரங்கள் இறுதியில் பின்னிணைப்பாக உள்ளது.

நான், அங்கு நடப்பவற்றை விபரமாகவும் விரைவாகவும், அனைவருக்கும் அறியத்தர வேண்டும் என நினைத்து எழுதியதால் இது இலக்கியத் தன்மையற்று இருப்பதாக உணர்கிறேன். பரவாயில்லை. நோக்கம் இலக்கியம் படைப்பது அல்லவே.

முன்பெல்லாம் பல பயணக் கட்டுரைகள் வாசித்திருக்கிறேன். எழுத்தாளர்கள். வெளிநாட்டுக்குப் போய், அங்கு காண்பவற்றை, நடப்பவற்றைப் பார்த்து, அறிந்து வந்து எழுதுவார்கள். புதுமையாக இருக்கும். எழுதுவதற்கென்றே போவார்கள். ஆனால் மாறாக, வெளிநாட்டில் வசித்து வரும் நான், குடும்ப விஷயம் காரணமாக, என் சொந்த நாட்டுக்குப் போய் வந்து, அங்கு நடப்பவற்றை வெளிநாட்டில் உள்ளவர்களுக்காக எழுத நேர்ந்த –அதிலும் "அங்கு எல்லாம் நடக்கிறதா" என்று சிலரை ஏங்க வைத்த என் சோகம் இருக்கிறதே, அதைச் சொல்லவும் முடியாது, சொல்லாலும் முடியாது.

வழக்கம் போல் இப்பகுதியில் நன்றி சொல்ல வேண்டும் என்றால்

கொழும்புவரை என்னுடன் வந்து, எனது யாழ்ப்பயண நாட்களின் போது பயத்தையும், துக்கத்தையும், யோசனைகளையும் சகித்துக் கொண்ட என் மனைவிக்கும்,

அத்தனை நாட்களும் என்னை விட்டுப் பிரிந்திருந்த என் செல்ல மகளுக்கும்,

இந்த வெளியீட்டுக்கு ஒத்துழைத்த திருமதி. ஜெயராஜ், மாயவன், க.தி.குமாரன் ஆகியோருக்கும், அச்சில் வடித்த திருமதி. அருந்தவராணி கனகதாஸ், வடிவமைத்த நண்பன் நிசாந், நூலாய் அமைத்த Quality Printing அச்சகத்தாருக்கும்,

என்னை எழுதத் தூண்டிய அண்ணன் ஜெயராஜ் அவர்களுக்கும், வாரந்தோறும் பிரசுரித்த மஞ்சரிக்கும்,

அபிப்பிராயங்கள் சொன்ன அனைவருக்கும்,

மற்றும், மற்ற வேளைகளில் சும்மா இருக்கிற என்னை எழுத வைக்கிற ஏனைய நண்பர்களுக்கும்

**அன்புடன்**

**30.04.94** **ப. ஸ்ரீஸ்கந்தன்**

---

இன்று எனது அப்பா இறந்து போனார். அப்பாவுக்குப் பிரியமான யோகர் சுவாமிகள் சொன்னது போல் "எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்" ஆகிவிட்டது. எனது இந்தப் பயணத்துக்கு மூலகாரணமான அப்பாவின் நீண்ட பயணம் முற்றுப்பெற்றுவிட்டது. அவர் நினைவுகள் மட்டும் என்னை ஆகர்ஷித்தபடி.

**06.05.94**

# 1.

அவசியமும், அவசரமும் காரணமாக யாழ்ப்பாணம் செல்வதற்கு இரு நாட்களில் தீர்மானம் செய்தபோது, நான் எனது மண்ணை விட்டகன்று பத்து வருடங்கள் ஆகிவிட்டிருந்தன.

***ஷெல்லடி —***
***கிளாலிப் பயணம் —***
***எந்நேரமும் சண்டை துவங்கலாம் —***
***ஆமி, தலையாட்டிகள் செக்கிங் —***
***புலிகள் காசு கேட்பாங்கள் — பிடிச்சு வைப்பாங்கள் —***

போன்ற வழமையான பயங்கரமிக்க பல்லவிகளை எல்லாம் மிக சாதாரணமாக்கிக் கொண்டு ஏதோ ஒரு உணர்வு, உந்துதல் என்னைப் "போ" என்றது.

12 மாசி 1994 அதிகாலை.

விமானம் தென்னிந்தியாவின் கேரளா பகுதியைக் கடந்து கொண்டிருக்கிறது என விமானி அறிவித்தபோது இன்னும் சில நிமிடத்தில் யாழ்ப்பாணத்தை கடப்பேன் என எண்ணிய கணம் மெய்சிலிர்த்தது.

எமது மக்களின் சுவாசத்தையும், மண்ணின் வாசனையையும் தொட்டுக் கொண்டிருக்கிற மேகத்தைக் கிழித்துக் கொண்டு விமானம் செல்லும் போது ஏற்பட்ட பரவசம், அழகிய மலைத் தொடர்களையும், பசும் தோட்டங்களையும் தாண்டி விமானம் கட்டுநாயக்காவில் தரையிறங்கும் போது ஏற்படவில்லை.

ஒரு அந்நிய மண்ணில் கால் பதித்த நினைவு தான் எஞ்சியது.
இரத்தம் சிந்தி மடிந்து கொண்டிருந்த தமிழ் சகோதரனையும் —
எரிந்துகொண்டிருந்த தமிழரின் சொத்துக்களையும் —
அந்தரித்தவாறே அகதி முகாம் நோக்கி ஓடியவர்களையும் —

பார்த்துக் கொண்டு ஒரு காக்கிக் கசாப்புக் கடைக்காரனின் துப்பாக்கி முனையில் இரு கைகளையும் தலைக்கு மேல் உயர்த்தியவாறு கொழும்பு வீதிகளில் நடந்து சென்ற 83 ஆடிக் கலவர நினைவுகள் ஒரு கணம் என்னைத் தாக்கிற்று.

******

தேசிய அடையாள அட்டை தான் தமிழர்களின் இன்றைய உயிர்நாடி.

நீங்கள் உயிருடன் இந்த அட்டையையும் சதா காவித்திரிந்தால் தான் வாழ்வு சுகமாக நடக்கும்.

சந்திக்குச் சந்தி மறிக்கப்பட்டு கேட்கப்படுவீர்கள். அதிலும் காலிமுகத் திடலால் செல்லும் போது ஒரு தரமாவது மறிக்கப்படாவிட்டால் நீங்கள் நிச்சயம் தமிழராக இருக்க முடியாது.

இந்த அட்டைகள் வைத்திருந்தும் கைது செய்யப்பட்டு இராணுவ முகாமுக்குக் கொண்டு செல்லப்படுகின்ற மற்றும் பொலிஸ் லொக் — அப்பில் 40 பேர் வரை விடப்பட்டு அங்கு நின்று கொண்டே நித்திரை செய்ய வேண்டிய நிகழ்வுகளும் எமது இளைஞர்களுக்கு ஏற்படுகின்றன.

தவிர, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் புகுவ தற்கும், விட்டு வெளியேறுவதற்கும் இந்தத் தேசிய அடையாள அட்டை அவ சியம்.

இந்த அட்டை இருந்தால் பாஸ்போட்டை கொண்டு திரிய வேண்டிய அவசியமும் இல்லைத்தானே.

******

## திருமலை – பருத்தித்துறை

எனது யாழ்ப்பாணப் பயணம் இரு வழிகளில் அமைந்திருந்தது. அதிஷ்டவசமாகக் கிடைத்த வாய்ப்புக் காரணமாக போகும்போது திருகோண மலையிலிருந்து கப்பல் மூலமாக பருத்தித்துறைக்கும், வரும்போது பரவலாகப் பேசப்படுகின்ற "கிளாலி" வழியாகவும் வர நேர்ந்தது.



அடுத்த நாள் அதிகாலை கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து புறப்படும் திருகோணமலைக்கான புகையிரதத்தில் ஏறிய போது அநேகமாக அப் பெட்டியில் இருந்தவர்கள் எல்லாம் அந்தக் கப்பலுக்குப் போகிறவர்களாகவே இருந்தார்கள்.

இன்னும் தமிழன் திருந்த வில்லை என்பதை நிதர்சனமாக்கும் வகையில் பெட்டிக்குள் ஒருவர் சத்தம் போட்டவண்ணம் இருந்தார்.

"எனது **seat** க்கு நேர்மேலே தனது பெட்டியை வைத்தது யார்"

இவ்வாறானவர்களை வைத்துக் கொண்டு எப்படி எமது போராட்டம் இவ்வளவு வேகமாக முன்னேறியது?

சீனன்குடாவில் புகையிரதம் நிறுத்தப்பட்டு பொலிசாரால் சாதாரண மாகவும், மறுநாள் திருகோணமலைத் துறைமுகத்தில் கடற்படையினரால் "எல்லாம் வெளியே எடுத்து எறியப்பட்டு" கடுமையானதாகவும் நாங்கள் சோதனையிடப்பட்டோம்.

திருகோணமலையில் கடற்படையைச் சேர்ந்த ஒரு பெண் எனது விளக்கங்களைக் கேட்டு மருந்துகள், பற்றரிகளைக் கொண்டு செல்ல அனுமதித்த போது அவர்களுடன் கூட நின்ற தமிழ்ப் போராளிக்குழு ஒன்றின் உறுப்பினர் ஒருவர் இவையெல்லாம் அங்கே தேவையில்லை என்று தடைசெய்ய முயன்றார்.

ஒரு சிங்களப் பெண்ணுக்கு இருந்த மனிதாபிமானம் ஒரு தமிழனுக்கு ஏன் இல்லாமல் போனது?

நாம் 7.00 மணியளவில் பயணிகள் கப்பல் ஒன்றில் ஏற்றப்பட்டு இர வோடிரவாக ஓடிய கப்பல் காங்கே சன்துறை கடல்பகுதியை அடைந்த போது விடிந்து போனது.

அங்கு நடுக்கடலில் நின்ற **UNHCR** இன் மிகப் பெரிதான சாமான் கப்பலான "மாஷீசு" க்கு நடுக்கடலிலே வைத்து ஏற்றப்பட்டோம். இதில் ஏறிக்கொண்ட காங்கேசன்துறைமுக முகாமைச் சேர்ந்த இராணுவ கொமாண்டோக்கள் எமது தேசிய அடையாள அட்டையைச் சரிபார்த்து மீண்டும் எமது பெட்டிகளை முழுமையாக சோதனையிட்டனர்.

இதன் போது மேல் தட்டில் வைக்கப்பட்டிருந்த **Bag** களை ஒரு ஏணி மூலம் மேலே சென்று இராணுவத்தினருக்கு அடையாளம் காட்டினோம். அநேகமாக வயோதிபர்களை தூக்கியே ஏற்றியும் இறக்க வேண்டியதுமாயிற்று. இவ்விடத்தில் அக்பர் என்ற இராணுவ உறுப்பினர் தமிழிலேயே பெயர்களை வாசித்து அனைவருக்கும் மிக உதவியாக இருந்தார். மேலும் அவர் தமக்கென குடிப்பதற்கு வைத்திருந்த தண்ணீரை வாளி நிரம்ப எடுத்துக் கொண்டு வந்து எல்லோருக்கும் கொடுத்தார்.

இராணுவத்தினரை கொமான்ட் பண்ணி வந்தவர் தாடி வைத்த ஒரு வாட்ட சாட்டமான இளைஞர். இவர் என்னுடன் பேச்சுக் கொடுத்து என்னைப்பற்றி விசாரித்தார். தான் குருநாகலைச் சேர்ந்தவர் என்றும் சென். தோமஸில் படித்தவர் என்றும் பெயர் ஜெயமான என்றும் சொன்னார்.

அவர் எனது சொந்த ஊரைப் பற்றிக் கேட்ட போது **Jaffna** என்றேன். அரியாலை என்ற இடம் இவருக்குத் தெரியாமல் இருக்கும் என்பதால். **Jaffna** வில் எங்கே என்றார். அரியாலை என்றேன். அரியாலையில் எதுக்குக் கிட்ட என்று அவர் ஆங்கிலத்தில் கேட்டபோது தான் எனக்குத் தலைக்குள் இடித்தது.

"இவர் கட்டாயம் தமிழாளாகத் தான் இருக்க வேண்டும்". அதை உறுதி செய்யுமாற்போல இராணுவத்தினர் போன பின் கப்பலிலிருந்தவர்கள்

புளொட் ஐயா என்னவாம் என்று என்னிடம் கேட்டார்கள்.

இராணுவத்தினர் இறங்கிக் கொண்டதும் வெள்ளைக் கொடியில் செஞ்சிலுவை தாங்கிய அந்தக் கப்பல் பருத்தித்துறை துறைமுகத்தை நோக்கி நகரத் தொடங்கியது.

இந்தப் பயணம் முழுவதும், புலிகள் காசு கேட்பார்கள்— முன்பு பவுண் கொடுத்தீர்களா? — வீடு இருக்கிறதா? — இருந்தால் எழுத வேண்டிவரும், என்றெல்லாம் எனது சக பயணிகளால் நான் நச்சரிக்கப்பட்டேன்.

அந்தக் கப்பல் கரையை அண்மித்தபோது, மிக விசாலமாகத் தெரிந்த பனைமரத் தொடரைக் கண்ணுற்ற போது எழுந்த மன உணர்வுகளை என்னால் எழுத முடியாது. அதை அனுபவிக்க வேண்டும்.

மேப்பிள் மர நிழலில் சுகமாகவும் சுதந்திரமாகவும் 10 வருடங்களைக் கழித்த எனக்கு நடுக்கடலில் உச்சி வெய்யிலில் நின்று கொண்டு தூர இருக்கும் அந்தப் பனைமரங்களைக் காணும் போது என்னுள் ஏன் குருதி கொப்பளித்துக் கொண்டது?

தொப்புள் கொடி உறவல்லவா அது.

கப்பலிலிருந்து சிறு படகுகளுக்கு நாம் இறக்கப்பட்டு கரையை அடைந்த போது உச்சி வெய்யில் எறித்தது.

தாலாட்டும் கடலலையோ
எங்கள் சிறுபடகை
தள்ளாட வகை செய்தது
தாண்டவம் ஆடியது
நாங்களோ போர்க்களத்து
வீரர்கள் போலானோம்
விடியல் நெருங்கியது
இறுதிமூச்சைப் பிடித்தபடி
வெற்றி வீரராய்
ஏழுகடல் நீர் தெறிக்கும்
எங்கள் எல்லை மண்ணிலே
காலடி வைத்தோம்

– சிவரமணி –

பருத்தித்துறை பழைய தபால் நிலையக் கட்டிடத்தில் தான் தற்போது விடுதலைப்புலிகளின் "உள்ளே அனுமதிக்கும் **Pass** " கொடுக்கும் அலுவலகம் இயங்கி வருகிறது. விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களே கடலிலிருந்து எல்லாப் பெட்டிகளையும் தூக்கி வந்து மண்டப நடுவில் வைத்தார்கள். பின் ஆறுதலான நீண்ட வரிசையில் எல்லோரும் நிறுத்தப்பட்டு விடுதலைப் புலிகளின் அலுவலர்களால் விபரங்கள் எடுக்கப்பட்டு, பெட்டிகள் சோதனையிடப்பட்டு, கையில் தரப்பட்ட 'Pass' உடன் நான் எனது மண்ணில் நடந்து சென்றேன், ஒரு வாகனத்தைத் தேடி.

**2.** பருத்தித்துறை தபால் நிலையத்தில் கடமையாற்றிய விடுதலைப் புலிகளின் அலுவலர்களின் முகத்தில் சிரிப்பைக் காணமுடியவில்லை. மிகவும் சீரியசாக இருந்தார்கள். எல்லா அலுவலர்களும் அப்படி இருப்பதை பின்னால் நான் சென்ற அலுவலகங்களிலும் கண்டு கொண்டேன். மாறாக புலிவீரர்கள் சிரித்துச் சிரித்துக் கதைக்கிறார்கள். மனம் விட்டுக் கதைக்கிறார்கள். வெளிநாட்டு வாழ்க்கை பற்றிக் கேட்டு அறிகிறார்கள்.

அலுவலர்கள் எப்படியும் என்னைத் தனியாகத் தான் விசாரிப்பார்கள் என நினைத்தேன். ஆனால் மிகச் சாதாரணமாக கூண்டுக்குள் இருந்தவாறே கேள்விகள் கேட்டனர்.

முழுப்பெயர், அடையாள அட்டை இலக்கம், யாழ்ப்பாண முகவரி, கொழும்பு முகவரி.........

"கடைசியாக யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறிய திகதி?"

"ஆனி மாதம் 20ம் திகதி 1984ம் ஆண்டு".

10 வருஷம் என்றவாறே என்னை நிமிர்ந்து பார்த்தனர்.

முன்பொருமுறை மூன்று வருடம் கழித்து விடுமுறைக்காக லண்டனில் இருந்து வந்த என் நண்பனிடம் "எப்படி இந்த மண்ணை விட்டு பிரிந்து மூன்று வருஷம் உன்னால் இருக்க முடிஞ்சுது" என்று நான் வெறுப்புடன் கேட்டதற்கும் இந்தப் பார்வைக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமோ?

*******

யாழ்ப்பாணம் செல்வதற்கு ஒரு **C.T.B** பஸ், ஒரு தட்டி வான், மற்றும் நாலைந்து கார்களும் நின்றன.

**C.T.B** பஸ் என்றால் பழைய, சிவப்பு நிற பஸ் இல்லை. வெறும் அலுமினியம் மட்டும் மிஞ்சிய ஒரு...."

ஒருவேளை இந்த **bus** உம் எமது மக்களைப் போல் மண்ணுக்காக குருதி சிந்தி விட்டதா?

முன்னாலிருந்த தேனீர்க் கடையில் ஆற அமர இருந்து பிளேன் டீயும் குடித்து வெத்திலையும் போட்டுக் கொண்டேன். சுகமாக இருந்தது.

யாழ்ப்பாணம் செல்வதற்கு காருக்கு **2000/=** ரூபா கேட்டார்கள். கப்பலில் வந்த இரு வயோதிபக் குடும்பங்களையும் ஏற்றி நானும் உட்கார்ந்து கொண்டேன்.

இப்பொழுதெல்லாம் வாகன சாரதிகள் மருந்து போன்று ஒரு குப்பியினுள் பெற்றோல் வைத்திருக்கிறார்கள். ஸ்டியரிங்க் அருகேயுள்ள சிறிய ரபர் குழாய் வழியாக துளிக் கணக்கில் பெற்றோலை விட்டு வாயால் ஊதுகிறார்கள். பின் **start** பண்ண எஞ்சின் வேலை செய்கிறது. மிச்சம் எல்லாம் மண்ணெண்ணெயில் தான் இயங்குகிறது. மண்ணெய் கடையில் போத்தல் 80

ரூபா விற்கிறது. அநேகமாக எல்லாக் கடைகளிலும் முன்னால் போத்தல் போத்தலாக அடுக்கி வைத்திருக்கிறார்கள். நீல நிறத்தில். முன்பு நாங்கள் பார்த்த சர்பத் கடைகள் போலிருக்கும்.

சர்பத் என்றதும் லிங்கம் கூல்பார் நினைவுக்கு வராத யாழ்ப்பாணத்தான் இருக்கமாட்டான். அதே சுவையுடனும் தரத்துடனும் இன்னும் சர்பத் விற்கிறார்கள். விலை ரூபா 15. V.T.கந்தசாமி மாஸ்ரரிடம் டியூசன் எடுத்த காலத்தில் 50 சதத்துக்கு குடித்த நினைவு. சில நாட்களின் பின் 60 சதமாக விலை உயர்த்திய போது மிகவும் சுமையாக இருந்தது. ஆனால் இப்ப வெல்லாம் அந்த வளைந்த வளைந்த 10 சதக் குற்றியையும், சற்சதுரமான ஐந்து சதக் குற்றியையும் நீங்கள் காணமுடியாது. அவை தங்கள் கற்பை இழந்து கனநாட்களாகி விட்டன.

*******

யாழ்ப்பாண வீதிகளில் வாகனங்கள் ஓடுவதற்கு சாமர்த்தியம் வேண்டும். ஒரு சில்லை மண்கரையால் விட்டு.... பள்ளங்களுக்குத் தப்பி......வெட்டி வெட்டி.... மோட்டார் சைக்கிளில் இருக்கும் போது தான் இந்த அனுபவம் சுவையாக இருக்கும்.

வல்லைவெளி வீதி போன்ற சில வீதிகள் அப்படியே அசையாது இரு க்கின்றன. இராணுவத்தினால் உடைக்கப்பட்ட வல்லைப் பாலம் புலிகளால் பனைமரங்களை கொண்டு மிகவும் வலிதாகச் செப்பனிடப்பட்டுள்ளது.

வல்லைவெளி முழுவதும் மரச்செய்கை நிலமாக ஒதுக்கப்பட்டு மரங்கள் வரிசை வரிசையாக விடுதலைப் புலிகளால் நடப்பட்டுப் பராமரிக்க ப்படுகின்றன. அந்த உவர் நிலத்தில் இத் திட்டம் எவ்வளவு தூரம் வெற்றி யளிக்கும் என்பது பற்றிச் சொல்லமுடியாது.

அண்மையில் பூனகரித் தாக்குதல் பற்றிய நேர்முக செய்முறை வர்ணனை நிகழ்வு ஒன்று மிகப் பிரமாண்டமாக வல்லை வெளியில் விடுதலைப் புலிகளால் காண்பிக்க ப்பட்டுள்ளது. பலாலி இராணுவப் பயமேதும் இன்றி ஆயிரமாயிரமாக மக்கள் சென்று பார்வையிட்டுள்ளதாக அறிந்தேன். முகாம்கள், தாங்கிகள், இராணுவம், புலிவீரர்கள் போன்ற மாதிரிகள் செய்யப்பட்டு வைக்கப் பட்டிருந்ததாம். இதற்காகச் செய்யப்பட்ட யாழ்ப்பாணம் மன்னார் இத்தனை மைல்கள் என்று எழுதப்பட்ட மாதிரி மைல்கல் இன்னும் அழிக்கப்படாமல் அப்படியே இருக்கிறது.

*******

கார் யன்னலைக் கிழித்துக் கொண்டு வந்த வடலிக் காற்று என்னைப் பற்றி இருந்த பீதியை எல்லாம் அடித்துச் சென்றது.

நான்...... எனது மண்...... இனி மடிந்தாலும் பரவாயில்லை என்ற உணர்வே எனக்கு ஏற்பட்டது.

யாழ்ப்பாணத்தில் ஏற்படுகின்ற இந்த உணர்வு, வரும்போது திருகோ ணமலையில் ஏன் பறிபோய் விட்டிருந்தது.

சந்திக்குச் சந்தி சிங்கள இராணுவமும், எடுபிடிகளுமாய்....போக வர முறைத்துப் பார்த்தபடி......

அழைத்துச் சென்றால், அறிவிக்கவே ஆளில்லாத ஊரில் நான் அந்தரித்தேன்.

மனம் சொல்லிற்று. பேசாமல் கிளாலிக்குள்ளால் போயிருக்கலாம்..

********

நான் கப்பலில் சுவீடன் நாட்டைச் சேர்ந்த ஒரு பெண்மணியைச் சந்தித்தேன். சுவீடன் நாட்டிலுள்ள குழந்தைகள் அமைப்பொன்றின் பிரதிநிதியான பெண்மணியும் எங்களுடன் தனது யாழ் பயணத்தை மேற்கொண்டிருந்தார்.

சிறுவர் கல்வி சம்பந்தமான தளபாடம் மற்றும் வேண்டிய உபகரணங்களை வழங்குதல் போன்ற உதவிகளைத் தாம் சாவகச்சேரி போன்ற இடங்களில் தற்போது செய்து வருவதாகக் கூறினார்.

எமது மண்ணுக்கு எந்தவித சம்பந்தமும் இல்லாத ஒரு வெளிநாட்டுப் பெண் இவ்வளவு கடுமையான பயணத்தை மேற்கொண்டு ஷெல்லடிக்கு மத்தியில் சேவை செய்வது பற்றிக் கேட்டதற்கு,

"பழகி விட்டது. தனக்கு ஏதாவது நடந்தால் வேறு ஒருவர் இதை மேற்கொண்டு செல்வார்.."

"மனிதம்" என்கிறார்களே, இது தானா?

எம்மவர் யாராவது வெளிநாடுகளில் இவ்வாறு சேவை செய்வோம் என்பதை என்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லை.

மனிதம், மனிதம் என்று இங்கு எழுதப்பட்ட கவிதைகள் நிறைய வாசித்திருக்கிறேன். ஆனால் அதை எழுதியவர்களின் சொந்த வாழ்க்கையில் மனிதத்துக்குச் செய்த துரோகங்கள்.....?

மனிதமாம் மானிடமாம்.... பெண்மையாம் பெண்விடுதலையாம்.....
நடுத்தெருவில் நிற்குதடா ஐயோ பாவம்....

********

நெல்லியடிச் சந்தியில் 15 அடி உயரமான இரு உருவப் படங்கள் உள்ளன. ஒன்று, முதன் முதலாக மரணித்த விடுதலைப் புலி வீராங்கனை மாலதியினது. மற்றையது, செங்கதிர், கையில் புத்தகத்துடன். செங்கதிருக்குப் பின்னால் ஒரு பெரிய கதை இருப்பதாக சொல்லிக் கொண்டார்கள். தாழ்த்தப்பட்ட சமூகத்தினைச் சேர்ந்த இவர் சிறந்த கல்வி அறிவுடன் நல்ல மாக்சியவாதியாகவும் இருந்துள்ளார். விடுதலைப் புலிகள் இயக்கத்திலுள்ள தன் சமூகத்து இளைஞர்களைத் தனியாக அணிதிரட்ட முயன்றார் என்ற குற்றச்சாட்டும் இவர்மீது உள்ளது.

உலக மக்களை வியக்க வைத்த கரும்புலி மில்லரின் தாக்குதலுக்குள்ளான நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மண்டபம் இன்னமும் சிதைந்தபடி உள்ளது. அருகேயுள்ள வளவில் மில்லரின் உருவப்படம் காணப்படுகிறது.


மில்லரின் தாக்குதலுக்குள்ளான நெல்லியடி ம.மா.வி

# வீடு எடுத்தல்

*அண்மையில் விமானத் தாக்குதலினால் சிதறுண்டு கிடக்கும் கச்சேரியைத் தாண்டி கண்டி வீதி வழியாக வாகனம் ஓடிக் கொண்டிருக்கிறது. வீட்டை நோக்கி.*

*இந்த இடத்தில் விடுதலைப் புலிகளின் "வீடு எடுத்தல்" பற்றி பின்னால் அறிந்தவற்றை எழுதுவது பொருத்தமாக இருக்குமென நம்புகிறேன்.*

*யாழ்குடா நாட்டுக்குள் தீவுப்பகுதிகளில் மற்றும் கீரிமலை, காங்கேசன்துறை, இளவாலை, சேந்தாங்குளம், வசாவிளான், அளவெட்டியின் ஒரு பகுதி போன்ற இடங்களில் இராணுவம் நிலைகொண்டுள்ளது. இந்த இடங்களிலிருந்து மக்கள் ஏனைய பகுதிகளுக்கு இடம்பெயர்ந்துள்ளனர். மேலும் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் பெரும்பான்மையாக இணைந்துள்ள திருகோணமலை, மன்னார், மாவட்டத்தைச் சேர்ந்த பாதிப்படைந்த குடும்பங்களும் குடாநாட்டில் உள்ளனர். இவ்வாறு இராணுவ நகர்வு காரணமாக இடம்பெயர்ந்த மக்களுக்கு தங்குமிடம் கொடுக்க வேண்டிய தேவை விடுதலைப் புலிகளுக்கு உள்ளது. தவிர, பிள்ளைகளைப் போராட்டத்தில் இழந்ததனால் (இறந்ததனால்) ஆதரவு இன்றி கஷ்டப்படுகின்ற மாவீரர் குடும்பங்களையும், தற்போது போராடும் (ஆதரவற்ற) போராளிக் குடும்பங்களையும் ஆதரிக்க வேண்டிய கடமை விடுதலைப் புலிகளுக்கு இருக்கிறது.*

*இதன் காரணமாக புலம் பெயர்ந்தாரின் வீடுகளைப் பொறுப்பேற்று*

மேற்கூறப்பட்டவர்கள் வசிப்பதற்கு கொடுக்கிறார்கள். இதன் மூலம் பெறப்படும் வாடகைப் பணம் கடந்த தை மாதத்திலிருந்து இயக்கத்துக்குச் செல்கிறது. இந்தப் புலம்பெயர்ந்த வீட்டு உரிமையாளர்கள் நிரந்தரமாக திரும்பிச் செல்லும் பட்சத்தில் வீடு உரிமையாளர்களிடம் கையளிக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டுள்ளது. உறுதிகள் மற்றும் சோலைவரி கட்டிய பழைய மாநகர சபை ரசீதுகளைக் கொண்டும் வீட்டின் உரிமையாளர்களை இயக்கத்தினர் அறிந்து வைத்துள்ளனர்.

புலம் பெயர்ந்தவர்கள் என நான் குறிப்பிடப்படுபவர்களில் வேலை நிமித் தம் இலங்கைக்குள் பிற இடங்களுக்குக் குடும்பங்களுடன் இடம் பெயர்ந்தவர்ளும் அடங்குவர்.

உரிமையாளர்களின் பெற்றோர் தவிர்ந்த வேறு யார் இருந்தாலும் இந்த வாடகையைக் கொடுத்தே தீரவேண்டும். மேலும் இவ்வாறான ஒரு வீட்டை உரிமையாளர் விற்கலாம். வாங்குபவர் இருக்கும் பட்சத்தில் விடுதலைப் புலிகளின் "நிர்ணயிஸ்தர்கள்" வீட்டின் விலையைத் தீர்மானிக்க, அதன் 25 வீதத்தை விற்பவர் இயக்கத்துக்குக் கொடுக்க வேண்டும். (அதாவது 8 இலட்சம் வீடு என்றால் 2 இலட்சம் இயக்கத்துக்கு) இதனை புலம்பெயர்ந்த இடத்தில் வாழ்பவர்கள் அங்குள்ள ஒருவருக்கு **Power of Attorney** வழங்குவதன் மூலம் இங்கிருந்து விற்க முடியும்.

மேலும் புலம்பெயர்ந்தவர்களின் அசையாத சொத்துக்கான உறுதிகளில் மாற்றங்கள் செய்யப்படுவது தடை செய்யப்பட்டுள்ளது. ஆயினும் வழமை போல் அங்கு வசிக்கும் உரிமையாளர் உறுதியில் மாற்றம் செய்வது அனுமதிக்கப்படுகிறது. (உ—ம் —வீட்டை அங்கு வசிக்கும் பிள்ளைக்கு எழுத விரும்பினால் எழுதலாம்)

முன்பு பல முகாமிலிருந்தும் சென்று வீட்டைத் தரும்படி பலர் திரும்பத் திரும்ப கேட்டுத் தொல்லைப்படுத்தியதால் வெறுப்புநிலை தோன்றியதைத் தொடர்ந்து தற்போது ஒரு பெரும்பகுதிக்கு ஒருவரை பொறுப்பாக நியமித்துள்ளனர். அவர் வந்து கேட்டால் மட்டுமே பதில் சொல்ல வேண்டும்.

ஆயினும் புலம்பெயர்ந்தவர்களின் வீடுகளைக் கையளிக்காமல் பெற்றோரும் உறவினர்களும் பெரும் சிரமப்படுகிறார்கள். அவஸ்த்தைப்படுகிறார்கள் என்றே சொல்ல வேண்டும். அவர்களது ஆதங்கமும் புரியாமலில்லை.

சிறுகச் சிறுக கட்டிய வீடு என்பதற்கு அப்பால்—

ஒரு வதிவிடம் என்பதற்கும் அப்பால்—

ஒவ்வொரு கல்லும் குடும் பங்களின் ஆயிரமாயிரம் நினைவுகளை அல்லவா சுமந்து கொண்டிருக்கிறது.

வீடு—வாசல், கோயில்—குளம் என்றிருந்த எம்மவர்களுக்கு இது மிகவும் வேதனையான அனுபவமே.

*******

"திரும்ப வருவதற்கு விடுதலைப் புலிகளிடம் **pass** எடுக்க வேண்டும். அது பெரிய அலைச்சல். போன உடனே அந்த அலுவலைப் பார்" என்று

கொழும்பில் நண்பர்கள் சொல்லி வைத்ததால் வழியால் வந்த இரு பெண் பொலிசாரிடம் இதுபற்றிக் கேட்டேன். அவர்கள் சாம்பல் நிறத்தில் சேட்டும் கறுத்த நிற Pants உம் அணிந்திருந்தனர்.

30 நாளுக்கு மேல் தங்கினால் கோண்டாவிலிலுள்ள தலைமை யகத்திலும், 30 நாளுக்குள் என்றால் எனது ஊருக்கு கச்சேரியடியிலும், 15 நாளுக்குள் என்றால் அருச்சுனா வீதியிலும் வெளியேறுகிற **pass** எடுக்க வேண்டும் என்று சொன்னார்கள்.

அருச்சுனா வீதி எங்கிருக்கிறது என்று தலையைப் பிய்த்துக் கொண்டேன். எனது பழைய தெருக்கள் பற்றிய அறிவேட்டுப் பக்கங்களைத் திருப்பிய பொழுது அருச்சுனா வீதி அகப்படவே இல்லை. பலரிடம் கேட்டுப் பார்த்த போது அவர்களுக்கும் தெரிந்திருக்கவில்லை. **Station Road** ஐத் தான் அருச்சுனா வீதி எனப் பெயர் மாற்றி உள்ளனர் எனப் பின்னால் அறிந்து கொண்டேன்.


விமானத் தாக்குதலுக்குள்ளான யாழ். கச்சேரி

யாழ்ப்பாணத்து மூலை முடுக்குகளிலுள்ள எல்லா வீதி, ஒழுங்கைகளும் பெயர் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. போராட்டத்தில் இறந்தவர்கள் நினைவாக மஞ்சல்நிறத்தாலான பெயர்ப்பலகைகள் பழைய பெயர்ப்பலகைகளின் கீழே பொருத்தப்பட்டுள்ளன. ஆயினும் புதிய பெயர்கள் மக்களிடையே பெரிதாகப் பழக்கத்துக்கு வந்ததாகத் தெரிய வில்லை.

**Station** என்றதும் யாழ்ப்பாண Station நினைவுக்கு வருகிறது. அங்கு இப்போது இடம்பெயர்ந்த அகதிகள் தங்கியுள்ளனர். இப்போதுள்ள

சிறார்களுக்குப் புகையிரதத்தையும் தண்டவாளத்தையும் பாடசாலைச் சுற்றுலா மூலம் தான் காட்ட வேண்டும். அதுவும் கிளாலி கடந்தால் தான். இரும்புப் பாலங்களும் சிலிப்பர் கட்டைகளும் அற்ற மேடான நேரிய பாதையில் ஆளுயர த்துக்குச் செடி கொடிகள் வளர்ந்துள்ளன. புகையிரதம் வராது என்ற நம்பிக்கையில் ஆடுமாடுகள் சுதந்திரமாகத் திரிகின்றன.

********

**வீ**டு நிறையவே மாறிவிட்டிருந்தது.

அப்பாவின் நச்சரிப்புத் தாங்காமல் தண்ணீர் ஊற்றிய தென்னங் கன்றுகள் நெட்டுயர மரமாகிக் காய்க்கின்றன.

மாங்கன்றுகள், கிளைகள் வீட்டைத் தொடும்படி மரமாகிவிட்டன.

அன்னமுன்னா அழிந்து விட்டது.

விளாத்திக்கு வயது வந்து கொள்ளி வைத்தாயிற்று.

வேப்பமரம் புதுவீட்டின் கதவுகளாக மாறிவிட்டன.

முள்முருக்கும் பூவரசும் இன்றும் வளவின் எல்லைவீரர்களாக நிற்கின்றன.

கிணற்றில் பாசி அப்படியே இருக்கிறது.

சிவந்த கம்பளிப் பூச்சி இன்னமும் சாகவில்லை. கூடவே அட்டையும் தேளும் மண்புழுவும்.

சிறுவயதில் பந்து விளையாடிய பக்கத்து வளவு கூறுகளாக்கப்பட்டு வேலிகள் குறுக்கிடுகின்றன.

நிறைகுடமும், குத்துவிளக்கின் உருவமும் வரும்படியாக நான் வரைந்து கொடுக்க, உருவாக்கப்பட்ட எங்கள் வீட்டுப் படலை இன்னும் உறுதியாய்....

முன்சுவரில் பொருத்தப்பட்டிருக்கும் மின்சார மீற்றர் பெட்டி யின் வளையத்தின் இயக்கம் நின்று வருடங்கள் ஆகிவிட்டன.

எனதும், சகோதரர்களினதும் சிறு வயதுப் படங்கள் சுவரில் மாட்டியபடியே இருக்கின்றன.

ஏதோ பித்துப் பிடித்தவன் போல் மாறி மாறி அறைகளுக்குள் நடந்து திரிந்தேன்.

வளவுக்குள் போனேன்... கிணற்றடியைச் சுற்றினேன்...

கோடிப்பக்கம் போனேன்..... கிடுகுவேலித் தட்டியைத் தொட்டுப் பார்த்தேன்..

மண்ணிலே குந்தியிருந்தேன்.

எனது மண்.

********

**இ**து துயரப் பகுதி.

நான் வந்தது அறிந்து நிறையவே உறவினர் வந்தார்கள்.

வீட்டைச் சுற்றி எவ்வளவு நிகழ்வுகள்...?

எல்லாப் பிள்ளைகளையும் வெளிநாட்டுக்குப் பறிகொடுத்து விட்டுப் படுக்கையிலிருக்கும் என்ர அப்பா.....

E.P.R.L.F. இன் பயங்கரவாதத்துக்கு (87இல்) தன் கணவனைப் பலிகொடுத்து தன் மூன்று சிறுபிள்ளைகளைப் பராமரிக்கும் முன்வீட்டுப் பத்மா அக்கா.....

கண்டதும் கதறி அழுத மகனை இழந்த சௌந்தரம் Aunty--

வெளிநாடு சென்று விட்ட இரு பிள்ளைகளின் வீடுகளைத் தலையில் தூக்கித் திண்டாடும் மாமா.....

"காசு அனுப்ப வேணாம். கடிதமாவது போடச் சொல்லு தம்பி என்று பிள்ளைகளின் கடிதங்களை ஏங்கி நிற்கும் பெற்றோர்.

கிளாலிப் பயணம் காரணமாக கிளிநொச்சியில் வேலை செய்யும் தன் கணவனை ஒவ்வொரு வருஷப்பிறப்புக்கு மட்டுமே காணுகிற தங்கச்சி மாமி....

வானை இழந்து. சைக்கிளில் பிள்ளைகளைப் பாட சாலைக்கு மாறி மாறி ஏற்றி இறக்கி உழைக்கும் எனது நண்பன்...

வயது காரணமாக யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேற முடியாமல், வெளிநாட்டிலுள்ள தந்தையுடன் இணைய முடியாமல் தவிக்கும் நண்பனின் இரு பெண் பிள்ளைகள்.... இவ்வாறாக பல துயரங்கள்.

என் நிலையை சோலைக்கிளியின் கவிதைவரிகள் சிறப்பாக விளக்குமென நம்புகிறேன்.

**"அவர்களைக் கண்டதும் எனக்குள் இருந்த**
**குயில்கள் செத்தன.**
**அந்த -**
**இரண்டு கையிலும் தங்கள் முகங்களைத்**
**தூக்கி வந்தவர் துயரை,**
**அறிந்ததும் எனக்குள் ஆறுகள் வற்றின**
**மலை இடிந்து சரிந்தது.**
**உடம்பெல்லாம் வெந்து புழுத்தது**
**நான்,**
**நார் நாராய் கிழிந்து போனேன்..."**

******

**3.** மாலை ஆறுமணிக்கெல்லாம் கடைகள் பூட்டப்பட்டு நேரம் அஸ்தமித்துவிடுகிறது. இருளுக்கு முன்பாக இரவுச் சாப்பாட்டை உண்கிறார்கள். 8 மணியிலிருந்து 9 மணிவரை ஒலிபரப்பப்படும் புலிகளின் குரல் வானொலி நிகழ்ச்சியை சைக்கிள் டைனமோ, பழைய கார் பற்றரி கொண்டு கேட்கிறார்கள். அநேகமாக செய்திகள் ஒலிபரப்பப்படும் 8.30 மணிய ளவில் பெரும்பாலானோர் வானொலிப் பெட்டியை முடுக்குகிறார்கள்.

வாசிகசாலைகளில் சைக்கிள் சில்லை ஒருவர் சுழற்றி டைனமோவை இயக்க ஏனையோர் சுற்றியிருந்து **B.B.C.** செய்திகளைத் தவறாது கேட்கிறார்கள். பிரதான சந்திகளில் பழைய காலத்திலிருந்த எண்ணை லாம்புகள் லைற் போஸ்ட்டில் கட்டப்பட்டுள்ளன. ஆனால் யாரும் அதைக் கொழுத் துவதாகக் காணோம். வாழ்வு இருட்டில் நடக்கிறது.

சில சனசமூக நிலையங்கள் ஜெனரேற்றர் வாங்கியுள்ளமையால் நிலைய மண்டபத்தில் இரவு 7 மணியிலிருந்து 10.30 மணி வரை லைற் எரிகிறது. ஊர்ப்பிள்ளைகள் அங்கு வந்து தமது பாடங்களைப் படிக்கிறார்கள்.

அநேகமான இடங்களில் இந்த வசதியைக் காணமுடியவில்லை. நாங்களோ ஊர் ஊராக இங்கு வெட்டுப்பட்டுக் கொண்டிருக்கிறோம். இங்கு வாழும் ஒவ்வொரு ஊர் ஆட்களும் ஒன்று சேர்ந்து, பணம் சேர்த்து அந்தந்த ஊர் சனசமூகநிலையங்களுக்கு ஜெனரேற்றருக்குப் பணம் அனுப்பி வைத்தால் பிள்ளைகள் படிப்பதற்கு பேருதவியாக இருக்கும். இது இன்றைய அடிப்படைத் தேவையாக இருக்கிறது.

ஜெனரேற்றர் தடை செய்யப்பட்ட பொருள் என்பதால் பாதுகாப்பு அமைச்சிடம் அனுமதி பெறவேண்டும். இதனை இங்குள்ள **Red cross** போன்ற ஸ்தாபனங்களினூடாகவும், யாழ் அரசாங்க அதிபர் ஊடாகவும் பெற்றுக் கொள்ளக் கூடிய சாத்தியங்கள் உண்டு.

******

அதிகாலை ஐந்து மணிக்கு ஊர்க் கோவிலின் பூசைக்கான ஆயத்த மணி அடிக்கிறது. அதையும் மீறி நல்லூர்க் கந்தனின் "டாங்கு...... டாங்கு..' என்ற மணியின் நாதம் என் நரம்புகளை அதிரச் செய்தன. எத்தனை நாள் ஆகிவிட்டது கேட்டு.

மனிதர்களின் வாழ்வு நடப்பது போல் இன்னும் சேவல் கூவுகிறது.

ஓயாமல் காரின் இரைச்சலையே கேட்டுப் பழகிப் போன எனக்கு இவை சுகந்தத்தைத் தந்தன.

மாசிப் பனிக்குள்ளும் ஆறு மணிக்கெல்லாம் யாழ்நகர வீதிகள் அமர்க்களமாகிவிடுகின்றன.

"நான் இன்று **pass** எடுக்கப் போகவேணும்."

எனது ஒன்றுவிட்ட சகோதரியின் சைக்கிள் ஒன்று வசதியாக

நல்லூர்க்கந்தசாமி கோவில்



அகப்பட்டது. பிறகென்ன, மிதியல் தான்.

"சயிக்கிள்" தான் அங்கு இப்போதைய தேசிய வாகனம். யாழ்ப்பாணத்தில் தற்போது சயிக்கிள் 7000 ரூபா வரை விற்கிறது. வெளியிடங்களில் 4000 ரூபாய். இதனால் கப்பலில் வரும் போது IOC இன் அனுமதி பெற்று புதிய சைக்கிள்களை சிலர் கொண்டு வந்தனர்.

பருத்தித்துறையிலிருந்தும் சரி, கொடிகாமத்திலிருந்தும் சரி வேலைக்கு அல்லது பல்கலைக்கழகத்துக்கு, பள்ளி க்கூடத்துக்கு எல்லாம் சயிக்கிளில் தான் பயணம் நடக்கிறது.

இதனால் சந்திக்குச் சந்தி சயிக்கிள் கடை திறந்துள்ளார்கள்.

நல்ல உழைப்பு.

வழமைபோல் டியூப்பை சொலிக்கனம் போட்டு ஒட்டிப் பின் மேலே இரும்பொன்றை வைத்து இரும்பைச் சூடாக்கி ஒட்டைப் பலப்படுத்தும் முறை புதிதாக இருந்தது.

முன்பெல்லாம் சயிக்கிளின் பின்னாலுள்ள கரியரில் பலமான ஆள் ஏற balance பண்ண முடியாமல் நாங்கள் வேலிக்குள் விழுந்த சம்பவங்கள் உண்டு. ஆனால் இப்பவெல்லாம் பெண்கள் பின் கரியரில் தாய்மார்களை வைத்து அசை யாமல் நீண்ட தூரம் உழக்கித் தள்ளுகிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் விறகு சரியானவிலை. இதனால் பளைக்குச் சென்று 100 ரூபாவுக்கு விறகை வாங்கி சயிக்கிளில் கொண்டு வந்து யாழ்ப் பாணத்தில் 300ரூபாவுக்கு விற்கிறார்கள். பலர் அதைத் தினமும் தொழிலாகச் செய் கிறார்கள். விறகுக் கட்டு தலைக்கு மேல் 3 அடி உயரம் வரை இருக்கும் பின் கரியரில் தடிகளைப் பலமாக இணைத்து பெரிய பாரங்களை கட்டுகிறார்கள். இவர்கள்

சாதாரணமாக குடாநாட்டு வாசிகளுக்குப் படிவம் கையளிக்கப்பட்டு ஏழு நாட்களின் பின்னரே **pass** ஐப் பெற்றுக் கொள்ள வருமாறு சொல் கிறார்கள்.

இலண்டனிலிருந்து வந்த நண்பன் சொன்னான். "என்னடாப்பா.... என்ர சொந்த வீட்டை வாறதற்கும் **pass** , என்ர வீட்டை விட்டுப் போறதற்கும் **pass** ஆம்.."

"இவங்கள் இல்லாட்டி, ஒருவேளை நீ உன்ர வீட்டுக்கே வந்திருக்க முடியாது" என்று நான் சொன்ன போது அதை அவன் ஒப்புக் கொண்டான்.

மண்ணின் பாதுகாவலர்களிடம் போக, வர அனுமதி பெறுவதில் எனக்கு எந்தவித மன உளைவும் ஏற்படவில்லை. "போராட்ட காலம்" என்பது எனக்கு மட்டும் விதிவிலக்காகுமா, என்ன?

*******

இயக்கத்தினர் என்னிடம் காசு வாங்கவில்லை என்று ஊரில் சொன்ன போது,

சிலர் இப்ப அவர்கள் வாங்குவதில்லைத் தான் என்கிறார்கள்.

சிலர் வியப்படைந்தார்கள்.

சிலர் ஒரு சதமும் கேட்கவில்லையா என்று திரும்பக் கேட்டார்கள்.

இதே போல் தான் லண்டன் நண்பனையும் கேட்டார்களாம்.

ஆனால் புலிகள் காசு இப்ப வாங்குவதில்லை என்று இங்கு (கனடாவில்) சொன்ன போது,

சிலர் நம்ப மறுத்தார்கள்— இவர்கள் நேரில் போய் வந்தால் ஒழிய நம்ப மாட்டார்கள். இவர்கள் கண்மூடித்தனமான புலி எதிர்ப்பாளர்கள். நம்ப மறுப்பது இவர்களுக்குச் சந்தோஷத்தைத் தரும்.

என்னிடமும் நண்பனிடமும் படிவக் காசு 100 ரூபா தவிர எந்தவித காசும் விடுதலைப் புலிகள் வாங்கவில்லை என்பது தான் சத்தியம்.

மற்றும்படி, படிவத்தில் பிழையான விபரங்கள் கொடுத்து மாட்டிக் கொண்டால் எல்லாமே கரைச்சல் தான்.

*******

யாழ்ப்பாணத்தில் இந்த **pass** விஷயம் அநேகமாக **passport** விஷயத்தைப் போன்றதே.

குடாநாட்டில் வசிக்கும் 10 வயது தொடக்கம் 24 வயது வரையிலான ஆண் பெண் எவரும் குடாநாட்டை விட்டு வெளியேற தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதில் வவுனியா, கொழும்பு, பேராதனை, மட்டக்களப்பு பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் திருமணம் நிச்சயிக்கப்பட்டவர்களும், இருபகுதிப் பெற்றாரினதும் சம்மதக் கடிதங்களைப் பெற்றுக் கொண்டு வெளியேற அனுமதிக்கப்படுகின்றனர். பின்னர், திருமண அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி அவர்களுக்கையளி

க்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையும் இருக்கிறது.

மேற்கொண்டு சிகிச்சை பெறுவதற்காக, சுகயீனமுற்றவர்களும்.....

வேலை இடமாற்றம் காரணமாக பிற இடங்களுக்கு செல்ல வேண்டியவர்களும் —

இவ்வாறகப் பல விதிவிலக்குகள் உள்ளன. தவிர செல்வாக்குப் பாவித்து வருபவர்களும் உண்டு.

மேலும் மாவீரர் குடும்ப போராளிகள் அங்கத்தவர்கள் விருப்பப்படி போய் வரலாம். இவர்கள் கிளாலியில் வள்ளம் ஏறும் போது டிக்கற் வாங்க வேண்டிய அவசியமோ, வரிசையில் வரவேண்டிய அவசியமோ இல்லை. இவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. இவர்கள் ஏறிய பின் தான் ஏனையோர் ஏறவேண்டும்.

மேலும் தாண்டிக்குளத்திலுள்ள புலிகளும் இராணுவமும் அற்ற சூனியப் பிரதேசத்தில் பாதி வரை சைக்கிளில் கொண்டு சென்று விட்டு உழைப்பவர்களும் மாவீரர், போராளி குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தான் என்ப தையும் அறிந்து கொண்டேன்.

தம் பிள்ளைகளை, சகோதரங்களை எமது மண்ணுக்காக அர்ப்பணிப்புச் செய்த அந்த தெய்வப் பிறவிகளுக்கு வழங்கப்படும் இந்த முன்னுரிமைகளை அனைவரும் எந்தவித வெறுப்புமின்றி ஏற்றுக் கொள்வதையும் உணர முடிந்தது — காண முடிந்தது.

*******

மரண பயத்தையும் மீறி, ஆள்மாறாட்டம் செய்து தடை விதிக்கப்பட்ட வயதுடைய பிள்ளைகளை வவுனியாவுக்குக் கூட்டி வருகிற ஏஜென்சிமாரும் இரகசியமாகச் செயல்படுகின்றனர். இதற்குரிய பணம் சில வேளை ஆளுக்கு இலட்சம் வரை போகிறது. ஆனால் இந்த ஆட்கடத்தல் விஷயங்கள் பிடிபட்டு இப்போது மிகவும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

வியாபாரிகளும் சுறுசுறுப்பாக இயங்கி நிறையவே சம்பாதிக்கிறார்கள். கிளாலிப் பயமேதும் இன்றி வவுனியா வரை வந்து நியாயமான சாமான்களை வாங்கி குடாநாட்டுக்குள் கொண்டு வந்து சேர்க்கின்றனர்.

உதாரணமாக 21 ரூபா விற்கிற **kandos** சொக்கலேற் யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வரப்பட்டு 120 ரூபாவிற்கு விற்கப்படுகிறது. கிளாலியில் இடைத் தரகர்களும் செயற்படுகிறார்கள்.

இவற்றையெல்லாம் பார்க்கும் போது ஏதோ இரு நாடுகளுக்கிடையில் நடைபெறும் சம்பவங்கள் போலுள்ளன.

*******

திட்டமிடல் பணிப்பாளர் அலுவலகத்தில் கடமையாற்றும் நண்பர் ஒருவரைச் சந்தித்து உரையாடிய போது யாழ்ப்பாண உணவுப் பொருட்களின் விபரங்கள் பற்றிய செய்திகளை அறிய முடிந்தது. யாழ் அரச அதிபர் மாணிக்கவாசகர் அவர்கள் உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள அரசுடன்

சாதாரணமாக குடாநாட்டு வாசிகளுக்குப் படிவம் கையளிக்கப்பட்டு ஏழு நாட்களின் பின்னரே **pass** ஐப் பெற்றுக் கொள்ள வருமாறு சொல் கிறார்கள்.

இலண்டனிலிருந்து வந்த நண்பன் சொன்னான். "என்னடாப்பா.... என்ர சொந்த வீட்டை வாறதற்கும் **pass** , என்ர வீட்டை விட்டுப் போறதற்கும் **pass** ஆம்.."

"இவங்கள் இல்லாட்டி, ஒருவேளை நீ உன்ர வீட்டுக்கே வந்திருக்க முடியாது" என்று நான் சொன்ன போது அதை அவன் ஒப்புக் கொண்டான்.

மண்ணின் பாதுகாவலர்களிடம் போக, வர அனுமதி பெறுவதில் எனக்கு எந்தவித மன உளைவும் ஏற்படவில்லை. "போராட்ட காலம்" என்பது எனக்கு மட்டும் விதிவிலக்காகுமா, என்ன?

*******

இயக்கத்தினர் என்னிடம் காசு வாங்கவில்லை என்று ஊரில் சொன்ன போது,

சிலர் இப்ப அவர்கள் வாங்குவதில்லைத் தான் என்கிறார்கள்.

சிலர் வியப்படைந்தார்கள்.

சிலர் ஒரு சதமும் கேட்கவில்லையா என்று திரும்பக் கேட்டார்கள்.

இதே போல் தான் லண்டன் நண்பனையும் கேட்டார்களாம்.

ஆனால் புலிகள் காசு இப்ப வாங்குவதில்லை என்று இங்கு (கனடாவில்) சொன்ன போது,

சிலர் நம்ப மறுத்தார்கள்— இவர்கள் நேரில் போய் வந்தால் ஒழிய நம்ப மாட்டார்கள். இவர்கள் கண்மூடித்தனமான புலி எதிர்ப்பாளர்கள். நம்ப மறுப்பது இவர்களுக்குச் சந்தோஷத்தைத் தரும்.

என்னிடமும் நண்பனிடமும் படிவக் காசு 100 ரூபா தவிர எந்தவித காசும் விடுதலைப் புலிகள் வாங்கவில்லை என்பது தான் சத்தியம்.

மற்றும்படி, படிவத்தில் பிழையான விபரங்கள் கொடுத்து மாட்டிக் கொண்டால் எல்லாமே கரைச்சல் தான்.

*******

யாழ்ப்பாணத்தில் இந்த **pass** விஷயம் அநேகமாக **passport** விஷயத்தைப் போன்றதே.

குடாநாட்டில் வசிக்கும் 10 வயது தொடக்கம் 24 வயது வரையிலான ஆண் பெண் எவரும் குடாநாட்டை விட்டு வெளியேற தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதில் வவுனியா, கொழும்பு, பேராதனை, மட்டக்களப்பு பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் திருமணம் நிச்சயிக்கப்பட்டவர்களும், இருபகுதிப் பெற்றாரினதும் சம்மதக் கடிதங்களைப் பெற்றுக் கொண்டு வெளியேற அனுமதிக்கப்படுகின்றனர். பின்னர், திருமண அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி அவர்களுக்கையளி

க்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையும் இருக்கிறது.

மேற்கொண்டு சிகிச்சை பெறுவதற்காக, சுகயீனமுற்றவர்களும்....

வேலை இடமாற்றம் காரணமாக பிற இடங்களுக்கு செல்ல வேண்டியவர்களும் —

இவ்வாறகப் பல விதிவிலக்குகள் உள்ளன. தவிர செல்வாக்குப் பாவித்து வருபவர்களும் உண்டு.

மேலும் மாவீரர் குடும்ப போராளிகள் அங்கத்தவர்கள் விருப்பப்படி போய் வரலாம். இவர்கள் கிளாலியில் வள்ளம் ஏறும் போது டிக்கற் வாங்க வேண்டிய அவசியமோ, வரிசையில் வரவேண்டிய அவசியமோ இல்லை. இவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. இவர்கள் ஏறிய பின் தான் ஏனையோர் ஏறவேண்டும்.

மேலும் தாண்டிக்குளத்திலுள்ள புலிகளும் இராணுவமும் அற்ற சூனியப் பிரதேசத்தில் பாதி வரை சைக்கிளில் கொண்டு சென்று விட்டு உழைப்பவர்களும் மாவீரர், போராளி குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தான் என்ப தையும் அறிந்து கொண்டேன்.

தம் பிள்ளைகளை, சகோதரங்களை எமது மண்ணுக்காக அர்ப்பணிப்புச் செய்த அந்த தெய்வப் பிறவிகளுக்கு வழங்கப்படும் இந்த முன்னுரிமைகளை அனைவரும் எந்தவித வெறுப்புமின்றி ஏற்றுக் கொள்வதையும் உணர முடிந்தது — காண முடிந்தது.

*******

மரண பயத்தையும் மீறி, ஆள்மாறாட்டம் செய்து தடை விதிக்கப்பட்ட வயதுடைய பிள்ளைகளை வவுனியாவுக்குக் கூட்டி வருகிற ஏஜென்சிமாரும் இரகசியமாகச் செயல்படுகின்றனர். இதற்குரிய பணம் சில வேளை ஆளுக்கு இலட்சம் வரை போகிறது. ஆனால் இந்த ஆட்கடத்தல் விஷயங்கள் பிடிபட்டு இப்போது மிகவும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

வியாபாரிகளும் சுறுசுறுப்பாக இயங்கி நிறையவே சம்பாதிக்கிறார்கள். கிளாலிப் பயமேதும் இன்றி வவுனியா வரை வந்து நியாயமான சாமான்களை வாங்கி குடாநாட்டுக்குள் கொண்டு வந்து சேர்க்கின்றனர்.

உதாரணமாக 21 ரூபா விற்கிற **kandos** சொக்கலேற் யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வரப்பட்டு 120 ரூபாவிற்கு விற்கப்படுகிறது. கிளாலியில் இடைத் தரகர்களும் செயற்படுகிறார்கள்.

இவற்றையெல்லாம் பார்க்கும் போது ஏதோ இரு நாடுகளுக்கிடையில் நடைபெறும் சம்பவங்கள் போலுள்ளன.

*******

திட்டமிடல் பணிப்பாளர் அலுவலகத்தில் கடமையாற்றும் நண்பர் ஒருவரைச் சந்தித்து உரையாடிய போது யாழ்ப்பாண உணவுப் பொருட்களின் விபரங்கள் பற்றிய செய்திகளை அறிய முடிந்தது. யாழ் அரச அதிபர் மாணிக்கவாசகர் அவர்கள் உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள அரசுடன்

படாதபாடுபடுகிறார். அடிக்கடி கொழும்பு செல்லவேண்டிய (கடல் பயணம்) நிர்ப்பந்தங்கள் ஏற்படுகின்றன.

நான் நின்ற நாட்களில் சீனிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டு 30 ரூபா விற்கிற சீனி 60 ரூபாவாக விற்கப்பட்டது. கப்பல் வருகின்றதென அறிந்ததும் விலை 56 ரூபா 50 ரூபா என்று குறைந்து வந்தது. இவ்வாறான விலை உயர்வையும் பதுக்கல்களையும் விடுதலைப்புலிகள் ஏன் கட்டுப்படுத்தாமலிருக்கின்றார்கள் என்பது எனக்கு புரியவில்லை.

மா கொண்டு வர கப்பல் செலவுகளைப் பொறுப்பேற்குமாறு அரசாங்கம் இவர்களைப் பணித்ததால் மா, பாணின் விலையை உயர்த்த வேண்டிய நிலை ஏற்பட்டது. அரசாங்கத்தின் மனமாற்றம் காரணமாக இந்நிலை நீக்கப்பட்டதாகப் பின்னர் அறிந்து கொண்டேன்.

இவர்கள் கொழும்புக்குப் போய் வரும் போது தான் யாழ்ப்பாணத்துக்கான தபால்களையும் கொண்டு வருகிறார்கள். UNHCR நிறுவனம் இவர்களுக்கு மிகவும் உதவியாக செயல்படுகிறது.

கப்பல் வருகிறது என அறிந்ததும் கடிதம் வருமென எதிர்பார்த்து மக்கள் நிற்பதைக் காணமுடிந்தது. கடிதங்கள் தான் அங்கு வாழும் மக்களுக்கு மகிழ்ச்சி தரும் விஷயமாக இருக்கிறது. மனம் விட்டுக் கதைப்பதற்கு ஒரு ஊடகமாக உள்ளது. இங்கிருக்கும் நாங்கள் அவர்களைப் பற்றிக் கவலைப்படுவதை விட வெளி நாட்டிலிருக்கும் தங்கள் பிள்ளைகள் பற்றி அவர்கள் அதிகம் கவலைப்படுகிறார்கள். கடிதம் வராதா என்று ஏங்குகிறார்கள். வந்த ஒரு கடிதத்தையும் திரும்பத் திரும்ப வாசிக்கிறார்கள். இது தான் இன்றைய பெற்றாரின் மனோநிலை.

நான் வரும்போது எனது bag இன் அரை வாசிக்குக் கடிதங்கள் கொண்டு வந்தேன். 113 கடிதங்களை கொழும்பிலும் 45 கடிதங்களை இங்கும் நான் தபாலில் சேர்த்தேன். இவ்வாறே கொழும்புக்கு வருகிற அனைவரும் நிறையவே தபால்களைச் சுமந்து வருகிறார்கள். இவ்வாறான உதவி செய்கிற மனப் பான்மை தற்போது மக்களிடம் சற்று அதிகமாகவே காணப்படுகிறது.

******

## நெஞ்சை நெகிழ வைத்த சம்பவம்

திட்டப் பணிப்பாளர் அலுவலகத்தில் கடமையாற்றிய அந்த நண்பருடன் கதைத்துக் கொண்டிருந்த போது தான் எனது மனதை நெகிழ வைத்த சம்பவம் நிகழ்ந்தது.

அலுவலகத்துக்கு இரு சிறுமிகள் வந்தார்கள். வந்த பெரிய சிறுமிக்குப் பத்து வயதும் சிறிதாக இருந்த மற்றச் சிறுமிக்கு எட்டு வயதும் இருக்கும் என நினைக்கிறேன்.

நேராக மேசை முன்பாக வந்து நின்று கொண்டு பெரியவள் கேட்டாள் அலுவலரிடம்,

"எப்படி இருக்கிறீர்கள்..."

"சுகமாக இருக்கிறன்.."

"சீனி இல்லாமல் போகும் என்று கதைக்கினம். எங்களுக்குத் தேை—வயாய் இருக்கு."

கொஞ்சம் **stock** இல இருக்கு . தரலாம்.."

பிறகு சின்னவள் சொன்னாள்

"நீங்கள் துண்டு தந்து கடைசியாய் வாங்கின பென்சில் சரியில்லை. கூர் உடையுது. எண்டு சொல்லினம்.— — — நல்ல பென்சிலுக்கு துண்டு எழுதித் தாங்கோ...."

அவர்கள் போனதும் ஆச்சரியத்துடன் யார் இவர்கள் என்று நண்பரிடம் கேட்டேன்.

அவர்கள் அருகில் இருக்கும் அநாதை இல்லத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்கள் தான் பிள்ளைகளின் தலைவிமார் **(Monitors)** என்றும் சொன்னபோது நான் அதிர்ந்து போனேன்.

இந்தச் சின்னப் பிள்ளைகளுக்கு இவ்வளவு பொறுப்புணர்வு எப்படி வந்தது?

என் கண்கள் உண்மையில் அன்று கலங்கின.

இங்கு என் மகள் வீணாக்கும் கலர் கலரான பென்சில்களின் எண் ணிக்கையை மனம் எண்ணிக் கொண்டது.

இந்தச் சின்னஞ் சிறு பிள்ளைகளை இந்நிலைக்கு ஆளா க்கிய ஆண்டவனை நொந்து கொண்டேன்.

இந்தச் சனியன் பிடிச்ச சண்டை நிற்காதா?

*******

**யா**ழ். வைத்தியசாலை யின் சுற்று மதில்கள் முழுவதும் வெள்ளைப் பூச்சிடப்பட்டு செஞ்சிலுவைக் குறிகள் இடப்பட்டுள்ளன.

வைத்தியசாலை நோயாளிகளால் நிரம்பி வழிகிறது. சில வார்டுகளில் இரட்டைக் கட்டில் **(double bed)** போடப்பட்டு மேலும், கீழும் நோயாளிகள் படு க்கிறார்கள்.

ஜெனரேற்றர் கொண்டு முக்கிய உபகரணங்களை இயக்குகிறார்கள். மருந்துப் பற்றாக்குறை பெரும் பிரச்சினையாக இருக்கிறது. மட்டுப்ப டுத்தப்பட்ட உபகரணங்களுடன் வெற்றிகரமாக சத்திரசிகிச்சை செய்கிறார்கள் என்பதை அறிந்து கொண்டேன். நாலு சத்திரசிகிச்சை நிபுணர்கள் தற்போது கடமையாற்றுகிறார்கள்.


இரவு பகல் பாராது மக்களோடு மக்களாக நின்று சேவை புரியும் டாக்டர் சிவக்குமார் அவர்கள் மக்களுக்குத் தெய்வமாக விளங்குகிறார்.

*******

## பூநகரிச் சமர்

விடுதலைப் புலிகளால் வெற் றிகரமாகத் தாக்கி அழிக்கப்பட்ட பூநகரி இராணுவ முகாம் மீதான தாக்குதலின் போது எடுக்கப்பட்ட படம் ஸ்ரீதர் திரையில் கிழமை நாட்களில் 4 மணி, 6மணிக் காட்சிகளாகவும் சனி

மாவீரர் துயில் கொள்ளும் மயானம்



*ஞாயிறுகளில் 10மணி, 2 மணி மேலதிகக் காட்சிகளாகவும் காண்பிக்கப்படுகிறது. அனுமதிக் கட்டணம் 10 ரூபா.*

*தாக்குதல் திட்டத்தைப் பொட்டம்மான் விபரிப்பது —*

*விமானத் தாக்குதலில் இருந்து தப்புவதற்காக அனைவரும் இராணு வத்தின் சீருடையுடன் முகாமுக்குள் உட்புகுந்து கொண்டு தாக்குவது காயப்பட்ட, இறந்த வீரர்களைத் தூக்கி வருவது —*

*போன்றவற்றை எல்லாம் படம் பிடித்துள்ளார்கள்.*

*******

## நிழல் அமைப்பு

*விடுதலைப் புலிகளின் இந்த அமைப்பானது நிர்வாக இயந்திரங்களில் காணப்படும் சீர்கேடுகளைக் களைவதற்கு சுறுசுறுப்பாக இயங்கிவருகிறது. இந்த அமைப்பில் திறமைசாலிகளான* **Accountants, Auditor** *மற்றும்* **Economist** *கடமைபுரிகின்றனர்.*

*நிழல் அமைப்பினர் தமது கட்டுப்பாட்டிலுள்ள ஒவ்வொரு அலுவ லகத்திலும் (அநேகமாக அரச அலுவலகங்கள்) நடைபெறும் கணக்கு வழக்குகளை சரிபிழை பார்த்து அதில் ஏதும் பிழை இருப்பின் சம்பந்த ப்பட்டவர்களை விசாரணைக்காக அழைத்துச் செல்கிறார்கள். கடந்த ஐந்து வருடங்களுக்குரிய கணக்குப் புத்தகங்களை டிராக்டரில் ஏற்றிக் கொண்டு சென்று* **Audit** *பண்ணி ஒரு கிழமைக்குள் அப்புத்தகங்களை மீளக்கைய*

ளிக்கிறார்கள்.

இவ்வளவு காலமும் சும்மா போய் கையெழுத்துப் போட்டுவிட்டு வந்த அரச உத்தியோகத்தர்கள் இப்பொழுதெல்லாம் வேலை செய்ய வேண்டும். உதாரணமாக கமத்தொழில் திணைக்களம் போன்றவற்றில் கடமைபுரிபவர்கள் முழுநேரமாக வேலை செய்கிறார்கள் . சீமேந்து தொழிற்சாலை மற்றும் புகையிரத ஊழியர்கள் போன்றவர்கள் மட்டும் வேலையின்றி அலுவலகத்துக்குப் போய்வருகிறார்கள்.

பரந்தன் உப்புத் தொழிற்சாலையில் தொழில் புரிந்தோர் இப்போது யாழ்ப்பாணத்தில் இயங்குகிறார்கள். செயற்கை முறையிலான உப்பளங்கள் அமைத்துப் போதிய உப்பை விளைவிக்கிறார்கள்.

இந்த நிழல் அமைப்பினர் பாடசாலை நிர்வாகங்களில் கூடிய கவனம் செலுத்துகிறார்கள். ஆசிரியர்கள் நேரம் தவறாது (8மணிக்கு முதல்) பாடசாலைக்குச் சமூகமளிக்க வேண்டும் என்றும் பாடங்களில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும் என்ற நிழல் அமைப்பினரின் சுற்றுநிருபம் சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

இதன் காரணமாக 8 மணிக்குச் சிறிது முன்பாக ஆசிரியர்கள் அதிவேகமாக சைக்கிள்களில் பாடசாலை நோக்கிச் செல்வதை என்னால் அவதானிக்க முடிந்தது. மேலும் முன்பு போல் பாடசாலை நேரங்களில் வீட்டு அலுவல்கள் எதுவும் செய்ய முடியாது. பாடசாலைகள் 8 மணி முதல் 2 மணிவரை நடைபெறுகிறது.

கல்வியை விட போராட்டமே முக்கியம் என்ற முன்னைய நிலைப்பாடு தற்போது முற்றாக மாறியுள்ளது. சென்ற வருடம் நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் இலங்கை முழுவதிலும் அதியுயர் சித்திகள் பெற்ற முதல் நால்வரில் இருவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது வகுப்புக்களை ஆண்டு 11, ஆண்டு 3 என்றே அழைக்கிறார்கள். அது எமது பழைய முறைப்படி **Grade 10, Grade 2** என்பதைக் குறிக்கும். மேலும் பாடசாலைகளில் **Gymnastic** ஒரு பாடமாகப் பயிற்றுவிக்கப்படுகிறது. நான் நின்றபோது ஸ்ரான்லி கல்லூரியில் இடம்பெற்ற பாடசாலைகளுக்கான **Gymnastic** போட்டிகளில் பெண்கள் பிரிவில் வேம்படி மகளிர் கல்லூரியினர் முதல் இடத்தைப் பெற்றனர். ஒரு சாகச நிகழ்ச்சியைப் பார்ப்பது போல் இருந்தது.

இந்த நிழல் அமைப்பினர் பொதுசன அமைப்புக்களிலும் தற்போது ஈடுபாடு காட்டி வருகிறார்கள். கலை விழாக்கள் நடாத்துவதற்கு இவர்களிடமே அனுமதி பெற வேண்டும். குறிப்பாக நாடகம் என்றால் போராட்டம் பற்றியதாக அல்லது பழைய தமிழ் மன்னர்கள் பற்றி, சமூக மாற்றம் பற்றி இருக்க வேண்டும் என வலியுறுத்துகின்றனர்.

********

## மாத்தையா விவகாரம்

இங்கு பத்திரிகைகளில் பரபரப்பாக வெளியிடப்பட்ட மாத்தையா

விவகாரம் பற்றி அங்குள்ள மக்களிடத்தே எந்தவித பிரதிபலிப்புக்களையும் அவதானிக்க முடியவில்லை. இதற்கு விடுதலைப் புலிகளைப் பற்றி விமர்சிப்பதற்கு மக்கள் பயப்படுவது முக்கிய காரணமாக இருக்கலாம் என நினைக்கிறேன்.

மனம் விட்டுப் பேசியவர்கள் அநேகமாக புலிகளின் ஆதரவாளர்களாக இருந்ததால் மாத்தையாவுக்கு எதிரான கருத்துக்களையே அறியமுடிந்தது. இங்கு கேள்விப்படாத பல குற்றச்சாட்டுக்களை அவர்கள் சொல்லக் கேட்டேன். உதாரணமாக முஸ்லிம்களை வெளியேற்றியது, தாண்டிக் குளத்தில் மக்களோடு மக்களாகச் சென்று Plote உறுப்பினர்களை சுட்டது. போன்வற்றைச் சொல்லலாம். இவற்றை இயக்கம் சொல்லவில்லை என்பதால் சனம் சும்மா கதைக்கிறது என எண்ண வாய்ப்பு உண்டு.

ஒன்றை மட்டும் அங்கு உறுதியாக அறிய முடிந்தது. அதாவது. என்ன தான் வீடு எடுத்தாலும் அல்லது தனிப்பட்ட முறையில் இயக்கத்தால் பாதிப்பு ஏற்பட்டாலும் தலைவர் பிரபாகரன் மீது அளவுகடந்த நம்பிக்கையும் மரியாதையும் கொண்டுள்ளனர் மக்கள். ஒரு சிறு தவறு நிகழ்ந்தால் கூட மேலே அறிவித்தால் எல்லாம் சரியாகும் என்கி றார்கள். மக்களின் குறைபாடுகளைத் தாங்கி வரும் கடிதங்களைப் படித்து மேற் கொண்டு உடனடி நடவடிக்கைகளை தலைவர் பிரபாகரன் மேற்கொள்வதையும் தெரிந்து கொண்டேன்.

ஆகவே மாத்தையாவுக்கு ஏற்பட்ட நிலையைப் இந்த நிகழ்வு பின்னால் பொட்டம்மானுக்கு ஏற்பட்டாலும் கூட இன்றையப் போலவே மக்கள் பெரிதாக ஒன் றும் அலட்டிக் கொள்ளப் போவதில்லை. இதுதான் இன்றை யதார்த்த நிலை.

மாத்தையாவை நக்கீரன் பேட்டி கண்டது புத்திசாலித்தனமான கற்பனை.

*******

## கிட்டு நினைவாக கோட்டை

வீரமரணம் அடைந்தும் இன்றும் கதாநாயகனாக மக்கள் நினைவு களில் வாழ்ந்துவருகிறார் தளபதி கிட்டு.

கிட்டு நினைவாக கருங்கற்களினாலான ஒரு மாபெரும் கோட்டை ஒன்று நல்லூர் முத்திரைச் சந்தி அருகே அமைக்கப்பட்டு வருகிறது. சங்கிலியன் சிலையை உள்ளடக்கி, முன்னால் இருந்த காணியுள் இந்த அழகான கோட்டை கட்டப்படுகிறது.

இரு தளங்களைக் கொண்ட இந்தக் கோட்டையின் மேற்தளத்துக்குச் செல்ல படிகள் மிக நேர்த்தியாக அமைக்கப்பட்டுள்ளன. படிகள் வளைந்து வளை ந்து செல்கின்றன. படிகளுக்கு அருகே புற்கள் வளர்ப்பதற்காக தற்போது செம் மண் பரவப்பட்டுள்ளது. மேற்தளத்தில் அகன்ற வாசல் உள்ளது. உள்ளே கிட்டுவின் சிலை அல்லது படம் வைக்கப்படக்கூடும்.

கீழ் தளம் இரு வளைவான வாசல்களைக் கொண்டிருக்கிறது. மூன்று யன்னல்கள் உள்ளன. உள்ளே செல்வதற்கு அவர்கள் என்னை

அனுமதிக்கவில்லை. கருங்கல்லால் குகை வடிவில் ஆக்கப்பட்டுவரும் கிட்டு நினைவுக் கோட்டையைச் சுற்றியுள்ள விசாலமான பிரதேசத்தில் அழகான பூந்தோட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு வருகிறது.

சரித்திரப் பிரசித்தி பெற்ற சங்கிலியன் தோப்பிலிருந்து 100 யார் தூரத்திலுள்ள சரித்திரமாகிவிட்ட நாயகன் கிட்டுவின் நினைவுக் கோட்டை காலம் காலமாக எமது மக்களின் வீரத்தைப் பறைசாற்றி நிற்கும் என நம்புவோம்.

*******

யாழ்நகரில் பூபாலசிங்கம் புத்தகக் கடையில் அங்கு நடைபெறும் இலக்கிய முயற்சிகள் பற்றி அறிய முடிந்தது. அழிக்க அழிக்க மீண்டும் மீண்டும் உயிர் பெற்றுவரும் புத்தகாலயம்.

இலக்கிய முயற்சிகள் பற்றியும், நான் பார்த்த சிதம்பரநாதனின் "பொய்க்கால்" நாடகம் பற்றியும், சட்டநாதர் கோவிலடியில் நிகழ்ந்த இளங்கலைஞர் மன்றத்தின் இசைவிழா பற்றியும் பின்னர் எழுதுவேன்.

தமிழாராய்ச்சி மாநாட்டு நினைவு பொறிதட்டவே முன்னால் உள்ள ஒழுங்கையூடாக (முன்னைய றீகல் தியேட்டர் ஒழுங்கை) சென்று பார்த்த போது அந்த நினைவுச் சின்னம் அப்படியே இருந்தது.

**"அன்றிரவு கொடுமைகள் நிகழ்ந்தன**
**எங்களது பெண்கள் குழந்தைகள் முதியோர்**
**வேட்டை நாய்களால் விரட்டப்பட்டனர்.**
**கைப்பற்றப்பட்ட பூமியில்**
**அந்நியப் படைகளாய் அபிநயித்த சக்திகள்**
**ஒன்பது உயிரின் அநியாய இழப்பு**
**ஓ......! அன்றிரவிற் கொடுமைகள் நிகழ்ந்தன.**

**துயர்நிறை நெஞ்சோடும், மரத்தில்**
**நாம் ஒரு சின்னமெழுப்பினோம்.**
**சிந்தப்பட்ட இரத்தத்**
**துளிகளாய் சிவந்த செவ்விரத்தப் பூக்கள்**
**நாள் தோறும் சின்னத்தடியில்**
**எதையோ எமக்கு உணர்த்திக் கிடக்கும்"**

**அ.யேசுராசா**

நிமிர்ந்து பார்க்கிறேன். கோட்டை முன்னால் சிதைந்து கிடந்தது.

******

**4.** யாழ்ப்பாணத்து விஷயங்கள் வெகுவாக என்னைப் பாதித்து விட்டன. சில நிகழ்வுகளிலிருந்து என்னால் இன்னமும் மீளமுடியாது இருக்கிறது. சென்ற கிழமை என் நண்பனின் விருந்து வைபவமொன்றின் பாதியிலேயே நான் எழுந்து வந்து விட்டேன்.

குறிப்பாக திட்டப் பணிப்பாளர் அலுவலகத்தில் நான் சந்தித்த அந்த இரு அநாதைப் பிள்ளைகள் இன்னும் கண்முன்னால் நிற்கின்றனர்.

"தந்த பென்சில் சரியில்லை....."

திருநீறு பூசிய அந்தச் சிறுமி சொன்னது காதில் கேட்டுக் கொண்டே இருக்கிறது.

முன்பெல்லாம் குடாநாட்டிலேயே ஒன்றிரண்டு அநாதை இல்லங்கள் மட்டும் தானே இருந்தன. இப்ப ஊருக்கு ஊர் இல்லங்கள் இருக்கின்றன. எங்கள் ஊரில் ஸ்ரான்லிக் கல்லூரியின் முன் ஒழுங்கைக்குள்ளும் ஒரு அநாதை இல்லம் இருக்கிறது. குழந்தைகளும் நிறையவே இருக்கிறார்கள்.

**UNHCR, REDBARNA, Save The Children Fund,** மற்றும் யாழ். கத்தோலிக்கத் திருச்சபை, துர்க்கையம்மன் தேவஸ்தானம் போன்ற அமைப்புக்கள் இக் குழந்தைகளைப் பராமரிப்பதும், குழந்தைகளுக்காகப் பணம் சேர்ப்பதிலும் தீவிரமாக இருக்கிறார்கள். தவிர விடுதலைப் புலிகள் இயக்கம் நடாத்துகின்ற செஞ்சோலை இல்லங்களும் இருக்கின்றன.

இங்குள்ள ஊர்ச் சங்கங்களும், தமிழ் மன்றங்களும், தேவாலய நண்பர்களும் இக் குழந்தைகள் விஷயத்தில் கூடுதலாக அக்கறை எடுக்க வேண்டும்.

உளவியல் ரீதியான பாதிப்படைந்தவர்களுக்கு சுண்டுக்குளி தபால் நிலையம் அருகேயுள்ள "சாந்தீகம்" என்ற நிறுவனம் சிறந்த தொண்டாற்றி வருகிறது.

நோர்வே நாட்டைச் சேர்ந்த **NORAD** என்ற நிறுவனம் சாந்தீகத்துக்கு உதவி வருகிறது. வாழ்வில் மனோவியல் பாதிப்புக்குள்ளானவர்களும், தற்கொலை செய்து கொள்ள முயன்றவர்களுமாக நிறையப் பேர் இந் நிறுவனத்தினூடு ஆறுதல் பெற்றுள்ளனர். அவர்களை நல்வழிக்குக் கொண்டு வந்துள்ளனர். மனைவி தன் குழந்தைக்கு பால் கொடுக்க முடியாத நிலையில் பிளேன் டீயை பருக்கிய வறுமையைத் தாங்க முடியாத கணவன் தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட கதை கூடி இங்கு கேள்விப்பட்டேன். இவர்களுக்கெல்லாம் வாழ்வில் நம்பிக்கையை ஏற்படுத்துகின்ற நல்ல முயற்சியை இந்த சாந்தீகம் செய்கின்றது.

மற்றது, நான் கேள்விப்பட்ட ஆனால் அங்கு பார்க்க மறந்த ஜெய்பூர் நிலையம் பற்றியும் இங்கு குறிப்பிட வேண்டியது அவசியம். இது சுண்டிக்குளி/பழைய பூங்கா சந்தியிலுள்ள வீடொன்றில் இயங்கி வருகிறது. இங்கு யுத்தத்தாலும் மிதி வெடிகளாலும் கால்களை இழந்தவர்களுக்கு மரத்தாலான கால்கள் பூட்டப்படுகின்றன. இந்நிலையம் வெற்றிகரமாக இயங்கி வருவதையும் அறிந்தேன். இங்கு கால் இழந்தவர்கள் பொய்க்கால் பெற்று அவர்கள் நடப்பதற்கான பயிற்சியையும் அளிக்கிறார்கள். இந் நிறுவனத்தை

ஆரம்பிப்பதற்கு பெரு உதவிகள் செய்தவர்கள் சிங்கள மக்கள் மத்தியில் பிரபலமான " FRIENDS IN NEED" என்ற மனிதாபிமானமிக்க நிறுவனமாகும்.

*******

## பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்

நிர்வாகச் சீர்கேடுகளைக் களைந்து நேரிய வழியில் நிர்வாக இயந்திரத்தை நகர்த்த தீவிரமாக இயங்கிவரும் இயக்கத்தினரின் "நிழல்" அமைப்பு பற்றி முன்பு எழுதினேன்.

இயக்கத்தினரின் "பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்" பற்றி தற்போது பார்ப்போம்.

இந்தக் கழகம், ஈழத்தின் மூலவளங்களைக் கொண்டு உருவாக்கவல்ல, பொருளாதார முன்னேற்றத்துக்கான செயல்பாடுகளைச் செய்து வருகின்றது. இதன் பின்னணியில் வெவ்வேறு துறைகளில் Ph.D பட்டம் பெற்றவர்கள், தேர்ச்சி பெற்றவர்கள் முழு மூச்சாக இயங்கி வருகின்றனர்.

பொருளாதார விடுதலை என்பது இக் கழகத்தின் உயிர்நாடியாக உள்ளது.

குறைந்த காலத்தில் கூடிய விளைச்சலைத் தருகிற நெல்வகை, இவர்களது கண்டு பிடிப்பே. ஏக்கர் கணக்குகளில் நடைபெறும் வேளாண்மையில் விடுதலைப் புலி வீரர்கள் மாடாக உழைக்கிறார்கள்.

துப்பாக்கிச் சத்தமும், புகையும் தான் புலிகள் என்பது பொய்த்துப் போனது.

எதிரியிடமிருந்து மண்ணைக் காப்பது மட்டுமல்லாது மண்ணை வளப்படுத்துவதில் கண்ணாக இருக்கிறார்கள்.

கடல் நீர்நிலைகளை ஆராய்ந்து குளங்களைத் திருத்துவது போன்ற வேலைகளையும் பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினர் செய்கின்றனர்.

அண்மையில் குறைந்த விறகுடன் கூடிய நெருப்பைத் தரவல்ல இரட்டைச் சூட்டடுப்பு மற்றும் ஒரு சிறு திரியுடன் பிரகாசமான வெளிச்சத்தைத் தரவல்ல விளக்கு ஆகியனவும் இவர் களால் விற்பனைக்கு விடப்பட்டுள்ளது.

திருநெல்வேலிப் பகுதியில் பாரிய பழவகைப் பயிர்ச்செய்கையும் இவர்களால் நடாத்தப்படுகிறது. கிட்டு லண்டனிலிருந்து அனுப்பி வைத்த மூன்று மாதத்தில் மரமாகிக் காய்க்க வல்ல பப்பாசி விதைகள் பெரும் தோட்டமாகி உள்ளது.

தவிர சவர்க்காரம், Chilli Sauce ,சொக்கலற் போன்ற நிறைய உள்ளூர் உற்பத்திகளுக்கு ஊக்கம் அளிக்கிறார்கள்.

இயக்கத்தினரால் நடாத்தப்படும் கடைகள் ஆங்காங்கே உள்ளன. ஆஸ்பத்திரி முன்னால் உள்ள இவர்களின் மருந்துக் கடை மிகப் பெரியது. கடையில் ஒரு இடத்தில் ரசீது எழுதி இன்னோர் இடத்தில் காசு கட்டி வாசலில் சாமானைப் பெற்றுக் கொள்ள நிறையவே நேரம் போய்விடுகிறது. இருந்தும், விலை குறைவு என்பதால் மக்கள் நிறையப் போகிறார்கள்.

இவர்களால் "ஆதாரம்" என்ற சமூக பொருண்மிய விஞ்ஞான ஆய்வு

மாத இதழ் வெளியிடப்படுகிறது.

*******

யாழ்ப்பாணத்தில் **Eason's Funeral Service** உம் மற்றும் எழுத்தோவியர்களும் சரியான **busy** ஆக இருக்கிறார்கள்.

காரணம் மரணங்கள்.

முன்பு **Main Road** இலிருந்த **Raymonds** இடத்தில் இப்போது **Eason's Funeral Service** இயங்குகிறது

.இறந்தவர் வீட்டுக்கு முன்பாக மாவிலை, தோரணங்கள் கட்டுவது. **Tent** அடித்து கதிரைகள் போடுவது —

பிரேதப் பெட்டி மற்றும் சூழவுள்ள உயரக் குத்துவிளக்குகள் வைப்பது —

பிரேதத்தைக் குளிக்க வார்த்து உடுப்பு மாற்றுவது —

**Hearse** இல் கொண்டு போவது —

போன்ற அனைத்து வேலைக ளையும் அவர்களே செய்கிறார்கள். இதற்கான செலவு கிட்டத்தட்ட 15இலிருந்து 20 ஆயிரம் வரையாகும். மற்றும் படி வெத்திலை பாக்கு, புகைத்தல் என்பன வீட்டாரைப் பொறுத்தது.

அநேகமான வீடுகளில் பொறுப்பான இளைஞர்கள் புலம்பெயர்ந்து விட்ட நிலையில் இந்த ஏற்பாடு பலராலும் விரும்பப்படுகின்றது. பாடைகள் இப்போ பாடையேறிவிட்டன. அந்த நாலுபேர் என்பது அர்த்தமற்றதாகி விட்டது.

குடிமைத் தொழில்களுக்குத் தடைவிதிக்கப்பட்டிருப்பதால் சுடலையில் கொள்ளி வைப்பவரது பானை உடைத்தலை குடும்ப நண்பர்களே செய்கிறார்கள். சவரத் தொழிலாளி செய்தால் அவர் அபராதம் கட்ட வேண்டும்.

இது பற்றி ஊர்ச் சகோதரரிடம் கேட்டபோது "இப்ப பிள்ளைகள் எல்லாம் படிக்கிறார்கள்.. அதைவிட தங்களை வா, போ என்று ஒருவரும் அழைப்பதில்லை... சமூகத்தில் மரியாதையாக வாழ முடிகிறது..." என்று சொன்னார்.

*******

ஓவியர்களும் எழுத்தோவியர்களும் மிக சுறுசுறுப்பாக இருக்கிறார்கள்.

வீரமரணம் அடைந்தவர்களது விபரங்கள் மிக அழகாக சந்திமதில்களில் எழுதப்பட்டுள்ளன. அச்சுப் பதித்தது போலுள்ளன. மேலும் மாவீரர்களின் ஆளுயரப் படங்கள் மிகத் தத்ரூபமாக வரையப்பட்டுள்ளன.

ஆனந்தம் வடலிச் சந்தியிலுள்ள "சந்தோஷத்தின்" உருவப் படம் இதற்குச் சாட்சி. அந்தச் சிரிப்பு அப்படியே அந்தச் சுவரில் அப்பி இருக்கிறது.

*******


# சிதைவுகள்

நண்பர் ஒருவர் தனது மோட்டார் சைக்கிளில் அழைத்துச் சென்று நிறைய இடங்களைக் காட்டினார்.

நான் படித்த பரியோவான் கல்லூரியுள் போனபோது நிறைய மாற்றங்கள் தெரிந்தன. ஆயினும் நாங்கள் தமிழ் மன்ற விழாக்கள் வைத்த **Williams Hall** இன்னும் உறுதியாய் இருக்கிறது.

தனபாலன் **Master** அவர்கள் தற்போது **Principal** ஆக இருக்கிறார்.

மற்றும்படி ஐஸ்பழ சிவகுரு இப்போது இல்லை. பதிலாக ஒரு பையன் ஐஸ்பழம் விற்கிறான்.



**Philip Nursing Home** ஐ கடந்து போன போது தான் விமானத் தாக்குதலுக்கு உள்ளாகி சிதறுண்ட சென். ஜேம்ஸ் தேவாலயத்தைப் பார்த்தேன். முன்னும் பின்னுமிருந்த சுருவங்கள் தவிர்த்து ஏனையவை சிதறுண்டு இருந்தன. பிரார்த்தனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்களில் 25 பேர் துகள்களாகிப் போனதாக சொன்னார்கள்.

சின்னக்கடை முன்புபோல் சுறுசுறுப்பாக இல்லை.

ஆழக்கடலுக்குப் போவதற்கு கடல் தொழிலாளர்கள் அஞ்சுவதால் கையளவு மீன்களே தற்போது அகப்படுகின்றன. இரு சிறிய மீன்கள் 50 ரூபாவுக்கு விற்கப்படுகின்றன.

பழைய **Rest House** தாண்டினால் ஒரு இடர்பாடுகளுக்குள்ளால் போகிற

உணர்வே ஏற்படும்.

மாநகர சபைக் கட்டிடம் தரைமட்டமாகக் கிடக்கிறது. சுப்பிரமணியம் பூங்கா அழிந்து விட்டது.

பொலிஸ் நிலையம் தகர்ந்து போயுள்ளது.

துரையப்பா ஸ்ரேடியம் புற்களின் காடுகளாய்க் காட்சியளிக்கிறது.

தந்தை செல்வாவின் தூய வெண்ணிற உயர்ந்த தூபி எந்தவித பாதிப்பும் இன்றி அசையாதுள்ளது.

தமிழர்கள் என்றும் அடிமையாய் வாழவேண்டும் என்பதை உணர்த்தி நின்ற டச்சுக் கோட்டையின் பெரும்பகுதிகள் இடிக்கப்பட்டு விட்டன. கோட்டையின் ஒரு மூலைப்பகுதியை மட்டும் நினைவுக்காய் விட்டு


அழிக்கப்பட்ட யாழ்நகரம்

வைத்துள்ளார்கள்.

உள்ளம் பற்றி எரிய, புகை கவ்விக் கிடக்கும் யாழ். நூலகத்தின் வெற்றுச் சுவர்களைப் பார்த்தேன்.

மீண்டும் மீண்டும் அழிக்கப்பட்ட தமிழாராய்ச்சி நினைவுத் தூபிகள் செந்நிறப் பளிங்குக் கற்களால் ஆக்கப்பட்டிருக்கிறது.

வீரசிங்கம் மண்டபம் நொருங்கிப் போயுள்ளது. நான் இங்கு பார்த்த கலை நிகழ்வுகளை எண்ணிப் பார்க்கிறேன்.

**தாசீசியஸின் "ஓலங்கள்"**

**அம்பலத்தாடிகளின் "கந்தன் கருணை"**

**மகாகவியின் "கோடை"**

***பாலேந்திராவின் "கண்ணாடி வார்ப்புகள்"***
*போன்ற நாடகங்களும்,*
*ரங்கா விவேகானந்தனின் குச்சுப்பிடி நடனம்*
*சேரன் மண்டபத்தில் வாசித்த கவிதை வரிகள்.*
"மறுபடி மறுபடி
தவறுகள் செய்பவர்
மனிதரே அல்லர்...."
*ஓ! அந்த நாட்கள்*

*******

*முனியப்பர் கோவிலில் மூன்று சாமப் பூசைகளும் நடைபெறுகின்றன. தினகரன் விழா என்றும் தமிழாராய்ச்சி மாநாடென்றும் மனிதவெள்ளமாகக் காட்சி தரும் அந்த முற்றவெளிப் பரப்பில் இன்று நான், சனநடமாட்டம் அற்ற, இடர்பாடுகளுக்கிடையே நின்று கொண்டிருக்கிறேன்.*

*மண்டைதீவு முறைத்துப் பார்த்தபடி.....*

*இராணுவ ஷெல்லடி பயம் நெஞ்சை நெருட, யாழ் திறந்த வெளி அரங்குப் பக்கம் சைக்கிளைத் திருப்பினோம்.*

*அங்கு செடிகள் கொடிகளாகிப் பின் மரங்களாகி நிற்கின்றன. மணிக் கூட்டுக் கோபுரமும் தானும் சளைத்தவன் அல்ல என்பது போல் நிமிர்ந்து நிற்கிறது. மணிக்கூடு மட்டும் என்றோ ஒரு நாளைய 6மணி 50 நிமிடத்தில் தன் உயிரை இழந்து விட்டது.*

*மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி என்பன ஏற்பட்ட அனர்த்தங்களுக்கு மத்தியிலும் வழமை போல் இயங்குகிறது.*

*Bus Stand வெறிச்சோடிப் போயுள்ளது. அதில் குண்டுகள் விழுந்து ஏற்படுத்திய பள்ளத்தில் மழைத்தண்ணீர் வெள்ளமாக நிற்கிறது.*

*வைரமாளிகையும் மக்கள் குரலும் எங்கு போயிருப்பார்கள்?*

*சந்தியில் வள்ளுவர் சிலை முன்பு போல் முண்டமாகவே உள்ளது.*

*பெனியன்களுக்கு பிரபலமான Leyden கொம்பனியில் மலை நாட்டிலிருந்து இடம் பெயர்ந்து வந்த சில குடும்பங்கள் இருக்கின்றன.*

*றிக்கோ, மலாயன் கபே நடக்கிறது. சுபாஸ் கபே மூடியாகிவிட்டது.*

*நவீன சந்தையின் நடுக் கட்டடத்தின் கூரை தரையில் கிடக்கிறது.*

*தையல் கடைகள் இப்ப வும் வரிசையாக (சீலைக் கடை களுக்கு முன்பாக) நிறைய உள்ளன. ஆனால் அன்வரும், ஹசனும், அப்துல் காதரும் இப்ப இல்லை.*

*வின்சர் தியேட்டருக்குப் போகிற மூலையில் மதுபானம் விற்கும் கடை திறந்தே இருக்கிறது. அங்கு உள்ளூர்த் தயாரிப்பிலான மதுபானங்களே விற்கப்படுகிறது.*

*வெலிங்டன் தியேட்டர் தற்போது குடிசைக் கைத்தொழிலின் சந்தையாக இருக்கிறது.*

*இலங்கை வங்கி (ஆஸ்ப த்திரி வீதி) மக்கள் வங்கி (ஸ்ரான்லி வீதி)*

வர்த்தக வங்கி ஆகியன தற்போது யாழ்நகரில் இயங்கி வருகின்றன.

*******

ஆரியகுளச் சந்தியின் முன்பாக ஒரு தனியார் உயர் கல்விக்கூடம் செயல்படுகிறது. நிறைய மாணவர்கள் படிக்கிறார்கள்.

நல்லூருக்கு போகும் வழியில் உள்ள கோவில் ஒன்றின் முன்பாக ஒரு பழுதான புல்டோசர் நிறுத்தப்பட்டிருந்தது. இது ஒரு வீட்டின் முன்பு நின்றதாகவும் விமானத்தாக்குதலுக்கு இலக்காகலாம் என்பதால் அவ்வீட்டாரும் அயலவரும் சேர்ந்து அதனை இழுத்து வந்து அங்கு நிறுத்தியுள்ளார்களாம்.

நல்லூர் வடக்கு வீதியால் வந்த பெண்மணி ஒருவரிடம் திலீபன் மரித்த இடமெது எனக் கேட்டேன். இடத்தை காட்டிய அவர் வேறு உலகிலிருந்து வந்திருக்கிறாரா அல்லது உளவாளியா என்பது போல் என்னைப் பார்த்தார். அவர் காட்டிய இடத்தில் அந்தத் தீப நினைவுச் சின்னங்கள் எதுவும் காணப்படவில்லை. அதை அண்டிய வீதிகளிலும் திலீபனின் எந்தவித சின்னங்களும் இல்லாதது எனக்கு ஆச்சரியத்தைத் தந்தது.

காது கிழிந்த ஆச்சிமார் இப்பவும் கடலை, கச்சான் விற்பதைக் காண முடிந்தது. நாவலர் மண்டபத்தில் இயக்கத்தினரால் சயிக்கிள் பாதுகாப்பு நடாத்தப்பட்டு. 1 ரூபா வசூலிக்கப்படுகிறது. இப்பொழுதெல்லாம் கோயில்களில் மாலைப்பூஜைகள் பிற்பகல் நான்கு மணிக்கே முடிந்து விடுகின்றன.

பருத்தித்துறைக்குப் போன போது வல்லிபுர ஆழ்வாரைத் தரிசித்தேன். கோபுரம் புனரமைக்கப்பட்டு மஞ்சள் நிறத்தில் அழகாக வர்ணம் தீட்டப்பட்டுள்ளது. அங்கு பொங்கியெழுந்த கடலலைகளையும் மணற்குவியலையும் காட்டி, இங்குதான் வடமராட்சித் தாக்குதலின் போது இராணுவத்தினரின் ஒரு பகுதியினர் வந்து இறங்கியதாகச் சொன்னார்கள்.

தெல்லிப்பளை துர்க்கையம்மனைத் தரிசிக்கச் சென்றபோது பயம் கவ்விக் கொண்டது. கோயிலுடன் விடுதலைப் புலிகளின் சென்றி உள்ளது. அப்பால் இராணுவம், கோயிலில் நடை பெறும் பஜனைகள் சிலவேளை இராணுவக் காதுகளுக்குக் கேட்கக் கூடும்.

போற வாற வழிகளில் நிறைய சிறுவர் பூங்கா மாவீரர் நினைவாக ஆக்கப்பட்டுள்ளன. கவர்ச்சிகரமான இப்பூங்காவை மிகச் சிறப்பாகப் பேணி வருகிறார்கள்.

*******

## ஈழத்து இலக்கிய முயற்சிகள்

யாழ்ப்பாணத்தில் ஈழநாடு, ஈழநாதம், உதயன் ஆகிய பத்திரிகைகள் தினமும் வெளிவருகின்றன. உள்ளூர்ச் செய்திகள் மட்டும் அல்லாது அரச செய்திகளும் போடுகிறார்கள். விலை 5ரூபா. 6 பக்கங்கள் மட்டுமே. உதயன் பத்திரிகை சில வேளைகளில் கொப்பி **paper** இல் கோடுகளுடன் வருகிறது.

விடுதலைப் புலிகளின் பிரச்சாரப் பத்திரிகைகளாக விடுதலைப் புலிகள், களத்தில், சுதந்திரப் பறவைகள் வெளியிடப்படுகின்றன.

**Hot spring** என்ற ஆங்கில வார இதழ் மிகவும் தராதரமாக சிறந்த கட்டுரைகள், ஆய்வுகளுடன் வெளி வருகிறது. **Saturday Review** பார்த்தது போல் இருக்கும்.

கொழும்பில் வெளியிடப்படும் வீரகேசரி, **The Island, Sunday Times, Observer** வாரப்பதிப்புகள் மட்டும் யாழ்ப்பாணம் வருகிறது. அதுவும் கப்பல் வாறதையும் வள்ளம் ஓடுவதையும் பொறுத்து அநேகமாக செவ்வாய், புதன் மட்டில் கிடைக்கிறது. எங்களுக்கு இங்கு சிலவேளை திங்களே கிடைக்கிறதே.

சஞ்சிகைகளைப் பொறுத்த வரை, இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தினரின் புதுமை இலக்கியம்" தொடர்ந்து வருகிறது. அநேக மொழிபெயர்ப்புகளுடன், மறைந்த பேராசிரியர் கைலாசபதி அவர்களின் கட்டுரை ஒன்றும் நாடக அரங்கம் பற்றிய ராஜ ஸ்ரீ காந்தனின் கட்டுரையும் கடைசி இதழில் காணப்பட்டன.

"தாயகம்" என்ற தேசிய கலை இலக்கியப் பேரவையினரின் மாத இதழ் சற்று வித்தியாசமாக இருக்கிறது. மண்ணின் உண்மை (தேடி அல்ல) நிலையை யதார்த்தமாக விளக்குகிறது. கடைசி இதழில் கவிஞர் முருகையனின் கட்டுரையும், ஓவியக் கலைமாமணி க. இராசரத்தினத்தின் ஓவியம் பற்றிய கட்டுரையும் இடம்பெற்றிருந்தன.

"வாண்மை ஓங்க மாநிலம் சிறக்கும்" என்ற வாக்கைத் தாங்கி "விளக்கு" என்ற சஞ்சிகை வருகிறது. க. சொக்கலிங்கம், வரதர் போன்றவர்கள் இதில் எழுதுகிறார்கள்.

வேம்படி வீதியிலிருந்து மாணவர் அமைப்பின் இளையோர் திங்கள் இதழாக "சாளரம்" என்ற சஞ்சிகை வெளிவருகிறது. கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்களின் கட்டுரை போன்ற தரமான ஆக்கங்கள் நிறைந்து இருந்தன.

கலை பண்பாட்டுக் கழகத்தினரின் "வெளிச்சம்" மாத இதழ் மிகத் தரமாக இருக்கிறது. கடைசி இதழில் செங்கை ஆழியான், செம்பியன் செல்வன் ஆகியோரது சிறுகதைகளும் நாடக அரங்கம் பற்றி குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களது கட்டுரையும் மெல்லிசைக் கலைஞர் கண்ணனின் பேட்டியும் காணப்பட்டன.

அரசடி வீதி, கந்தர்மடத்திலிருந்து வெளிவரும் "நங்கூரம்" என்ற சமூக அறிவியல் ஏடு தொடர்ந்து வருகிறது. டாக்டர் சிவபாலன் போன்ற வர்கள் எழுதுகிறார்கள். இவ்வாறே "ஆதாரம்" என்ற சமூக பொருண்மிய விஞ்ஞான ஆய்வு இதழ் **copy paper** இல் தாவடியிலிருந்து வெளிவருகிறது. கலாநிதி பால. சிவகடாட்சம் போன்றவர்கள் ஆய்வுக் கட்டுரைகள் எழுதுகின்றனர்.

அருச்சுனா வீதியிலுள்ள வசந்தம் புத்தக நிலையத்தினரால் "துளிர்" என்ற சிறுவர்களுக்கான அறிவியல் மாத இதழ் வெளிவருகிறது.


தேயிலைக்குப் பசுமையும் தேனீருக்குச் சாயத்தையும் தந்த மக்களைப் பற்றி சஞ்சிகை என்ற வாசகத் தினைத் தாங்கி "கொழுந்து" என்ற சஞ்சிகை யாழ்ப்பாணத்தில் கிடைக்கிறது. இச்சஞ்சிகை 57 மகிந்த பிளேஸ், கொழும்பு — 6 இலுள்ள மலையக வெளியீட்டகத்தினரால் வெளியிடப்படுகிறது.

நவீன இலக்கியங்களைத் தாங்கி "ஆகவே" என்ற சஞ்சிகை **460/32**

**power house road,** திரு கோணமலையிலிருந்து பிரசவமாகிறது. இதன் ஆசிரியர் ஜபார் என்பவர். சு. வில்வரெத்தினம், நந்தினி சேவியர், சம்யுக்தா போன்றவர்களின் ஆக்கங்களும், காவாமோடோ சாபூரோ, யுவான் ரூல்ஃபோ, மரியன் செட்லி ஆகியோரின் மொழிபெயர்ப்புக்களும் இடம்பெற்றுள்ளன. இவ்விதழை யாழ்ப்பாணத்தில் பெறமுடியாது.

அநேகமான சஞ்சிகைகள் ஒவ்வொன்றினதும் விலை 15 ரூபா. அண்மையில் வெளியிடப்பட்ட செங்கை ஆழியானின் "யாழ்ப்பாணத்து இராத்திரிகள்" என்ற புத்தகம் கோடுகள் இட்ட ( சிவத்த **Margin** கோடு உட்பட) கொப்பித் தாளில் அடிக்கப்பட்டு வெளியிடப்பட்டிருந்தது.

மற்றும்படி நவீன இலக்கியங்களை தாங்கி வந்த அலை, மற்றும் மல்லிகை போன்ற சஞ்சிகைகள் தற்போது நின்றுவிட்டன.



பருத்தித்துறை வல்லிபுர ஆழ்வார் கோயில்

நான் திரும்பி வரும் நாட்களில் வாசிகசாலைகளிலும் சந்திகளிலுமுள்ள கரும்பலகைகளில் "பங்கரை வெட்டுங்கள்" என்று எழுதப்பட்டிருந்தது.

செல்லடியும் விமானத் தாக்குதலும் பழகிவிட்டன என்றாலும் அவர்கள் உண்மையில் நிறையவே பயப்படுகிறார்கள். காரணம், முன்பு போலல்லாது சத்தம் எதுவும் இல்லாது மண்டைதீவிலும் பலாலியிலும் இருந்து ஏவப்படும் ஷெல்கள் திடீரென வந்து விழுந்து வெடிக்கின்றதாம்.

ஆயினும் மக்கள் பங்கரைப் பாவிப்பதில்லை. அநேகமான பங்கர்கள் மூடிக் கொண்டு விட்டன. விமானங்கள் வரும்போது மட்டும் விமானம் வரும் திசைக்கு எதிர்பக்கமாகவுள்ள வீட்டுச் சுவரின் அருகே அமர்ந்து விடுகிறார்கள்.

நான் நல்லூரில் நின்றபோது விமானச் சத்தம் கேட்டு சைக்கிளில் வந்தவர்கள் எல்லாம் இறங்கி வீதிக்கரையோரம் நின்றவாறு விமானம் மறையும் வரை அதன் திசையை நோக்கிப் பார்த்த வண்ணம் நின்றார்கள். பார்வையில் பயம் தெரிந்தது. காற்று மட்டும் எந்தவித பயமும் இன்றி வீசிக் கொண்டிருந்தது.

எல்லாவற்றிலும் **super sonic** விமானம் தான் அனைவ ரையும் கதிகலங்கச் செய்கிறது. இதன் அதிபயங்கரமான சத்தத்தைக் கேட்டு குழந்தைகள் வீறிட்டு அலறுகிறார்கள். சிறுவர்கள் நடுங்கியவாறு மூலைகளுக்குள் ஒளித்துக் கொள்கிறார்களாம். பெரியவர்கள் காதைப் பொத்திக் கொள்கிறார்களாம். இந்த விமானம் போடுகிற குண்டினால் தண்ணீர் ஊற்று வருமளவுக்கு நிலம் பள்ளமாகிறது என்கிறார்கள்.

வாழ்வின் நம்பிக்கை தளர்ந்தது ஒருகணம்
இருத்தலின் அடித்தளம் குலுங்கி
அசைந்தது
தூக்கமும் விழிப்பாய்
நினைவுச் சுழல்களாய்க்
கரைந்து கழிந்தது

நாட்கள் நகரும்
நாங்களும் எமது
போக்கிலே தொடர்ந்து
புதியன முயல்வோம்
வாழ்க்கை இதுதான்
மரணமும் இதுதான்

**- எம்.ஏ. நுஃமான்**

*******

# 5.

யாழ்ப்பாணத்தில் என்னோடு கதைத் தவர்களில் அநேகமானோர் நான் கனடாவிலிருந்து வந்தவன் என்பதை அறிந்ததும் உடனடியாக ஒரு கேள்வி கேட்டார்கள்.

என்னைப் பருத்தித்துறையிலிருந்து ஏற்றி வந்த வாகன சாரதி தொடக்கம் வவுனியாப் புகையிரதத்தில் பக்கத்திலிருந்தவர் வரை இந்தக் கேள்வியைக் கேட்டார்கள்.

கப்பலில் போகும் போதும்— வாகனத்தில் திரும்பி வரும் போதும்—
அவர்கள் நாயகரா வீழ்ச்சியின் அழகைப் பற்றிக் கேட்கவில்லை—
ஆளுயரக் கட்டிடங்களைப் பற்றிக் கேட்கவில்லை—
கொட்டும் பனி பற்றியும் இல்லை—
கொடுப்பனவுகளில் வசதியாக வாழலாமா என்றும் கேட்கவில்லை—

தங்கள் மானம் போனதுபோல் ஒரு கேள்வியை அனைவரும் கேட்கிறார்கள்.

**“இதுகள் அங்க போய் ஏன் சண்டை பிடிக்குதுகள்?”**

இதை சாதாரணமாக அவர்கள் கேட்கவில்லை. முகத்தில் வெறுப்புடன் மனதில் சினத்துடனும் தான் இவ்வாறு கேட்பதைக் காணமுடிந்தது.

தமிழன் தனிப் பெருமைகள் கொண்ட தன்மானம் மிக்க இனம் என்பதை நிலைநிறுத்த அல்லும் பகலும் அத்தமிழ் மண்ணில் அல்லற்படும் அந்த மக்கள் அதைக் கேட்டபோது நெஞ்சு கனத்தது. குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டவன் போல் கூனிக்குறுகிப் போனேன். என்னால் பதில் சொல்ல முடியவில்லை.

என்னெத்தைச் சொல்ல—?

திட்டமிட்ட குடியேற்றம் என்று சொல்லி இராவோடு இராவாய் வாள்கள், பேஸ்போல் மட்டைகளோடு வானில் ஏறிப் போய் வெட்டினார்கள் என்று சொல்லவா?

அல்லது,

சென் ஜேம்ஸ் தேவாலயத்தின் மீது குண்டு போட்டு சிறுவர்கள் எல்லாம் மடிந்ததற்குப் பதிலடியாக முகாம் தாக்குதலை மேற்கொள்ள துப்பாக்கிகளோடு புறப்பட்டார்கள் என்று சொல்லவா?

அல்லது,

ஊர்மீட்பு நிதி சேர்த்த கதையைச் சொல்லவா?

சும்மா கோஷ்டிச் சண்டை என்று பல இடங்களில் சமாளிக்க வேண்டியதாயிற்று.

இந்த அடிபாடுகள் பற்றிய செய்திகள் அங்குள்ள பத்திரிகைகள் அனைத்திலும் முன்பக்கச் செய்தியா கப் பிரசுரமாகி இருந்தனவாம்.

இது பற்றி, நான் சந்தித்த புலிவீரர், வெளிநாடுகளுக்குப் போய் ஆயுதம் ஏந்துபவர்கள் பற்றித் தாம் விசனப்படுவதாகத் தெரிவித்தார்.

*******

# இளங்கதிர் மன்ற இசைவிழா

நல்லூர் சட்டநாதர் வீதி விழாக்கோலம் பூண்டிருந்தது.

மாவிலை, தோரணங்கள், வாழைக்குலைகள் என்று அப்பப்பா......

குடாநாட்டின் மின்சாரம் முழுவதையும் சேர்த்து சட்டநாதர் வீதி மின்கம்பங்களில் ஓடவிட்டு விட்டார்களா என்பது போல் காணும் இடமெல்லாம் வெளிச்சம்

அதுவும் குப்பி விளக்கின் வெளிச்சத்தில் இருந்துவிட்டுப் போன என் கண்களை அந்த மின்னொளி பறித்தன.

இளங் கலைஞர்கள் மன்றத்தினரால் புதிதாக அமைக்கப்பட்ட கலா மண்டபத்தில் 15 நாட்களாக நடந்தேறிய இசைவிழா இவ்வாறு தான் களை கட்டியிருந்தது.

இயல், இசை, நாட்டியம் என பொன் சுந்தரலிங்கம் அவர்களைத் தலை வராகக் கொண்ட இளங்கலைஞர் மன்றம் நடாத்திய இசைவிழா ரசிகர்களும் நிகழ்ச்சி நிரலுமாக நிரம்பி வழிந்தது.

இரு நிகழ்ச்சிகள் மட்டுமே பார்க்க எனக்குக் கிடைத்தன.

18.2.94 வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற டாக்டர். ரி. கெங்காதரன், வீ.கே. பஞ்சமூர்த்தி ஆகியோரின் புல்லாங்குழல் மற்றும் ஆர். ராதாகிருஷ்ணன் — வயலின் எஸ். மகேந்திரன் — மிருதங்கம் எனப் பங்குகொண்ட இசை நிகழ்ச்சி.

ஈழத்தின் முதல்தர புல்லாங்குழல் வித்துவானும், பிரபல நாதஸ்வர வித்து வானும் இணைந்து புல்லாங்குழலிசை மழைபொழிய தன்னிகரில்லாத வயலின் இசைமேதையும் சேர்ந்து சிந்திய இசைத்துளிகளை மண்டபம் நிறைந்து, வீதியி லும், நல்லூர் கல்வியங்காடுச் சந்திகளிலும் நின்றவாறே மக்கள் ரசித்தார்கள்.

மற்ற நிகழ்ச்சி 20.2.94 ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மங்கள இசை, இதில் என்.கே. பத்மநாதன், வீ.கே. பஞ்சமூர்த்தி ஆகியோர் நாதஸ்வரமும் கே. நித்தியானந்தன், த. உதயசங்கர், ஆர்.எஸ். சுதாகரன், க. சிவகுமார், ஆகியோர் தவிலும் வாசித்தார்கள்.

என்.கே. பத்மநாதன் முகத்தில் முதுமை தெரிந்தாலும் அதே கம்பீரத் துடன் வாசிக்கிறார். கே. நித்தியானந்தன் என்பவர் தான் தற்போது பிரபலமான தவில் வித்துவானாக இருக்கிறார். மறைந்த தவில்மேதை தட்சணாமூர்த்தி அவர்களின் மகன் தான் உதயசங்கர். மிகவும் கவர்ச்சிகரமான எடுப்பான தோற்றம் கெண்ட இவரின் வாசிப்பில் தந்தையின் லயம் இருப்பது மட்டுமல்லாமல் தட்சணாமூர்த்தியின் மேளச் சத்தம் (சற்று வித்தியாசமானது) போலவே தன் மேளத்தையும் கட்டி வைத்துள்ளார்.

மற்ற இருவரும் முறையே நாதஸ்வர வித்துவான் சந்தான கிருஷ்ணன், நாச்சிமார் கோவிலடி கணேசன் ஆகியோரின் மகன்மார், மிகத் திறமாக வாசித்தார்கள்.

விழாவில் எஸ். குமாரசாமி, வி. சிவஞானசேகரம், என்.வீ.எம். நவரத்தினம், பொன். சுந்தரலிங்கம், எஸ். கணபதிப்பிள்ளை, பொன் ஸ்ரீ வாமதேவன் ஆகியோரது இசைக்கச்சேரிகளும் —

பாக்கியலட்சுமி நடராஜா, சாந்தநாயகி சுப்பிரமணியம் ஆகியோரின்

வயலினிசையும் —

நந்தினி விஜயரத்தினம் அவர்களின் வீணை இசையும் மற்றும், அருட்கவி சி. வினாசித்தம்பி அவர்களின் கதாப்பிரசங்கம் —

ஸ்ரீதேவி குழுவினர், சின்னமணி குழுவினரின் வில்லிசை —

ஸ்ரீசக்தி நடனாலயம், திருநெல்வேலி பாரதி கலாமன்றம், கலைக்கோயில் வேலானந்தன் ஆடல் மன்றம், மானிப்பாய் கலைக்கோவில் மன்றம், கொழும்புத்துறை கலையகம், நாட்டிய கலாலயம், பரத கலா கேந்திரா, திலக நர்த்தனாலயம், சிவசக்தி சங்கீத நர்த்தனாலயம், நாட்டிய கலாகேந்திரா ஆகிய மன்றங்களின் நடனங்களும் இடம் பெற்றிருந்தன.

அந்த மின்னொளியிடமிருந்து என் கண்களை மீட்டு பழையபடி வீதியில் இறங்கியபோது இருட்டு, கும்மிருட்டாய் தெரிந்தது.

என்னதான் **Super Sonic** இன் சத்தம் செவிப்பறையை வெடிக்கச் செய்தாலும் எமது மக்களின் இசை ஞானத்தையும் கலைவாழ்வையும் யாராலும் அழிக்க முடியாது.

*******

தற்போது விடுதலைப் புலிகளின் நிர்வாக இயந்திரத்தில் நிறையப் பேர் வேலைசெய்கிறார்கள். இதில் முக்கியமானது காவல் துறையினர். மேலும் பல இளை ஞர்கள் குடிவரவு, சுங்கத்தீர்வு, போக்கு வரத்து, வாகனப் பதிவு நிலையம் போன்றவற்றில் பணிபுரிகிறார்கள்.

தவிர அரச பென்சன் எடுக்கும் உத்தியோகத்தர்களும் தகவல், வெளியீட்டுப் பிரிவுகள், யூனியன்கள், **associations** களிலும் கடமையாற்றுகின்றனர். இவர்களுக்கு 2000 இலிரிந்து 3000 ரூபா வரை சம்பளமாகக் கிடைக்கிறது, பென்ஷனுக்கு மேலாக.

உள்ளூர் உற்பத்திகளிலிருந்தும் மற்றும் வசூலிக்கும் வரி, வாடகைப் பணத்திலிருந்தும் இந்த ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்கப்படுகிறது.

******

அ.யேசுராசா அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்தேன். சிறந்த கவிஞரும், எழுத்தாளரும் விமர்சகரும், பிறமொழித் திரைப்படங்களில் தீவிர அக்கறையும் கொண்ட இவர் நின்றுபோன "அலை" நவீன இலக்கிய இதழின் ஆசிரியர்.

நீண்ட விரக்தியின் பின்னர் தற்போது கணவனால் கைவிடப்பட்ட தனது ஊரைச் சேர்ந்த ஒரு பெண்மணியைத் திருமணம் செய்து குடும்ப பந்தத்தில் இணைந்துள்ள இவர் மாறன் பதிப்பகத்தில் **proof reader** ஆக இருக்கிறார்.

இங்கு பத்திரிகைகளில் பரவலாகப் பேசப்பட்ட விடுதலைப் புலிகளின் தணிக்கை அதிகாரி பதவி தங்களுக்குத் தரப்பட்டது பற்றிக் கேட்டதற்கு தனக்கே உரித்தான கோபத்துடன் யாரோ தனக்கு வேண்டாதவர்களால் விஷமத்தனமாகப் பரப்பப்பட்ட செய்தி என்றார்.

இளங்கவிஞர்களுக்கான— மாணவர்களுக்கான கவிதை இதழொன்றை

ஆரம்பிக்க யோசித்திருப்பதாக சொன்னார்.

இரண்டாவது தடவை சந்தித்த போது மாற்கு மாஸ்டரும் இருந்தார். அதே தாடியுடன். மாற்கு மாஸ்டர் அவர்களின் ஓவியம் பற்றிய கையடக்கமான பிரசுரம் ஒன்று அண்மையில் வெளியிடப்பட்டதாம். கைக்குக் கிடைக்கவில்லை.

*******

தென்னிந்தியத் திரைப்படங்களுக்கும், பாடல்களுக்கும் இயக்கத்தினரால் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. திரையரங்குகளில் ஸ்ரீதர் திரையரங்கில் மட்டும் விடுதலைப் புலிகளின் போராட்டப்படங்கள் காட்டப்படுகின்றன. ராணி தியேட்டர் இருந்த இடம் தெரியவில்லை. ராணி தியேட்டர் அருகாய் ஸ்ரான்லி வீதியை இணைக்கும் வீதி எனக்குப் புதிதாக இருந்தது.

விடுதலைப் புலிகளின் தணிக்கை சபையினரால் அனுமதிக்கப்படும் திரைப்படங்களை மட்டும் வீடியோவில் பார்க்கலாம். வீடியோ, தொலைக்காட்சிப்பெட்டிகள் கார் பற்றரியில் இயங்குகின்றன. இவ்வாறே வெளிநாட்டிலிருந்து அனுப்பப்படும் கல்யாண, பிறந்த நாள், வீடியோ பிரதிகளைப் பார்க்கிறார்கள். ஜெனரேற்றரை வாடகைக்குப் பெற்றுக் கொள்ளும் இடங்களும் உண்டு.

வெளிநாட்டிலிருந்து வரும் வீடியோக்களை அநேகமாக உறவி னர்கள் அனைவரும் சேர்ந்தே பார்க்கிறார்கள். தங்கள் மக்கள், சகோதரர்கள், யாராவது வீடியோவில் தெரிகிறார்களா என்று ஆவலாயிருக்கிறார்கள். இவ்வாறே அங்கு நடக்கும் வைபவங்களிலும் எடுக்கப்படும் வீடியோவிலும் தங்கள் முகங்களைக் காட்ட விழைகிறார்கள். காரணம் இங்குள்ளவர்கள் தங்களைப் பார்ப்பார்கள் என்ற எதிர்பார்ப்பில். இது உண்மையில் ஒரு துன்பகரமான மனோநிலை தான்.

திரைப்படங்களைப் பொறுத்தவரை தெய்வப் படங்களுக்கும் தமிழ் உணர்வு சம்பந்தப்பட்ட பாடல்களுக்கும் விதிவிலக்கு அளிக்கப்பட்டுள் ளன. சினிமாப் பாடல்களை பொது இடங்களில் ஒளிபரப்ப முடியாது.

ஆயினும், இப்போதைய சினிமாப் பாடல்களை மிஞ்சும் அளவுக்கு குறைந்த வாத்தியங்களுடன் இசையமைக்கப்பட்டு மிகச் சிறந்த மெல்லிசைப் பாடல் களும் விடுதலைக் கீதங்களும் வெளிவந்துள்ளன. பிரபல மெல்லிசைக் கலைஞர் கண்ணன் அவர்கள் அநேக பாடல்களுக்கு இசைவடிவம் கொடுத்துள்ளார். மிக நுட்பமாக ஒவ்வொரு இசைக்கருவிகளும் தனித்தனியே கேட்கும்படியாகப் பாடலைப் பதிவு செய்துள்ளார்கள். திருநெல்வேலிச் சந்தியில் இப்பாடல்களை **speakers** மூலம் கேட்டபோது மெய்சிலிர்த்தது. பெரும்பாலான நவீன நாடகங்களுக்கும் கண்ணன் அவர்கள் இசை அமைத்து வருகிறார். அவர் அன்றே இசையமைத்த "யுகதர்மம்" நாடகப் பாடல்களை மறக்க முடியுமா, என்ன?

யாழ்ப்பாணத்தின் இன்றைய கலையுலக நாயகனாக விளங்குபவர் பிரபல பாடகரும் நடிகருமான சாந்தன் என்பவர். வட இந்திய நடிகர்களைப் போன்று வாட்டசாட்டமான தோற்றம் கொண்ட இவர் ஈழத்தமிழனாகப் பிறந்துவிட்ட காரணத் தினால் சர்வதேச புகழடையக் கூடிய இவர் குடாநாட்டுக்குள் முடங்கி

இருக்கிறார் என்று அவரைப் பற்றிச் சொல்கிறார்கள். இனிய குரல் வளத்துடன் மிக லாவகமாகப் பாடுகிறார்.

சாந்தன் அரிச்சந்திரனாகவும் அரியாலையூர் செல்வம் சந்திரமதியாகவும் நடிக்கும் "மயான காண்டம்" தற்போதைய பிரபலமான இதிகாச நாடகமாகும். தோற்றத்தாலும், பாடலாலும், குரல் வளத்தாலும் நடிப்பாலும் உயர்ந்து நிற்கிறார் இந்த சாந்தன்.

*******

எந்த நேரத்திலும் எங்கு வேண்டுமானாலும் தனியாகப் பெண்கள் போய் வரக்கூடிய சூழ்நிலையே யாழ்ப்பாணத்தில் நிலவுகிறது. முன்பு போல் சந்திகளிலிருந்து பெண்களைக் கிண்டல் செய்வதை இப்போது காணமுடியாது. பெண்களைத் தீண்டுவது, கிண்டல் செய்வது போன்றவற்றுக்கு காவல்துறையினர் தண்டனை வழங்குகிறார்கள். தங்களுக்கு எதுவும் நடக்காது என்ற நம்பிக்கையில் பெண்கள் மிகவும் சுதந்திரமாகத் திரிவதை அவதானிக்க முடிந்தது.

தமிழீழ காவல் துறையின் தலைமையலுவலகம் பழைய பூங்காவில் உள்ள கச்சேரியின் பழைய கட்டிடத்தில் இயங்கி வருகிறது. அதன் வாசலில் பொலிசார் எந்நேரமும் காவல் கடமையில் ஈடுபட்டிருப்பதைக் காணலாம். காவல் துறையினர் ஊர்களில் நடக்கும் பிரச்சனைகள், குடும்ப சச்சரவுகளை தீர்த்து வைப்பதில் மும்மரமாக செயல்பட்டு வருகின்றனர். இவர்களால் சமரசமாக தீர்த்து வைக்க முடியாத பிரச்சனைகள் தமிழீழ நீதிமன்றங்களுக்கு பாரப்படுத்தப்படுகின்றன. மேலும் போக்குவரத்து நடைமுறைகளும் இவர்களாலேயே கண்காணிக்கப்படுகின்றன. பெரும்பாலான பெண் பொலிசாரும் பல்வேறு கடமைகளில் ஈடுபட்டுவருவதை எங்கும் அவதானிக்க முடிந்தது. காவல்துறையினர் மிகவும் திறமாகச் செயல்பட்டாலும் ஆங்காங்கே சிறு சிறு களவுகள் நடைபெறத்தான் செய்கின்றன. கும்மிருட்டு இதற்கு முக்கிய காரணம்.

தமிழீழ நீதிமன்றங்கள் ஆங்காங்கே காணப்படுகின்றன. நீதி மன்றங்கள் இயங்குவதற்கென்று பழையதான, வளைவான வடிவுடைய கட்டிடங்களை இயக்கத்தினர் பொறுப்பெடுத்துள்ளனர். நீர்வேலியிலுள்ள நீதிமன்றத்து நீதிபதி வழக்கு முடிந்து வீதியில் நடந்து போனதைப் பார்த்தேன்.

இந்நீதிமன்றத்தில் தமிழீழ சட்டப் படிப்பை முடித்த இளைஞர்கள் வழக்கறிஞர்களாக இருக்கிறார்கள். தவிர இலங்கைச் சட்டக்கல்லூரியில் பயின்று பட்டம் பெற்றவர்கள் தமிழீழ நீதிமன்றத்தில் வழக்காட விரும்பின் தமிழீழச் சத்தியப்பிரமாணம் (தலைவர் பிரபாகரனின் பெயருட்பட) செய்ய வேண்டும். இலங்கை அரசுக்கு விசுவாசமான சத்தியப்பிரமாணமும் தமிழீழச் சத்தியப்பிரமாணமும் ஒன்றுக் கொன்று முரணாக இருப்பதால் எதிர்காலம் குறித்த கவலையில் இருதலைக்கொள்ளி எறும்பு போலுள்ளார்கள், அங்குள்ள வழக்கறிஞர்கள்.

******

# "பொய்க்கால்" நாடகம்

மாசி மாதம் 18ம் திகதியன்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்ற அ. சிதம்பரநாதனின் "பொய்க்கால்" என்ற நாடகத்தின் 14வது மேடையேற்றத்தினைப் பார்க்கின்ற சந்தர்ப்பம் கிடைத்தது.

10 ரூபா அனுமதிக் கட்டணத்துடன் அரங்கினில் நுழைந்தபோது மேலே fan சுழன்று கொண்டிருந்தது. கொழும்பு இராமகிருஷ்ண மண்டபத்துக்கு வந்துவிட்டோமா என்று எண்ணத் தோன்றும் அக்கலையரங்கில் குறிப்பிட்டபடி மாலை 4.00 மணிக்கு நாடகம் ஆரம்பமாகியது.

தமிழரின் மானம், வீரம் பற்றியும் தமிழின் செழுமை பற்றியும் கூறப்படும் கண்ணன் இசையமைத்த நாட்டுப்பாடல் மெட்டிலமைந்த அருமை யான பாடலொன்றுக்கு 20க்கு மேற்பட்ட ஆண்கள், பெண்கள் கலந்து கொண்ட ஒரு ஆட்ட நிகழ்வுடன் நாடகம் ஆரம்பமாகியது. இதன் முதன்மை நர்த்தகி காய்ந்த பனை ஓலை ஒன்றை ஏந்தியவாறே ஆடியது குறிப்பிடத்தக்கது.

ஆட்ட முடிவில் பணப்பேய்கள் மேடைக்கு வர இவர்களுக்கும் பணப்பேய் களுக்கும் போராட்டம் நிகழுகிறது. நடனக் குழுவிலிருந்து வீராவேசமாக இளைஞன் எழுவதும், பணப்பேய்களுடன் குடும்பச் சுமையும் சேர தாயானவள் எழுகின்ற இளைஞனைத் தடுப்பதுமாக நாடகம் தற்போ தைய யாழ்ப்பாணத்தின் மனோநிலையைத் தொட்டுச் செல்கிறது.

யாழ்ப்பாணத்தில் ஒவ்வொரு நாளும் இளைஞர்கள் இயக்கத்தில் சேர்ந்துகொண்டே இருக்கிறார்கள். ஆயினும் சில இடங்களில் குடும்பப் பொறு ப்பைக் காரணம் காட்டி (வெளிநாட்டுக்கு அனுப்புவதும் உட்பட) தாய்மார்கள் முகாமிலிருந்து தங்கள் பிள்ளைகளை அழைத்துவருகிற சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

நாடகத்தின் இடையே சிதம்பரநாதன் அவர்கள் மேடையில் வைத்து இளைஞனையும் தாயையும் பேட்டி காண்பது புதுமையாக இருந்தது.

இந்த நாடகம் பணம் தான் வாழ்க்கை என்று வெளிநாடு வந்தவர் களுக்குச் சாட்டை அடி கொடுக்கிறது. எனக்குத் தோலுரிந்தது போல் இருந்தது.

எழுச்சி பெற்ற இளைஞனைக் கண்டித்து வைப்பதற்காக பணப்பேய்கள் ஊர்ப் பெரியவரின் உதவியை நாடுகிறார்கள். மரத்தாலான பொய்க்கால் அணிந்த இந்தப் பெரியவரின் நடிப்புத்தான் இந்நாடகத்தின் ஜீவநாடி.

ஐயா வாங்கோ என்று எடுபிடிகள் சேவகம் செய்ய சபையோருக்குள்ளால் அவர் நடந்துவந்த காட்சி மிகவும் அட்ட காசமானது.

"ஓ..... அது.... அது ஓ... அவரே... சரி சரி.... இது ... ஆர்?
ஓமோம்... அட இவரே.... இருங்கோ இருங்கோ....
நீங்கள்......? ஓ...... அவரின்ர இவர்... ஆ..... ஆ...."

இவ்வாறு மேடையேறும் வரை சபையிலிருந்தவர்களைக் காட்டி இவர் கும்புடு போட்டவாறு பேசிக் கொண்டு போனது மறக்கமுடியாத நடிப்பு.

"என்னடா தம்பி நல்லாப் படிக்கிறியாம்..... அ.....அ....அ...
(நல்லது என்ற தோறணையில்)

இயக்கம் எண்டு திரியிறியாம்..... ஆஅ...ஆஅ...ஆஅ...
(இது சரியில்லை என்ற தோரணையில்)
இவ்வாறு வசனத்தை மிக லாவகமாகப் பேசி நடிக்கிறார்.

"கோடையில்" நாயனக்காரராக வரும் பிரான்சிஸ் ஜெனம், "மழை"யில் டாக்டராக வரும் சுகந்தன், "அரையும் குறையும்" இரா. ஸ்ரீநிவாசன், "யுகதர்மம்" நாடகத்தில் முதலாளியாக வரும் ரவி போன்ற மறக்க முடியாத நாடகப் பாத்திரங்களுடன் இந்தப் "பெரியவரை"யும் இலகுவாகச் சேர்த்து விடலாம்.

"பொய்க்கால்" நீண்ட நாட்களுக்குப் பிறகு பார்த்த ஒரு அருமையான நாடகம்.

"சமூக மாற்றத்துக்கான அரங்கு" என்ற அ. சிதம்பரநாதனின் புத்தகம் அப்போது அச்சில் இருந்ததாக அறிந்தேன். தற்போது வெளிவந்திருக்கக் கூடும்.

*******

சிறந்த நாடகாசிரியரும் யாழ். நாடக அரங்கக் கல்லூரியின் ஸ்தாபகரும் யாழ் பல்கலைக் கழக நாடக விரிவுரையாளருமான குழந்தை ம. சண்முக லிங்கம் அவர்களை திருநேல்வேலியிலுள்ள அவரது இல்லத்தில் சந்தித்தேன்.

பாடசாலைகளுக்கும் பல்கலைக்கழகத்துக்கும் நாடகங்கள் எழுதுவதில் மும்முரமாக இருக்கும் அவரிடம் ஏதாவது எழுதிய நாடகப் பிரதிகள் இருக்கிறதா என்று கேட்டதற்குத் தனக்கே உரித்தான நகைச்சுவைப் பாணியில் "நாடகம் எழுதச் சொல்லி பிரதிகளை வாங்கிக் கொண்டு போகிறவர்கள் பின்னர் பிரதி உபகாரம் செய்கிறார்கள் இல்லை" என்று சிலேடையாகச் சொன்னார். அதாவது கொண்டு சென்ற பிரதிகளை திருப்பித் தருவதில்லை என்ற அர்த்தத்தில்.

பத்திரிகைகளில் சாதாரணமாக வரும் "கண்ணீர் அஞ்சலி" களை மையமாகக் கொண்டு மரணத்தின் வலிமையை உணர்த்தும் நாடகமொன்றை இவர் தற்போது தயாரித்து வருகிறார்.

*******

நான் நின்ற நாட்களில் முல்லைத்தீவுக் கலைஞர்களால் "பாயும் புலி பண்டாரவன்னியன்" என்ற நாடகமும் ஒரு அரசியல் நாடகமும் (நாட்டுக்கூத்து கலந்த) வடபகுதிகளில் அரங்கேறி வந்தன.

இக்கலைஞர்களை தலைவர் பிரபாகரன் விழாவில் வைத்துக் கௌரவித்ததாகப் பத்திரிகைகளில் பின்னர் காண முடிந்தது.

*******

## எனது ஊர்

நான் பிறந்து வளர்ந்த "அரியாலை "பற்றி எழுதுவது இவ்விடத்தில் பொருந்தும் என நினைக்கிறேன்.

அரியாலை மக்களால் பாரம்பரியமாக ஒவ்வொரு வருடப்பிறப்பு

அன்றும் கொண்டாடிவரும் சுதேசிய திரு நாள் விழா 75 வருடங்களாகி இவ்வருடம் பவளவிழாவாக கொண்டாடப்படுகிறது. தாச்சிப் போட்டி, கரப்பந்தாட்டம், உதை பந்தாட்டம், எறிபந்தாட்டம், மாட்டுவண்டில் சவாரி, நாடகப் போட்டி, 25 மைல் மரதன், 50 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டிகள் என்று வெகு விமரிசையாக நடைபெறுகிறது.

அரச அதிபருக்கு அடுத்தபடியாக உள்ள திட்டப் பணிப்பாளராகக் கடமை மயாற்றும் ஊரவரான திரு. செ. பத்மநாதன் அவர்கள் தலைமையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இரவுக் கலைநி கழ்ச்சிகள் அரியாலை காசிப்பிள்ளை அரங்கிலும் விளையாட்டுப் போட்டிகள் மத்திய விளையாட்டு மைதானத்திலும் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. எல்லாளன் பற்றிய வரலாறு நாடகம் மேடையேற்றுகிறார்கள்.

மேலும் அரியாலை சரஸ்வதி நூல் நிலையம் வைத்திய கலாநிதி கணேசரட்ணம் அவர்களின் தலைமையில் சிறப்பாக இயங்கி வருகின்றது. அரியாலை சனசமூக நிலையத்தினரின் நூல் இரவல் பகுதியும் அழகான சிறுவர்



அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம்

பூங்காவும் மிகவும் பிரயோசனமாக இருக்கின்றன்.

ஸ்ரான்லி கல்லூரி தற்போது கிரிக்கற் ஆட்டத்தில் முன்னணியில் நிற்கிறது. ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையின் அதிபராக திரு. நடராசா அவர்கள் கடமையாற்றுகிறார்.

அம்மன் கோவில் புதிய கோபுரத்தின் பூச்சு வேலைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

பாரிய வளவுகளை உள்ளடங்கிய விடுதலைப் புலிகளின் மாதர் அணியினரின் முக்கியமான தளம் ஒன்று அரியாலையில் உள்ளது. மேலும் இரு புலிவீரர்களின் முகாம்களும் உள்ளன. ஒன்றில் நவீன முறையில் அமைந்த பங்கரும் இருப்பதாகச் சொல்கிறார்கள். இவையெல்லாம் எங்கு இருக்கின்றன என்று மட்டும் கேட்டுவிடாதீர்கள்.

என்ன தான் வீடுகளை எடுத்தாலும் ஊரில் பொட்டம்மான், சந்தோஷம், பானு, பசீர் காக்கா ஆகியோரின் பெற்றோர்க்ள் இன்னமும் தமது பழைய பழுதான வீடுகளிலேயே இருக்கிறார்கள்.

அரிவு வெட்டுக்காலமா,கையால் வயல்களில் வழமைபோல் வேலைகள் நடைபெறுகின்றன.

கிழக்கு அரியாலைக்கு ஐயனார் கோவில் தாண்டிச் செல்வது மட்டுப்படுத்தப்படுகின்றது. பூனகரித் தாக்குதலின் போது இப்பகுதி பாவிக்கப்பட்டதாக அறிந்தேன்.

மற்றும்படி, ஊரில் நிறையவே பிற இடங்களைச் சேர்ந்தவர்கள் குடியிருக்கிறார்கள். இவன் ஆர் ஒரு பிறத்தியான் வந்து போகிறான் என்பது போல் என்னைப் பார்த்தார்கள்.

இந்தத் தெருவழியே நடக்கையில்
அய்யாவின் தோளிற் தொங்கிய சால்வையும்
அம்மாவின் மார்பை மூடிய ரவிக்கையும்
பருத்திச் சீலைதான், என்றாலும்
சரிகை வைத்த பட்டைவிட அழகானவை
என் அம்மாவும் அய்யாவும்
எனக்கு வைத்த நீண்ட பேர்
மிகவும் பழையது தான். என்றாலும்
எந்தக் கவிதையையும் விடக் கேட்க இனியது
பாடசாலையில் நான் அமர்ந்த பழங்கதிரை
மலிவான பலகைதான் என்றாலும்
எந்தச் சிம்மாசனத்தினும் சிறப்பானது
சிற்றுண்டிச்சாலையில் நான் உறிஞ்சும் கிண்ணம்
உள்நாட்டுப் பீங்கான் தான் என்றாலும்
மணிபதித்த பொற்கிண்ணத்திலும் விலை யுயர்ந்தது
நான் நுழைகின்ற ஆலயமோ
உலகப் புகழ் பெற்றதல்ல என்றாலும்
மதுரையையும் தஞ்சையையும் விட மகத்தானது
ஊர்க் கிணற்றில் அள்ளிக் குளிக்கின்ற நீரோ
உவர்ப்பானது, என்றாலும்
கங்கையையும் காவிரியையும் விடப் புனிதமானது.

- சி. சிவசேகரம்

**6.** நான் திரும்பிவர வேண்டிய நாள் அண்மித்து விட்டது. அதிலும் தேர்தல் காலத்தில் பிரச்சினைகள் வரலாம் என்பதால் மூன்று நாட்கள் முன்னதாகவே போகும்படி நண்பர்கள் வற்புறுத்தியதால் எனது ஒன்பதாவது நாள் புதனன்று திரும்புவதற்கு முடிவெடுத்தேன்.

ஊரில் சில இடங்களை பார்க்க வேண்டும்.

நான் எமது வயல்வெளியைப் பார்த்தேன். சடைச்சி ஆச்சி இன்னமும் வயலில் வேலை செய்து கொண்டிருக்கிறா.

சித்துப்பாத்தி மயானத்தில் போய் நின்றேன். இந்த மண்ணில் எரியமாட்டேன் என்று ஏதோ என் மனம் சொல்லிற்று. மணியத்தார் பாடுகின்ற "கடுகி நடந்து சுடலை அடைந்து...." பட்டினத்தார் பாடல் நினைவில் வந்தது.

நான் நாடகங்கள் நடித்த மேடையில் ஏறி நடந்தேன். அந்த ஆர்மோனிய இசையைக் கேட்க வேண்டும் போலிருந்தது.

கிளித்தட்டு, கிறிக்கற் சுற்றுப் போட்டிகள் நடைபெறுகின்றன. முன்பு என்றால் நாங்கள் எவ்வளவு மும்மரமாய்...

சந்தை களைகட்டியிருக்கிறது. ஆனால் மீன்கார சின்னப்பிள்ளை அன்று வரவில்லை.

கோயில் கிணற்றில் தண்ணீர் அள்ளிக் குடித்தேன். முகம் கழுவினேன்.

எவ்வளவு சுகமாக இருக்கிறது.

நாங்கள் முன்பு குந்தியிருந்து போறவாற ஆட்களுக்கு பகிடிகள் பண்ணுகிற சிற்றம்பலம் டீம் மரக்குற்றிகளை யாரோ விறகுக்ககாக எடுத்துச் சென்றிருக்க வேண்டும்.

இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டதாகக் கருதப்படும் சுமைதாங்கி எனது துணைவியின் வீட்டின் முன்னால் உறுதியாக இருக்கிறது.

முன்னால், களவாக இளநீர் பிடுங்கிக் குடித்த "அரஸ்கோ" வளவுத் தென்னைமரம் இன்னமும் நிமிர்ந்தபடி.....

நடு இரவில் வளவுகளிலுள்ள கிடுகுவேலித் தட்டிகளைக் கழற்றிக் கொண்டு போய் சிறுசிறு ஒழுங்கைகளை மறித்துக் குறுக்காகக் கட்டிவிடுகிற குறும்பும்... வாசிகசாலை மைதானத்தைப் பெரிதாக்கப் பக்கத்திலிருந்த கோயில் காணி வேலிகளைப் பிடுங்கி இரவோடு இரவாக மரங்கள் வெட்டித் தறித்ததும்

வாசிகசாலை நிர்வாகத்தைக் கைப்பற்றி சீர்திருத்தங்கள் செய்ததும்

நாடக நடிகர்கள் பார்வையாளருக்குப் பின்பக்கத்தைக் காட்டக் கூடாது என்ற பாமரத்தனத்தை மாற்ற நான் பட்டபாடுகள்...

வடக்குக் கிழக்குப் புகழ் வரதராஜப் பெருமாளையும் (75 இல்) பின்னர் இன்றைய மாபெரும் பேச்சாளராக இருக்கும் கம்பன் கழக இ. ஜெயராஜ் ஐயும் சைக்கிளில் ஏற்றி வந்து வாணி விழா பட்டிமன்றங்கள் வைத்ததும்..."

கிருபானந்தவாரியார் அவர்களை அழைத்து வந்து கதாப்பிரசங்கம் செய்வித்ததும்

இவ்வாறு எவ்வளவு நினைவுகளை விட்டுவிட்டு வந்து விட்டேன்.

அம்மா கவனமாக மடித்து வைத்திருந்த கறுத்தக் கரை போட்ட

பாரிய வளவுகளை உள்ளடங்கிய விடுதலைப் புலிகளின் மாதர் அணியினரின் முக்கியமான தளம் ஒன்று அரியாலையில் உள்ளது. மேலும் இரு புலிவீரர்களின் முகாம்களும் உள்ளன. ஒன்றில் நவீன முறையில் அமைந்த பங்கரும் இருப்பதாகச் சொல்கிறார்கள். இவையெல்லாம் எங்கு இருக்கின்றன என்று மட்டும் கேட்டுவிடாதீர்கள்.

என்ன தான் வீடுகளை எடுத்தாலும் ஊரில் பொட்டம்மான், சந்தோஷம், பானு, பசீர் காக்கா ஆகியோரின் பெற்றோர்க்ள் இன்னமும் தமது பழைய பழுதான வீடுகளிலேயே இருக்கிறார்கள்.

அரிவு வெட்டுக்காலமா,கையால் வயல்களில் வழமைபோல் வேலைகள் நடைபெறுகின்றன.

கிழக்கு அரியாலைக்கு ஐயனார் கோவில் தாண்டிச் செல்வது மட்டுப்படுத்தப்படுகின்றது. பூனகரித் தாக்குதலின் போது இப்பகுதி பாவிக்கப்பட்டதாக அறிந்தேன்.

மற்றும்படி, ஊரில் நிறையவே பிற இடங்களைச் சேர்ந்தவர்கள் குடியிருக்கிறார்கள். இவன் ஆர் ஒரு பிறத்தியான் வந்து போகிறான் என்பது போல் என்னைப் பார்த்தார்கள்.

இந்தத் தெருவழியே நடக்கையில்
அய்யாவின் தோளிற் தொங்கிய சால்வையும்
அம்மாவின் மார்பை மூடிய ரவிக்கையும்
பருத்திச் சீலைதான், என்றாலும்
சரிகை வைத்த பட்டைவிட அழகானவை
என் அம்மாவும் அய்யாவும்
எனக்கு வைத்த நீண்ட பேர்
மிகவும் பழையது தான். என்றாலும்
எந்தக் கவிதையையும் விடக் கேட்க இனியது
பாடசாலையில் நான் அமர்ந்த பழங்கதிரை
மலிவான பலகைதான் என்றாலும்
எந்தச் சிம்மாசனத்தினும் சிறப்பானது
சிற்றுண்டிச்சாலையில் நான் உறிஞ்சும் கிண்ணம்
உள்நாட்டுப் பீங்கான் தான் என்றாலும்
மணிபதித்த பொற்கிண்ணத்திலும் விலை யுயர்ந்தது
நான் நுழைகின்ற ஆலயமோ
உலகப் புகழ் பெற்றதல்ல என்றாலும்
மதுரையையும் தஞ்சையையும் விட மகத்தானது
ஊர்க் கிணற்றில் அள்ளிக் குளிக்கின்ற நீரோ
உவர்ப்பானது, என்றாலும்
கங்கையையும் காவிரியையும் விடப் புனிதமானது.

- சி. சிவசேகரம்

# 6.

நான் திரும்பிவர வேண்டிய நாள் அண்மித்து விட்டது. அதிலும் தேர்தல் காலத்தில் பிரச்சினைகள் வரலாம் என்பதால் மூன்று நாட்கள் முன்னதாகவே போகும்படி நண்பர்கள் வற்புறுத்தியதால் எனது ஒன்பதாவது நாள் புதனன்று திரும்புவதற்கு முடிவெடுத்தேன்.

ஊரில் சில இடங்களை பார்க்க வேண்டும்.

நான் எமது வயல்வெளியைப் பார்த்தேன். சடைச்சி ஆச்சி இன்னமும் வயலில் வேலை செய்து கொண்டிருக்கிறா.

சித்துப்பாத்தி மயானத்தில் போய் நின்றேன். இந்த மண்ணில் எரியமாட்டேன் என்று ஏதோ என் மனம் சொல்லிற்று. மணியத்தார் பாடுகின்ற "கடுகி நடந்து சுடலை அடைந்து...." பட்டினத்தார் பாடல் நினைவில் வந்தது.

நான் நாடகங்கள் நடித்த மேடையில் ஏறி நடந்தேன். அந்த ஆர்மோனிய இசையைக் கேட்க வேண்டும் போலிருந்தது.

கிளித்தட்டு, கிறிக்கற் சுற்றுப் போட்டிகள் நடைபெறுகின்றன. முன்பு என்றால் நாங்கள் எவ்வளவு மும்மரமாய்...

சந்தை களைகட்டியிருக்கிறது. ஆனால் மீன்கார சின்னப்பிள்ளை அன்று வரவில்லை.

கோயில் கிணற்றில் தண்ணீா அள்ளிக் குடித்தேன். முகம் கழுவினேன்.

எவ்வளவு சுகமாக இருக்கிறது.

நாங்கள் முன்பு குந்தியிருந்து போறவாற ஆட்களுக்கு பகிடிகள் பண்ணுகிற சிற்றம்பலம் டீம் மரக்குற்றிகளை யாரோ விறகுக்ககாக எடுத்துச் சென்றிருக்க வேண்டும்.

இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டதாகக் கருதப்படும் சுமைதாங்கி எனது துணைவியின் வீட்டின் முன்னால் உறுதியாக இருக்கிறது.

முன்னால், களவாக இளநீர் பிடுங்கிக் குடித்த "அரஸ்கோ" வளவுத் தென்னைமரம் இன்னமும் நிமிர்ந்தபடி.....

நடு இரவில் வளவுகளிலுள்ள கிடுகுவேலித் தட்டிகளைக் கழற்றிக் கொண்டு போய் சிறுசிறு ஒழுங்கைகளை மறித்துக் குறுக்காகக் கட்டிவிடுகிற குறும்பும்... வாசிகசாலை மைதானத்தைப் பெரிதாக்கப் பக்கத்திலிருந்த கோயில் காணி வேலிகளைப் பிடுங்கி இரவோடு இரவாக மரங்கள் வெட்டித் தறித்ததும்

வாசிகசாலை நிர்வாகத்தைக் கைப்பற்றி சீர்திருத்தங்கள் செய்ததும்

நாடக நடிகர்கள் பார்வையாளருக்குப் பின்பக்கத்தைக் காட்டக் கூடாது என்ற பாமரத்தனத்தை மாற்ற நான் பட்டபாடுகள்...

வடக்குக் கிழக்குப் புகழ் வரதராஜப் பெருமாளையும் (75 இல்) பின்னர் இன்றைய மாபெரும் பேச்சாளராக இருக்கும் கம்பன் கழக இ. ஜெயராஜ் ஐயும் சைக்கிளில் ஏற்றி வந்து வாணி விழா பட்டிமன்றங்கள் வைத்ததும்..."

கிருபானந்தவாரியார் அவர்களை அழைத்து வந்து கதாப்பிரசங்கம் செய்வித்ததும்

இவ்வாறு எவ்வளவு நினைவுகளை விட்டுவிட்டு வந்து விட்டேன்.

அம்மா கவனமாக மடித்து வைத்திருந்த கறுத்தக் கரை போட்ட

# கிளாலிப் பயணம்


எனது கிளாலிக்கான பயணம் ஆரம்பமாகிவிட்டது.

தோளில் ஒரு பையுடன் ஸ்கூட்டரின் பின்னால் நான்.

நான் போய் இறங்கிய போது சின்னம்மா வீட்டுக்குப் போன அம்மா வைத் தேடிப் போக வழியில் என்னைக் கண்டு அம்மா திடுக்கிட்டது தொட க்கம் இப்ப வாசலில் அழுதுகொண்டு நின்றது வரை எல்லாமே கனவு போல் இருக்கிறது.

புங்கன் குளம் சந்தி....., மாம்பழச் சந்தி. என்று வண்டி கண்டி வீதி வழியாக நாவற்குழி, கைதடி என்று செல்கிறது.

பள்ளத்துக்குத் தப்பித் தப்பி... வளைந்து வளைந்து... துள்ளித்



துள்ளி...... வண்டியை இறுகப் பற்றிக் கொள்கிறேன்.

வழியில் வீதிப் பிள்ளையாரை வழிபட வண்டி நிற்கிறது.

அங்கு நின்ற இருவர், "அவசரமான கடிதம். கொழும்பில் போட்டுவிடுங்கோ" என்று கடிதங்கள் தருகிறார்கள். வாங்கி வைத்துக் கொண்டேன்".

சாவகச்சேரிச் சந்தியில் தாக்கு தலுக்குள்ளான பொலிஸ் நிலையம் கூரை, யன்னல்களை இழந்து நிற்கிறது.

சந்தையடியில் விமானத் தாக்குதல்கள் நடந்ததற்கான அடையாளங்கள் தெரிகின்றன.

கிளாலி வள்ளத்துக்கு சாவகச்சேரியினூடாகவும் போகலாம். ஆனால் கொடிகாமத்திலுள்ள ஆனையிறவில் மரித்த மாவீரர் சமாதியைப் பார்ப்போமா

என்று ஸ்கூட்டர் தம்பியைக் கேட்ட போது சம்மதித்தார்.

வழியில் பின்சில்லின் காற்றுப் போய் அடுத்த சந்திவரை நடந்தே போனோம். மூன்று ஒட்டுக்கள் ஒட்டி வண்டி திரும்பவும் **start** ஆக பிற்பகல் 1 மணியாகிவிட்டது.

கொடிகாமம் எல்லாம் கடந்து பளையை அண்மித்த சந்தியொன்றில் வண்டி இடதுபக்கமாகத் திரும்புகிறது.

கல்லு மண் வீதி

வேலிக் கரையோரமாக ஸ்கூட்டரை சாதுரியமாகச் செலுத்துகிறார். வீதியின் ஓரிடத்தில் முழுங்கால் அளவுக்குத் தண்ணீர் 50 யார் தூரம் வரை இருக்கிறது. தையில் பெய்த பெருமழை இன்னும் வற்றவில்லை.

ஆதலால் வாகனங்களை ஒரு பெரும் தென்னம் தோப்புக்குள்ளால் திசை திருப்பியுள்ளார்கள். பாதையும் சமைத்து.

தென்னந் தோட்டத்தில் ஸ்கூட்டர் சில்லு நின்று கொண்டே சுழன்றதால் நீண்ட தூரம் நடந்து போனோம்.

ஒரு தேனீர் கடை, **Bus stand** 2 தட்டி வான்கள், என்று இருந்த ஒரு சந்தியைக் காட்டி இது தான் கிளாலிச் சந்தி என்றார். பரபரப்பாகப் பேசப்படும் சந்தியா இது என்ற எண்ணத் தோன்றியது. அங்கிருந்து அல்லைப்பளை இலுள்ள வள்ளத்துக்கான டிக்கற் வாங்குகிற பாரிய தென்னந் தோட்டத்துக்குள் நுழைந்த போது பிற்பகல் 2 மணியாகி விட்டது.

அங்கு ஒரு சாப்பாட்டுக் கடை இயங்குகிறது.

வெய்யில் களைப்பு— தாகம் எடுத்தது

ஒன்றும் குடிக்கவில்லை

பசித்தது. எதுவும் சாப்பிடவில்லை.

வரிசையில் போய் டிக்கற் வாங்கிய போது எனக்கு 60வது வள்ளத்துக்கான டிக்கற் தரப்பட்டது. கட்டணமாக 200 ரூபா அறவிடுகிறார்கள்.

நிழலாய்ப் பார்த்து விழுந்து கிடந்த ஒரு தென்னைமரக் குற்றியில் ஆற அமர்ந்து கொள்கிறேன்.

சுற்றிப் பார்க்கும் இடமெல்லாம் காணப்படும் நிழல்களைப் பற்றிப் பிடித்தபடி மனிதக் கூட்டங்கள்.

வயதுவந்த, வயதுபோன ஆண்களும், பெண்களுமே அநேகமாக, கையில் பெட்டிகளும் மூட்டை முடிச் சுகளும், சிலர் கைக்குழந்தைகளுடன்...

சிலர் எதிர்காலத்தைப் பறி கொடுக்கப் போகிறவர்கள் போலவும்..

சிலர் எதையோ எதிர்பார்ப்பவர்கள் போலவும்...

சிலர் சிரித்துக் கதைத்தபடி..

சிலர் சீரியசாக விவாதித்தபடி

ஒரு முன்னிரவில் **Bus** அல்லது**train** இல் ஏறி ஒரு படுக்கை யுடன் வீடு போய்ச் சேருகிற இந்தச் சனங்களுக்கு இன்றைக்கு என்ன நடந்துவிட்டது.

பின் பக்கம் திரும்பிப் பார்த்தபோது 50 யார் தொலைவில் லொறிகள், வான்கள் சாமான்களை இறக்கிக் கொண்டிருந்தன. அது சாமான்கள் போகிற பாதையாம்.

எனக்கு அருகிலிருந்தவர் தான் கொண்டு வந்த ரேடியோவைப் பெரிதாகப் போட்டுக் கொண்டு கதாநாயகன் போல் வீற்றிருந்தார்.


இலங்கை வானொலியில் துள்ளிசை நிகழ்ச்சியில் ராமச்சந்திரனின் வானநிலவில் அவளைக் கண்டேன் நான்" பாடல் ஒலிபரப்பாகிறது.

உண்மையில் அன்று நல்ல நிலவு எறித்தது.

பாடலை ரசிக்கிற நிலையில் நான் இருக்கவில்லை. வானநிலவில் கெலியில் இருந்து பார்த்தால் வள்ளங்கள் வடிவாகத் தெரியுமே என்ற பயம் வேறு.

இவர்களில் பெரும்பாலாரோடு நான் வவுனியா வரை போகவேண்டும். யார் யார் எந்தத் தோட்டத்து மல்லிகையோ தெரியாது என்பதால் அதிகம் அரசியல் கதைக்கவில்லை.

இடையிடையே பனங்கிழங்கு, மலிபன் பிஸ்கட், பணிஸ், வெத்திலை பாக்கு விற்கிற சிறுவர்கள் வந்து கத்திவிட்டுப் போனார்கள்.



துப்புதல், காறித்துப்புதல், விரல் வைத்துத் துப்புதல் என்பன நடக்கின்றன.

முகத்தைக் கழுவுவம் என்று தூர இருந்த கிணற்றடிக்குப் போய்ப்பார்த்த போது கிணற்றின் அடியில் மணல் தெரிந்தது.

5 மணியாகும் போது கொஞ்சம் கொஞ்சமாக களைகட்டத் தொடங்கியது. தடியில் கட்டிய எண்ணைப் பீப்பாக்களையும், எஞ்சின்களையும் முன்னும் பின்னுமாக சுமந்த வண்ணம் வரிசை வரிசையாக வள்ளமோட்டிகள் செல்லத் தொடங்குகிறார்கள்.

அங்குள்ள போக்குவரத்துத் துறையைச் சேர்ந்த ஒருவர் வள்ளத்துக்கான இலக்கங்களைக் கூப்பிட்டு வரிசை வரிசையாக இருத்துகிறார்கள். ஒரு வள்ளத்துக்கு 15 பேர் படி 98 வள்ளங்களுக்கு அன்று டிக்கற்றுக்கள் கொடுத்திருக்கிறார்கள் என்பதை அப்போது தான் அறிந்து கொண்டேன்.

மாலையாகிறது. ஆனாலும் நிலவு எறிக்கிறது.

அதிசயமாக கடற்கரையிலிருந்து அதிவேகமாக ஒரு வான் வந்து நின்று பின் விரைந்து செல்கிறது. மணலாற்றில் நடந்த ஒரு தாக்குதலில் காயப்பட்ட இரு புலிவீரர்களை யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகிறார்கள். என்று சொன்னார்கள்.

"சண்டை எங்கேயோ நடந்திருக்கு. சிலவேளை ஏதாவது நடக்கலாம்" பயப்படுத்தினார்கள்.

6.30 மணியளவில் மாவீரர் குடும்பம், போராளிகள் குடும்பம், கன்னியாஸ்திரிகள், பொதுசன ஊழியர்கள், என்று ஒரு 150 பேர்வரை சென்றார்கள். அதன் பின்னர் வள்ள இலக்கங்களின் படி டிக்கற்றுக்ளைப் பரிசோதித்து ஒற்றை வரிசையில் செல்லச் சொன்னார்கள்.

எனது நேரம் வந்தபோது 8.30 ஐத் தாண்டிவிட்டது. முக்கால் மைல தூரம் நடந்து கடற்கரையை அடை ந்தேன்.

முன்னர் **Navy** அடித்த வள்ளமொன்று கரையில் கருகியபடி கிடக்கிறது. காட்சிப் பொருளாய்.

பயணத்தின் பயங்கரமான கட்டத்துக்கு வந்துவிட்டேன். கடலைக் கடந் தால் தான் நான் என் மனைவியையும் மகளையும் காணமுடியும்.

எங்கும் எஞ்சின்களின் இரைச்சல் சத்தமாக இருக்கிறது.

எங்களைப் போலவே வள்ளமோட்டிகளும் வரிசையாக இறங்குதுறையில் குந்தியிருக்கிறார்கள்.

கரையிலிருந்து அரைமைல் தூரத்தில் வள்ளங்கள் வெள்ளமாக நிற்கின்றன.

எமது நீண்ட ஒற்றை வரிசையினை 15 பேர், 15 பேராகப் பிரித்து, ஒவ்வொரு வள்ளமோட்டியின் பின்னால் அதே வரிசையில் போகிறோம். இவ்வாறு நாலா திசையிலும் குட்டி வரிசைகள் கடலுக்குள் நடந்து போயின. தோளிலும் தலையிலும் சுமையுடன். இது சிறுவயதில் நாம் விளையாடிய "சுக்கு புக்கு**Train**" ஐ நினைவுபடுத்தியது.

நிலவொளியில் இந்த வரிசைகள் அழகாக இருந்தன.

தோளில் பையுடனும் கையில் செருப்புடனும் நடந்த எனக்கு இனி மேலும் **pants** இழுக்க முடியாது என்றளவுக்கு தண்ணீர் முழங்காலுக்கு மேல் வந்து விட்டது.

எமது வரிசையில் வந்த இரு பெண்களை முதலில் ஏற்றிவிட்டு மேலும் வள்ளத்தைத் தள்ளியவாறு ஓட ஓட ஏறினோம்.

எல்லாம் நனைந்து விட்டது.

சிறிய மோட்டார் வள்ளம். அதன் விளிம்பில் சுற்றி இருக்க 15 பேர் கணக்காக இருக்கிறது. வள்ளம் ஓட்டுநர் ஆக்களை பருமனைப் பொறுத்து முன்னும் பின்னுமாக மாறி மாறிவிட்டு வள்ளத்தைச் சமநிலைப்படுத்துகிறார். எஞ்சினை **Start** பண்ணியதும் வள்ளம் ஓடத்தொடங்கியது. தொடங்கிய சிறிது நேரத்தில் பின்னால் வந்த வள்ளம் நீரினுள் அமிழ்ந்து அமிழ்ந்து வந்து கொண்டிருந்ததைக் கண்ட ஓட்டுநர் இரு வள்ளங்களையும் தொடச் செய்து அங்கிருந்து இருவரை எமது வள்ளத்தில் ஏற்றிக் கொண்டார். அந்த

வள்ளத்தில் வியாபாரிகள் கூட்டமும் மூட்டைகளும் நிரம்பி இருந்தன.'

இப்ப எமது வள்ளம் அமிழ்ந்து அமிழ்ந்து ஓடிக் கொண்டிருந்தது. இவ்வாறு எல்லா வள்ளங்களும் ஒவ்வொரு திசையில் ஓடிக்கொண்டன. சற்றுத் தள்ளி ஒரு பெரிய கப்பல் சாமான்கள் நிரப்பிய 10 வள்ளங்களையும் 2 தெப்பை களையும் இழுத்துக் கொண்டு கரையை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது.

நேரம் செல்லச் செல்ல அல்லைப்பளை துறையில் உள்ள கலங்கரை விளக்கமான ஒரேயொரு மின்குமிழின் ஒளி மெல்ல மெல்ல மறைந்துவிடுகிறது.

இதேபோல் புறப்பட்ட வள்ளங்களும் விலகி விலகி மறைந்து விடுகி ன்றன. என்ன திசைகாட்டியா வைத்திருக்கிறார்கள். ஒரே திசையில் போவதற்கு. ஆயினும் இரைச்சல் சத்தம் மட்டும் இடைவிடாது கேட்டுக் கொண்டிரு க்கிறது.

எங்கள் வள்ளத்தில் மயான அமைதி.

எனது கை கடலைத் தொட்டுக் கொண்டு வந்தது. வானையும் கடலையும் மாறி மாறிப் பார்க்கிறோம். எந்தவித அசம்பாவிதங்களுக்கான சாத்தி யக்கூறுகள் எதுவும் தென்படவில்லை. அலை அடித்துத் தெறித்த தண்ணீரில் நாம் தெப்பமானோம்.

உரப் பைக்குள் **Bag** ஐ வைத்துக் கட்டியிருந்தோம். முற்பாதுகாப்பாக பக்கத்திலிருந்த நண்பர் வள்ளத்துக்குள் இருந்த தண்ணீரை வழித்து எடுத்து வெயியே ஊற்றிக் கொண்டார். கரை எதுவும் தெரியாத நடுக்கடலில் நாங்கள் போய்க் கொண்டிருக்கிறோம். புறப்பட்டு **11/2** மணித்தியாலங்கள் ஆகிவிட்டது.

வள்ளமோட்டியின் மற்றவர் முன்னாலுள்ள கூர்ப்பகுதியில் மேலே நின்றவாறு இடைக்கிடை போகவேண்டிய திசை குறித்து கையைக் காட்டுகிறார்.

வேறு எங்காவது போய் இறங்கிவிட்டால்..??? பயமாக இருக்கிறது. சிறிது நேரத்தில் ஒரு வெளிச்சம் தெரிகிறது. வெளிச்சத்தை நோக்கி வள்ளம் போகிறது.

வெளிச்சம் அண்மிக்க அண்மிக்க எங்கோவெல்லாம் போய்க் கொண்டிருந்த வள்ளங்கள் எல்லாம் வெளிச்சத்தை நோக்கி வந்து கொண்டிருப்பது தெரிந்தது.

பார்க்க புதுமையாக இருந்தது.

சிறிது நேரத்தில் வள்ளங்கள் வரிசையாகி விட்டன. எமது வள்ளத்துக்கு முன்னாலும் பின்னாலும் வள்ளங்கள் நீண்டு கிடந்தன.

இறங்குதுறை வந்துவிட்டதாக்கும் என நினைத்த எனக்கு வெளிச்சத்தை அண்மித்தபோது ஏமாற்றமாகவும் ஆச்சரியமாககவும் இருந்தது.

கடலில், உயரத் தடிகள் நட்டு அதில் பரண் அமைத்து விடுதலைப் புலிகள் ஏறி இருந்து கொண்டு போற வாற வள்ளங்களைப் பதிவு செய்து கொண்டிருந்தார்கள். புறப்பட்ட வள்ளங்கள் அனைத்தும் வருகின்றனவா என்றும் வேறு வள்ளங்கள் ஊடுறுவல் செய்துள்ளனவா என்றும் பார்க்கிறார்கள்.

எதிராகவும் இப்போது வள்ளங்கள் வந்து கொண்டிருப்பது தெரிகிறது.

அங்கிருந்து 40 நிமிட ஓட்டத்தின் பின்னர் நல்லூர் இறங்கு துறையை அடைந்தோம்.

கரையில் வந்து இறங்கிய போது கால்கள் மண்ணுக்குள் முழங்கால்

வரை புதைந்து கொண்டன. ஒரு காலை வைப்பதும் மற்றைய காலை இழுத்து எடுப்பதுமாக கரையை அடைந்தேன். இதன் போது வயோதிபர்களும் குழந்தைகளைத் தூக்கி வந்த தாய்மாரும் பட்ட கஷ்டங்கள் சொல்ல முடியாதவை. அவைபற்றி பின்னர் எழுதுகிறேன்.

பின் மணல் வழியாக சேற்றுக் காலுடன் அரை மைல் நடந்த போது நீண்ட கியூ நின்றது. டிரக்டரில் ஏறுவதற்காக.

இந்த டிராக்டரில் தான் நல்லூரிலுள்ள பஸ், ஸ்கூட்டர் எடுக்கிற இடத்துக்குச் செல்லவேண்டும்.

யாழ்ப்பாணம் போகிறவர்களை கொண்டு வந்து இறக்கிவிட்டு டிராக்டர்கள் வரிசையில் நின்றவர்களை ஏற்றிக் கொண்டு போயின.

வரிசையில் இரு மணித்தியாலங்கள் நின்று பின், நனைந்த 30 ரூபாயைக் கொடுத்து டிக்கற் வாங்கி டிராக்டரில் ஏறினேன். டிராக்டர் வயல், வரம்புகள் ஏறித் தாண்டி ஒரு மணல்வீதியால் பிரதான வீதியை அடைந்து பள்ளங்களுக்குள் விழுந்து எழுந்து, எமைத் தூக்கி எறிந்து, குலுக்கி யவாறே அரை மணித்தியாலம் ஓடி நல்லூர் பிரதான சந்தியை அடைந்தது. சந்தியில் பெற்றோல்மாக்ஸ் வெளிச்சத்தில் 4 அல்லது 5 கடைகள் இயங்குகின்றன. கொத்து ரொட்டி போடுகிற சத்தம் காதைப்பிளக்கிறது. ஆங்காங்கே சில ஓலை வீடுகள் தெரிந்தன.

ஒன்றும் சாப்பிடவில்லை. பசி போய்விட்டது.

முன்னால் பஸ்களுக்கு ஆட்களைக் கூவி அழைத்தபடி இருந்தார்கள். இங்கிருந்து நாங்கள் புலிகளின் கடைசி **check point** உள்ள ஓமந்தைக்குப் போக வேண்டும்.

பஸ்ஸிற்கு 400 ரூபாவும் ஸ்கூட்டருக்கு 600 ரூபாவும் கேட்டார்கள். ஸ்கூட்டரில் போனால் விஷயங்களை அறிந்து போகலாம் என்று ஸ்கூட்டரை ஒழுங்குபடுத்தினேன்.

இப்போது நன்றாக இருட்டி விட்டது.

வழியில் ஸ்கூட்டர் சாரதி சேகர் வெள்ளமோடிய பழைய ஊரிக்காடு பாதையைக் காட்டினார். வாகனம் ஏறத்தாள, 1 மணித்தியாலம் ஓடி கரடிப்போக்குச் சந்தியை அடைந்தபோது இரு புலிவீரர்கள் ரோந்து சுற்றியவாறே நடந்து வந்து கொண்டிருந்தனர். கிளிநொச்சிச் சந்தியிலுள்ள வாகனவரி நிலையத்தில் தனது வரியைக் கட்டினார் சேகர். ஒவ்வொரு நல்லூர்— ஓமந்தை ஓட்டத்துக்கும் 50 ரூபா வரியாகக் கட்டவேண்டுமாம்.

வண்டி முருகண்டியை அடைந்தபோது அதிகாலை மூன்று மணி யாகிவிட்டது. சேற்றுக்காலை இப்போது தான் கழுவ முடிந்தது. பிள்ளையா ருக்குக் கற்பூரம் கொளுத்தி தேங்காய் உடைத்துக் கொண்டேன். கடைகள் வெறிச்சுப் போயிருந்தன.

முன்பு என்றால் பிள்ளையார், **KG Express, SVS, CJS,** பஸ்கள் என்று எவ்வளவு அமர்க்களமாக இருக்கும்.

சேகர் குட்டித் தூக்கம் போட்டார்.

நான் முழிச்சபடி இருந்தேன். தாண்டிக்குளம் தடைமுகாமும் தாண்டி விட்டால் நிம்மதி தான்.

5 மணியளவில் பற்பொடியால் பல்லைத் தீட்டி முகம் கழுவி 51/2

மணிக்கெல்லாம் ஓமந்தையை நோக்கிப் புறப்பட்டு விட்டோம்.

மாசிப் பனி பெய்தது. துவாயை எடுத்துப் போர்த்திக் கொண்டேன். வழியில் அஞ்சல் நிலையம் அநாதரவாகக் கிடந்தது.

முன்பு எம்மை பஸ்ஸிலிருந்து இறக்கித் தொல்லைகள் தருகிற மாங்குளம் ராணுவ முகாம் இருந்த இடம் இல்லாது நொருங்கிப் போயுள்ளது.

சற்றுத் தள்ளி **E.P.R.L.F.** இனர் முதன் முதலாக வைத்த கண்ணிவெடியில் பள்ளமான நிலம் அப்படியே இருக்கிறது.

புளியங்குளம் எங்கும் வெள்ளைக் கொடிகளும் மாவிலை தோரணங்களும் கட்டப்பட்டுள்ளன. முதல் நாள் மணலாறு தாக்குதலில் மரணமான விடுதலைப்புலி வீரர் கண்ணன் என்பவருக்கு அஞ்சலி செய்கிறார்கள்.

*******

## ஓமந்தையும் தாண்டிக்குளமும்

இவ்வாறு ஓமந்தையை அடைந்த போது காலை **7 1/2** மணியாகிவிட்டது. என்னை இறக்கி விட்டு சேகர் சென்றுவிட்டார்.

முதல் காலை குடித்த கோப்பியுடன் வயிறு இருக்கிறது.

8 மணியளவில் உத்தியோகஸ்தர்களை ஏற்றிக் கொண்டு விடுதலைப் புலிகள் வான் ஒன்று வந்து நின்றது.

வீதியின் வலப்பக்கம் சைக்கிள்கள் வரிசையாக நின்றன. இவர்கள் வியாபாரிகள். வவுனியா வரை சென்று அங்கிருந்து சாமான்கள் கொண்டு வருபவர்கள்.

வரிசையாக நின்ற பெண்களைப் பெண்களும் ஆண்களை ஆண்களுமாக மேலோட்டமாக **check** பண்ணுகி றார்கள். வரிசையில் போன போது எனது புலிகளின் வெளியேறும் **pass** ஐப் பார்த்த உத்தியோகஸ்தர் வலதுபக்கமாக இருந்த உத்தியோகத்தரிடம் போகச் சொன்னார். அங்கு அவர் எனது **pass** இன் இலக்கத்தைப் பதிந்துவிட்டுத் திரும்பத் தந்தார். சொஞ்சம் தூரம் தள்ளியுள்ள கடைசி **check point** இல் **pass** ஐக் கையளிக்க வேண்டும்.

நான்நடந்தேன். வழியில் "உளவாளிகள்" ஜாக்கிரதை. அவர்கள் உங்களை என்ன கேள்விகள் கேட்கிறார்கள் என்பதை வரும்போது அறியத் தாருங்கள்" என்று பெரிதாக பலகையில் எழுதப்பட்டிருந்தது.

கடைசி **check point** இல் நின்றவர் மரத்தில் சாய்ந்தபடி எந்தச் சாதாரண மரியாதையும் இல்லாமல் ஏதோ பெரிய **customs officer** போல் **never mind style** இல் நின்றார். ஆளுக்கு 20 வயதும் இருக்காது. நான் முன்பு **Ceylon customs** இரண்டாவது **interview** க்கும் போய் வேலைகிடைக்காத ஆத்திரம் வேறு தலைக்குள் இடித்தது.

தன் கையில் எழுதியிருந்த இலக்கமொன்றுடன் எனது தேசிய அட்டை இலக்கத்தை ஒப்பிட்டுப் பார்த்து. **pass** வாங்கிக் கொண்ட பின் யாருடைய நிர்வாகத்தின் கீழும் அல்லாத சூனியப் பிரதேசத்தில் நான்

விடப்பட்டேன்.

மூன்று மைல் தூரம் இருக்கும். நடையைக் கட்டினேன். 50 ரூபா கொடுத்தால் பாதித்தூரம் வரை கொண்டுபோய் விடுவதற்கு சைக்கிள்கள் வரிசையாக நிற்கின்றன. இவர்கள் மாவீரர், போராளிக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்.

நான் போனபோது தாண்டிக் குளத்திலுள்ள இராணுவ முகாமுக்கு 500 யார் தூரத்தில் நிறையப் பேர் அமர்ந்திருந்தார்கள். ஒரு அரை மணித்தியாலம் சென்றிருக்கும் முகாமிலிருந்து ஒலிபெருக்கி மூலம் சத்தம் போட்டான் இராணுவ கப்டன். எங்களைத் திரும்பிப் போகட்டாம். மணலாற்றில் 4 இராணுவத்தினர் இறந்தது காரணமாக இருக்கலாம்.

இந்தக் கடலெல்லாம் கடந்து வந்து எப்படித் திரும்பிப் போவது. எல்லோரும் வீதியில் அமர்ந்து கொண்டோம். சுட்டுத் தள்ளப் போறான். போவோம் என்றனர் சிலர். இருந்தும் சிலர் எழும்பித் திரிந்தனர், எந்தப் பயமும் இல்லாது. இவர்களை ஏனையவர்கள் அதட்டி இருக்கச் செய்தனர்.

இவ்விடத்தில் இரண்டு நாட்கள் படுத்திருந்தவர்களும் உண்டு என்று பின்னர் நான் அறிந்து கொண்டேன்.

இரு மணித்தியால அவஸ்தையின் பின்னர் எங்களில் இருவரை வரும்படி அழைத்தான் கப்டன். துணி ந்த இரு வயோதிபர்கள் எழும்பிப் போனார்கள். கதைத்துவிட்டுத் திரும்பி வந்தார்கள்.

"எங்களைப் பக்கத்திலுள்ள வயல் வெளிக்குள்ளால் வரட்டாம்..."

பழகியவர்கள் பாதை தெரிந்ததனால் விழுந்தடித்து முன்னே போனார்கள். சேறும் சகதியுமாக பாதை இருந்தது. பின்னால் வந்தவர்களும் முண்டியடித்தார்கள், முன்னால் போவதற்கு. வரம்பால் ஒவ்வொருவராகத் தான் போகமுடியும். யாழ்ப்பாணம் போக வந்தவர்களில் 4 இளைஞர்களைக் கொண்டு எமது பைகள் சோதனையிட வைக்கின்றனர் இராணுவத்தினர். சோதனை முடிந்து முகாம் எல்லைக்குள் போனபோது எமது தமிழ் இளைஞர்கள் சிலர் இராணுவ உடையில் நின்றதைக் கண்டேன். தாங்கிகளும் கவச வாகனங்களும் நிறைய நின்றன.

அந்த நீண்ட இராணுவ முகாமின் முடிவில் உள்ள இலங்கைப் பொலிசாரின் **check point** இனூடாகப் போகும் பொழுது மர்ம ஸ்தானம் உட்பட உடலின் எல்லாப் பாகங்களையும் தடவிப் பார்த்தார் ஒரு இளைஞன். தமிழா சிங்களமா என்பது தெரியவில்லை. தொடர்ந்து ஒரு பெண் பொலிஸ் எனது **Bag**ஐச் சோதனை யிட்டாள்.

சற்றுத் தள்ளி இரு இளைஞர்களை **CID** ஆக தொடர்ந்து வந்தவர்கள் பிடித்து வைத்திருந்தார்கள். பாவமாக இருந்தது.

அங்கிருந்து **CTB Bus** மூலம் வவுனியா வந்தோம். அங்கு எமது பைகளை வீதிக் கரையில் வரிசையாக அடுக்கி வைத்து விட்டு வவுனியா நகருக்குள் போவதற்கு **pass** எடுப்பதற்காக பொலிஸ்நிலையக் கட்டிடத்தின் முன்பாக வரிசையில் நின்றேன்.

"எல்லாம் **Pass** ஆக இருக்கிறது" எரிச்சலாக இருந்தது.

தாகமாக இருந்தது. சோடா வாங்கிக் குடித்தேன். முதல்நாள் குடித்த

*கோப்பிக்கு பின்னர் குடித்தது உடலுக்கு ஆறுதலாக இருந்தது. இப்போது பகல் 11 மணியிருக்கும். 12.30க்கு யாழ்தேவி.*

*வரிசை ஆமையாக நகர்ந்தது. வீதியிலிருந்து கட்டிடத்துக்குள்ளும் அடுக்கிவிட்டாற் போல் வரிசைகள்.*

*பொலிசார் விபரங்களைக் கேட்டு எழுதிக் கொண்டிருந்தார்கள். உள்ளே சாக்கால் மறைக்கப்பட்ட அறைகள் காணப்பட்டன.* ***PLOTE*** *உறுப்பினர்கள் சிலரை விசாரணை செய்தார்கள்.*

*நான்* **pass** *எடுத்து* **pass** *ஐக் காட்டி வீதியிலிருந்து எனது* **bag** *ஐப் பொறுக்கி எடுத்தபோது பிற்பகல் நாலு மணியாகிவிட்டது. கிட்டத்தட்ட 5 மணித்தியாலங்கள் வரிசையில் நின்றிருக்கிறேன்.*

*ஒரு ஓட்டோவைப் பிடித்துக் கொண்டு வவுனியாவில் வேலைசெய்யும் நண்பரின் அரசகுடிமனையில் குளித்த போது செம்மண் நிறமாய் உடம்பிலிருந்து தண்ணீர் வழிந்தது.*

*அங்கு நான் மூக்கு முட்ட ஒரு பிடிபிடித்தேன் சோறு.*

*9.30 மணிக்கு கொழும்புக்குப் போகிற வண்டியில் ஏறுவதற்கு வவுனியா புகையிரத நிலையம் போனபோது புகைவண்டி கிளாலிப் பயணிகளால் நிரம்பியும் தூங்கியும் வழிந்து கொண்டிருந்தது.*

திரை கடலை வென்று வந்தும்
திரவியங்கள் கொண்டு வந்தும்
இந்தச் சிறுகுடிசை
இரண்டு பிடி சோறு
தோணி உடையான்
தரும் பிச்சை என்கின்ற
கோணல் நினைப்பு
பெரு மூச்சு

தானாய் விடிவெள்ளி
தோன்றுகின்ற சங்கதிகள்
வானத்தில் மட்டும்தான்
வாழ்வில் இருள் தொடரும்.

***வ.ஐ.ச. ஜெயபாலன்***

******

# 7. கிளாலிப் பயணம் மிகவும் கடுமையானது. வள்ளத்துக்கு டிக்கற்

வாங்குகிற இடத்தில் ஒரு வயோதிபத் தாயும், டிராக்டருக்கு வரிசையில் நிற்கும் போது ஒரு இளம் பெண்ணும் மயக்கம் போட்டு விழுந்தார்கள். டிராக்டருக்கு வரிசையில் நிற்கிற இடம் ஒரு வயல் வரம்பு. இந்த இடத்தில் பாம்பு க்கடிகளும் ஏற்படுவதுண்டு.

"இனி ஏலாது தம்பி' என்று சொன்ன ஒரு வயோதிபரை கடலில் இரு இளைஞர்கள் தூக்கிக்கொண்டு போனார்கள்.

வள்ளத்தால் இறங்கி மண்ணுக்குள் கால் முழங்கால் வரை புதைந்து நடந்த போது பின்னால் என்ன பாவம் செய்தோமோ" என்று ஒரு பெண் சொன்னது கேட்டது.

இவ்வாறு
வேதனையும்,
மரண பயமும்,
மயான அமைதியும்,
ஊர்ந்து செல்லும் நேரமும்,
எம்முடன் பயணம் முழுதும் வருகின்றன.

வந்தவர்களோடு கதைத்த போது சில விஷயங்கள் வெளிவந்தன.

சிலர் வியாபாரத்துக்காகப் பொருட்கள் வாங்கிவரப் போகிறார்கள்.

இரு குடும்பங்கள் வேலையில் இடமாற்றம் கிடைத்துச் செல்கிறார்கள்.

சிலர் போற, வாறவர்களின் சாமான்களைத் தூக்கி உழைப்பதற்காக வருகிறார்கள்.

அநேக இளைஞர்கள் வெளிநாட்டு அலுவல்களுக்குப் போகிறார்கள்.

சில தாய்மார்கள் தங்கள் பெண்பிள்ளைகளின் திருமணம் மற்றும் பணப்பிரச்சனை பற்றி வெளிநாட்டிலுள்ள பிள்ளைகளுடன் கதைப்பதற்குப் போகிறார்கள்.

ஒரு வயோதிபப் பெற்றோரிடம் கதை கொடுத்தபோது அவர்கள் சொன்ன பதில் ஆச்சரியமாக இருந்தது.

கனடாவில் **Citizen** கிடைச்ச மகன், இவர்களைக் கொழும்புக்கு வரச் சொல்லி கடிதம் போட்டுள்ளார், **phone** இல் சும்மா கதைப்பதற்கு.

இதற்காக அப்பெற்றோர் பட்ட கஷ்டம் போய் வந்தால் தான் புரியும்.

நிற்க,

நண்பர்களின் வற்புறுத்தல் இல்லாது இருந்திருந்தால் நான் வந்திருக்க வேண்டிய சனிக்கிழமை வள்ளங்களில் இரண்டு விமானத் தாக்குதலுக்குள்ளாகியது என்ற செய்தியை வீரகேசரியில் பார்த்து துணுக்குற்றேன்.

என்ன கொடுமை!
என் முருகனை நினைத்துக் கொண்டேன்.

*******

நண்பர்கள் நிறைய பேர் நான் போன பாதை பற்றிய விபரங்களைக் கேட்டார்கள். பொதுவாக எல்லோருக்கும் பிரயோசனப்படும் என்பதால் எழுதுகிறேன்.

அரசுடன் இயங்கும் EPDP இயக் கத்தினர் "நரோமா" என்ற கப்பலை வாடகைக்கு அமர்த்தியுள்ளனர். இது சிங்கப்பூர் கம்பனியின் கப்பல் என்று சிலரும், கடற்படையினரின் கப்பல் என்று சிலரும் சொன்னார்கள். இதில் எது உண்மை என்பது தெரியாது. ஆனால் கப்பலோட்டிகள் கடற்படையைச் சேர்ந்தவர்கள். இந்தக் கப்பல் இரு தட்டுக்களை மட்டும் கொண்டது. கடல் மட்டத்தோடுள்ள மேல் தட்டில் 100 பேர் செல்லக்கூடியதாக கதிரைகள் வடிவிலான ஆசனங்கள் பொருத்தப்பட்டுள்ளன. இத்தட்டு திறந்த வெளி என்பதால் குளிர் காற்றும் இடைக்கிடை கடல் துளிகளும் முகத்தை அடிக்கும். கீழ் தட்டில் 25 பேர் உட்கார்ந்து இருக்கக்கூடியதாக குஷன் வாங்குகள் உள்ளன. இங்கு **Central Island** க்குப் போகிற கப்பலின் அரைவாசியும் இருக்காது.

அரச அதிபர் சார்பாக, கொழும்பில் இருந்து இயங்குகின்ற புனர் வாழ்வுக் காரியாலயத்தில் உங்கள் பெயர்களைப் பதிவு செய்யலாம். பாலசுப்பிரமணியம் என்பவர் இதற்குப் பொறுப்பாக இருக்கிறார். மேலும் அரச தனியார் நிறுவனங்களில் கடமையாற்றுகிற செல்வாக்குள்ளவர்களாலும் பெயர்களை அவரிடம் போய்ச் சேருகின்றன. கொழும்பில் உள்ளவர்களுக்கு இந்த இடங்கள் அத்துப்படி.

மேலும் படைகளின் **J.O.C. Joint operation command** அலு வலகத்திலும் பதிவு செய்யலாம். திருமலை மாவட்ட இணைப்பதிகாரி கப்பல் சேவைக்குரிய ஆட்பதிவுகளுக்குப் பொறுப்பாக இருக்கிறார். போகிறவர்களின் **se-curity clearings** க்கும் இவர் தான் பொறுப்பு. இவரது கையொப்பமிடப்பட்ட பெயர்ப்பட்டியலின் பிரதிகள் **fax** மூலமாக திருமலையில் **E.P.D.P** இயங்கும் அலு வலகத்திற்கும் மற்றைய **Fax** காங்கேசன்துறையிலுள்ள இராணுவ முகாமுக்கும் செல்கின்றது.

பெயர் பதிவு செய்வதற்கு படத்துடன் கூடிய அடையாள அட்டை அல்லது **passport** இன் இலக்கங்கள் அவசியம். தற்போது "நரோமா" மாதத்துக்கு இரண்டு அல்லது மூன்று முறை போய்வருகின்றது. ஆயினும் வைத்தியத்துக்காக கொழும்பு வந்தவர்கள், வயோதிபர்கள் போன்றோருக்கு முன்னுரிமை வழங்கப்படுவதால் சிலவேளை பெயர் பதிவுக்கு நாளாகலாம். எனவே கப்பலில் போக நினைப்பவர்கள் முதலில் கப்பல் ஒழுங்குகளைச் செய்து விட்டு பின் இங்கிருந்து போகிற விமான ஒழுங்குகளைச் செய்யலாம்.

20 கிலோ மட்டுமே கொண்டு போகலாம் என்று சொல்லுவார்கள். ஆயினும் மூட்டை முடிச்சுக்களுடன் ஆக்கள் கப்ப லுக்கு வந்திருந்தார்கள். ஏற்கனவே **J.O.C.** அனுமதி பெற்ற பொருட்களை (அனேகமாக சயிக்கிள், டோர்ச் லைற் போன்றவை) அனுமதிப்பத்திரத்துடன் ஒப்பிட்டு அனுமதிக்கிறார்கள். அலுமினியங்களுக்கும் தடைவிதி க்கப்பட்டு இருப்பதால் புதிய அலுமினியப்

பாத்திரத்தில் சமைத்து பாத்திரத்தை கரியாக்கிக் கொண்டு வந்ததையும் காண முடிந்தது.

படையினரின் சோதனையின் போது கமரா கொண்டு போக அனுமதிக்கிறார்கள். ஆனால் பற்றரியை எடுக்கச் சொல்வார்கள். **soup** வகைகள், **sanotagin** போன்ற சுகாதார உணவு வகைகள் தாராளமாகக் கொண்டு போகலாம். விட்டமின்கள், அஸ்பிரின் போன்றவை 2 போத்தல்களுக்கு மேல் தடை செய்கிறார்கள். சொக்கலேற் அதிகம் கொண்டு போனால் **tigers** க்குக் குடுக்கவா என்று கேட்பார்கள்.

நான் கொண்டு போன **toblarone chocolate** ஐ உடைத்துப் பார்த்தார்கள். உடுப்புகள் தாராளமாகக் கொண்டு போகலாம். ஒரு மதுபானப் போத்தலுக்கு அனுமதியுண்டு. தயவுசெய்து **cigarette lighter** தொடக்கம் தடை செய்யப்பட்ட (தடைசெய்யப்பட்ட பொருட்களின் விபரங்களுக்கு தயவு செய்து பின்னிணைப்பைப் பார்க்கவும்). எந்தப் பொருட்களையும் கொண்டு செல்ல முயலாதீர்கள்.

நான் போன நாட்களில் பயணத்துக்குரிய டிக்கற்றை திருமலையிலுள்ள **E.P.D.P.** அலுவலகத்தில் 500 ரூபா கொடுத்துப் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்தது அடையாள அட்டை— **passport** இலக்கத்தையும் சரிபார்த்துக் கொள்ளுகிறார்கள். வெளிநாட்டில் இவ்வளவு காலம் இருந்துள்ளீர்கள். ஆதலால் **tigers** இவ்வளவு காசு கேட்பார்கள், என்ன செய்யப் போகிறீர்கள் என்று **E.P.D.P.** அலுவலகத்தில் கேட்பார்கள். அவசியம் போக வேண்டியதற்கான ஒரு காரணத்தைச் சொல்லுங்கள். இந்த அலுவலகத்துக்கு, திருகோணமலைப் புகையிரத நிலையத்திலிருந்து 10 நிமிடத்தில் நடந்து போகலாம். மணீஸ் கபேக்கு முன்பாகவுள்ள ஒழுங்கையில் இராணுவக் காவலுடன் உள்ளது. தற்பொழுது கொழும்பிலும் கப்பலுக்கான டிக்கட்டுக்களை பெற்றுக்கொள்ளலாம் என அறிகிறேன்.

கப்பல் ஓடுகிற நாள் பிற்பகல் 2 மணிக்கு **checking** க்காக **harbour** சந்தியில் நிற்க வேண்டும். அங்கிருந்து அடுத்தநாள் அதிகாலை 7 மணிக்கு காங்கேசன்துறை துறைமுக கடலை அடையும் வரை கடற்படையினரே பொறுப்பாக உள்ளனர். அங்கிருந்தே **Red cross** தாங்கிய **UNHCR** இன் கப்பலில் ஏற்றப்படுவீர்கள். ஆகவே திருமலை யிலிருந்தே **Red cross** மூலம் போவது என்பது தவறான கூற்று.

நீங்கள் இளவயதினராக இருந்தால் கப்பலின் கீழுள்ள அறையில் எல்லோரினதும் சாமான்களை இறக்கி, பின் **K.K.S** இல் வைத்து ஏற்றுவது போன்ற வேலைகளையும் செய்வதற்குத் தயாராக இருக்க வேண்டும்.

*******

நீங்கள் கொழும்பிலிருந்து கிளாலி வழியாக யாழ்ப்பாணம் போவதாக இருந்தால் பாதை இப்படித் தான் இருக்கும்.

வள்ளம் ஓடுகிற நாளுக்கு முதல்நாள் இரவு மெயில் **train** எடுத்தால் அதிகாலை வவுனியாவை அடையலாம். அங்கிருந்து **CTB bus**மூலம் தாண் டிக்குளம் வரை செல்வீர்கள். அங்கு பொலிசாரால் சோதனையிடப்பட்டு முகாமினுள் இருக்க வேண்டும். யாழ்ப்பாணத்திலிருந்து வாறவர்கள் போய்முடியும் வரை மனிதக் கேடயங்கள் போன்று இருக்க வேண்டிவரும். அதில் சில இளைஞர்களை கொண்டு யாழ்ப்பாணத்திலிருந்து வருபவர்களின் **bag** களை சோதனையிடச் செய்கிறார்கள். அதிகமாக மதியத்துக்குப் பின்னர் சூனியப் பிரதேசத்தினூடாக நடந்து சென்று ஓமந்தையிலுள்ள புலிகளின் அலுவலகத்தில் உள்ளே நுழைவதற்கான **pass** எடுக்க வேண்டும். அங்கிருந்து **Bus, Van** ஸ்கூட்டர் மூலம் நல்லூரை அடையலாம். பின் அங்கிருந்து இரவு வள்ளம் ஏறி அல்லைப்பளை அடைந்து. (போகிறவர்களைக் கொண்டு வந்து விட்ட வாகனங்கள் வருகிறவர்களுக்காக காத்து நிற்கின்றன) அங்கு நிற்கின்ற வாகனங்கள் மூலம் இராவோடு இராவாக உங்கள் வீடுகளை அடையலாம்.

*******

கொழும்பு வாழ்க்கை பற்றியும் இங்கு குறிப்பிடுவது அவசியமாகிறது.

கொழும்பில் எனது ஊரவரைச் சந்தித்த போது இன்னுமொரு அகதியைச் சந்தித்த உணர்வே ஏற்பட்டது.

மூன்று அறையுள்ள **flats** இல் மூன்று குடும்பங்கள் வாழ்க்கை நடத்துகிற அவல நிலை அங்கு இருக்கிறது. அதுவும் குடும்பத்துக்கு 4000 ரூபா வாடகை. மேலும் எந்தவித ஆபத்தும் வராது என்ற அசுர நம்பிக்கையில் பாணந்துறை தாண்டியும் தெற்கே களனிப்பாலம் தாண்டியும் நிறையவே இடம்பெயர்ந்து வந்து தமிழ் மக்கள் வாழுகிறார்கள். கொழும்பில் இருக்கிற லொட்ஜ்கள் நிரம்பி வழிகின்றன.

வீதிகளிலும் வீடுகளிலும் மிகக் கடுமையான இராணுவச் சோதனைகள் இடம்பெறுகின்றன. நான் முன்பு வேலை செய்த **ceylinco** கட்டிடத்துள் நுழைந்த போது எனது **4 1/2** வயது மகளின் கைகளைத் தூக்கச் சொல்லி சோதனையிட்டார்கள். இவ்வாறு கடுமையாக இருந்தும் இந்தக் குண்டுகள் எவ்வாறு வெடித்தன என்பது ஆச்சரியமாக இருக்கிறது.

*******

யாழ்ப்பாணத்து வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்துள்ளன. இரு பிள்ளைகள் உள்ள குடும்பமொன்றிற்கு ஆகக் குறைந்தது 8000 ரூபா மாதத்துக்குத் தேவையாக உள்ளது. அதுவும் சிக்கனமாக வாழ்ந்தால் தான். யாழ்ப்பாணத்தவர்களில் பெரும்பாலானோருக்கு வெளிநாடுகளில் இருந்து பணம் வருவதால் வாழ்க்கை சுமாராக ஓடுகிறது.

தினக்கூலிக்கு வேலை செய்பவர்களுக்கு தினம் 100 ரூபாவும் மூன்று நேரச் சாப்பாடும் கிடைக்கிறது. ஆயினும் தினமும் வேலைகிடைக்கும் என்று

*சொல்லமுடியாது. இருந்தும் மிகுந்த முயற்சிகள் செய்து வாழ்க்கையைக் கொண்டு போகிறார்கள். இவ்வாறு வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழ்பவர்களுக்கு விடுதலைப்புலிகள் மக்கள் கடைகள் மூலம் குறைந்த விலைகளில் உணவுப் பொருட்களை விநியோகிக்கிறார்கள்.*

*உடுப்புக்களை பொறுத்தவரை ஒரு நூல்சீலை 1000 ரூபாக்கும் ஒரு இளம்பெண்* **party** *களுக்கு உடுக்கவல்ல சீலை 3000 ரூபாவும் விற்கிறது. தவிர காஞ்சிபுரம் போன்ற விலை கூடிய சீலைகள் 8000 வரை போகிறது. ஒரு எட்டுமுழ வேஷ்டி 450 ரூபாவுக்கும் சங்கு மார்க் சாரம் 300 ரூபாவுக்கும் விற்கிறார்கள்.*

*எனினும் சில கடைகள் சுறுசுறுப்பாக இயங்குகின்றன.*

******

*நமது மண்ணிலும் மக்களிடத்தேயும் இந்திய இராணுவம் ஏற்படுத்திய ரணங்கள் மிக ஆழமாகப் பதிந்துள்ளன. தற்போதைய விமானத் தாக்குதல் மற்றும் ஷெல் தாக்குதல்களை விட மண்ணில் இந்திய ராணுவத்தினரின் காலம் மிகவும் மோசமாக இருந்திருக்கிறது.*

*குறிப்பாக விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டதை அறியமுடிந்தது. கூடவே இந்திய இரர்ணுவம் பற்றிய பகிடிக் கதைகளும் அங்கு நிறைய இருக்கின்றன.*

*மாறாக, நான் திருகோணமலையில்* **Harbour** *சந்தியில்* **checking** *க்கு நின்றபோது கடைக்காரர் ஒருவருடன் கதை கொடுத்தபோது அறிந்த விஷயங்கள் வித்தியாசமாக இருந்தன. இந்திய இராணுவ காலத்தில் திருமலையிலிருந்த சிங்களவர்கள் பயத்தினால் இடம்பெயர்ந்து சென்றதாகவும், ஆனால் தற்போது மீண்டும் வழமைபோல் சிங்களவர்களின் நெருக்குதல்களுக்கு இடை யே நாம் வாழ்வதாகவும் தெரிவித்தார்.*

*******

## நாம் என்ன செய்யலாம்?

*இத் தொடரை முடிவுக்குக் கொண்டுவர முன்னர் வெளிநாட்டில் வசிக்கும் நாம் அங்குள்ளவர்களுக்கு என்ன செய்யலாம் என்பதை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்.*

*ஊர் ஊராக நிறையவே சங்கங்களும், கல்லூரிகளின் பழைய மாணவர் சங்கங்களும். விளையாட்டுக் கழகங்களும், இங்கு இருக்கின்றன. தனியே விழாக்கள் வைத்துப் பணத்தை வீணாக்காது, அங்கு ஒரு பகுதியைத் தன்னும் அனுப்பி வைத்தால் மிகவும் பயனுடையதாக இருக்கும்.*

*மண்ணில் தொடர்ந்து நடைபெறுகிற யுத்தம் காரணமாக எண்ணற்ற குழந்தைகள், சிறுவர், சிறுமிகள், அநாதைகள் ஆக்கப்பட்டுள்ளனர். கத்தோலிக்க சபைகள், (தெல்லிப்பளை துர்க்கையம்மன் தேவஸ்தானம், வெளிநாட்டு நிறுவனங்கள், மற்றும் இயக்கத்தினரின் "செஞ்சோலை" இல்லம் போன்றவற்றில்*

ஏதாவது அநாதைகள் இல்லம் உங்கள் ஊரில், அல்லது அயலூர்களில் இருக்கும். இவர்களுக்கு குறைந்த காசு என்றாலும் பரவாயில்லை, ஆனால் தொடர்ச்சியாக கிடைக்கும் படியாக ஒழுங்குகளை நீங்கள் மேற்கொள்ள வேண்டும். மிகவும் அவசியமானதும் அவசரமானதுமான இந்த உங்களது நற்பணி மூலம் அக்குழந்தைகளிடத்தே தோன்றும் சிரிப்பும் மகிழ்ச்சியும் என்றெனிலும் உங்களை வாழவைக்கும். தயவுசெய்து இதனைச் செய்ய முயற்சியுங்கள்.

மேலும் சமூகநல நிலையங்கள், பாடசாலை மண்டபங்களில் இரவு ஜெனரேற்றர் கொண்டு லைற் போடுகிறார்கள், அந்த இடங்களிலுள்ள பிள்ளைகள் வந்து படிப்பதற்காக நிறையவே பிள்ளைகள் போய்ப்படிப்பதையும் கண்டேன். சில இடங்களில் அங்கு வரும் பிள்ளைகளிடம் மாதப்பணம் அறவிட்டு, வாடகை, மண்ணெய் செலவுகளைச் சமாளிக்கிறார்கள். இந்த ஜெனரேற்றர் மண்ணெய்ச் செலவுகளைப் பொறுப்பு எடுப்பதன் மூலம் அங்கு கஷ்டத்தின் மத்தியிலும் கல்விகற்கும் எமது மாணவர்களுக்கு இந்த உதவி மிகவும் பிரயோசனமாக இருக்கும். தவிர பாடசாலையுடன் தொடர்பு கொண்டு வேண்டி யவற்றைச் செய்யலாம்.

ஊரில் சிறுவர் பூங்கா, கலைவிழாக்கள், கோயில் திருவிழாக்கள் போன்றவற்றிற்கு காசு அனுப்புமாறு கேட்டு யாராவது கடிதம் எழுதினால் இந்தச் சண்டைக்குள் இவர்களுக்கு என்ன களியாட்டம் என்று வரட்டு வேதாந்தம் பேசாதீர்கள். இன்று அந்த மக்கள் வாழும் போர் சூழலில் அவர்களது மனோநிலை பாதிக்கப்படாமல் இருப்பதற்கு, அவர்களுக்கு வாழ்வில் மனோதிடத்தையும், நம்பிக்கையையும் ஊட்டுவதற்கு இவ்வாறான விழாக்கள் அங்கு அவசியமாகும்.

******

# முடிவுரை

இத்தொடரை நான் முடிவுக்குக் கொண்டு வருகிறேன். நான் யாழ்ப்பாணத்துக்குப் போனது, சொந்தக் குடும்ப விஷயம் காரணமாகத் தான். ஒன்பது நாட்கள் மட்டுமே அங்கு நின்றிருந்தேன். அதிலும் அப்பாவுடன் கழித்த காலம் போக மீதியாகவிருந்த நேரத்தில் நான் பார்த்தவற்றை — கேட்டவற்றை — அறிந்த வற்றை இங்கு எழுதியுள்ளேன். மனோநிலை இதில் முக்கியமான விஷயம். இருந்தும் நிறையவே எழுதியுள்ளதாக நினைக்கிறேன்.

நான் திட்டப் பணிப்பாளர் அலு வலகத்தில் சந்தித்த இரு அநாதைச் சிறுமிகள் என்னுள் ஏற்படுத்திய பாதிப்புப் பற்றியும், கிளாலிப் பயணத்தில் வயோதிபர் பெற்றார் பட்ட கஷ்டங்கள் பற்றியுமே எழுத முனைந்தபோது ஜெயராஜ் அண்ணன் தான் நான் பார்த்தவற்றைத் தொடராக எழுதும்படி கேட்டுக் கொண்டார்.

இவ்வாறு எழுதவேண்டும் என்று முன்பே நினைத்திருந்தால் பல நிறுவ னங்களில், அலுவலர்கள், பத்திரிகையாளர்கள், போன்றோரைச் சந்தித்து நிறையவே விடயதானங்களைச் சேகரித்திருக்கலாம்.

ஆயினும் இருண்டு கிடக்கும் யாழ்ப்பாணத்தின் சில நிகழ்வுகளை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்திருப்பதாக உணர்கிறேன். சில இன்னும்

இருண்டபடியே உள்ளன. உதாரணமாக விடுதலைப் புலிகளின் தடைமுகாம், பொம்மைவெளி போன்றவற்றை நான் எழுதாமல் விட்டிருக்கிறேன். முக்கிய காரணம் நான் பார்க்க முடியாது என்பது போக, கேள்விப்பட்ட தகவல்கள் ஒன்றுக்கொன்று முரணாக இருந்தன. ஆனாலும் முஸ்லிம்களை மீளக்குடியமர்த்தல் என்பது தற்போதைக்குக் கனவுபோல் தெரிகிறது.

விடுதலைப்புலிகள் மக்களின் கருத்துக்களை அறிந்து நடப்பதில் கரிசனையாக இருக்கிறார்கள். கல்வியின் அவசியம் பற்றிய அவர்களது அக்கறை இதற்கு ஒரு நல்ல உதாரணம். ஆயினும் சாதாரண மக்கள், "சுவருக்கும் காது இருக்கும்" என்பதை முழுமையாக நம்புகிறார்கள். ஆதலால் அரசியல் விஷயங்களைக் கதைப்பதை தவிர்க்கிறார்கள். ஆகவே அங்கு எதிர்க்கருத்துக்களும் இருக்கின்றன என்பது புலப்படும்.

இதற்கு முக்கிய காரணம் என்னவென்றால், விடுதலைப் புலிகள் தற்போது இருவித போராட்டங்களைச் சமாந்தரமாக நடாத்திச் செல்வது தான். ஒன்று சிங்கள அரசுக்கு எதிரான ஆயுதப் போராட்டம். மற்றையது



தமிழ்மக்களிடையே ஏற்படுத்துகின்ற சமூக மாற்றத்துக்கான போராட்டம்.

இதுவரை ஏற்பட்ட இழப்புக்களுக்கும் அழிவுகளுக்கும் ஒரு நல்ல பலன் கிடைக்க வேண்டும் என்பதில் மக்கள் உறுதியாக இருக்கிறார்கள். அதற்காக யுத்தத்தை விரும்புகிறார்கள் என்பது அர்த்தமல்ல. ஆனால் சண்டை என்று வந்தால் "எங்கட பொடியள்" என்று முழு ஆதரவும் உதவிகளும் செய்கிறார்கள் என்று சொல்கிறார்கள்.

சமூக மாற்றத்துக்கான போராட்டம் தான் அங்கு பிரச்சனையாக இருக்கிறது. வசதியாக வாழ்ந்தவர்களும் உயர்குடி மக்களும் இந்தப் போராட்டத்துக்கு எதிர்ப்பாக இருக்கிறார்கள். "என்னவாம் பெரியாக்கள்" என்பது

போல் கதைக்கிறார்கள். கண்டதற்கெல்லாம் சட்டம் போடுகிறார்கள் என்று சொல்கிறார்கள்.

ஒரு வீட்டில் பெற்றோர் தனியாக இருந்தால் வீட்டிலுள்ள இரு அறைகளைக் கேட்டு இன்னொரு குடும்பத்தை அமர்த்துவது போன்ற செயல்களையும், 10க்கும் 25க்கும் உட்பட்ட வயதுடையவர்கள் வெளியேற அனுமதிக்காதது போன்றவற்றையும் முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். மேலும் பிணைநிற்பவர்களும் பின் விளைவுகளை யோசித்து நடக்காமல் விடுவதால் பிரச்சனைக்கு உள்ளாகிறார்கள்.

எனினும் நான் முன்பு எழுதியது போல் விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்தில் மக்களுக்கு மிகுந்த நம்பிக்கையும் பற்றுதலும் இருக்கிறது. ஏதும் பிரச்சனை என்றால் மேலிடத்துக்கு அறிவித்தால் சரியாகும் என்று நம்புகிறார்கள். உதாரணமாக எனக்குத் தெரிந்த ஒருவரின் ஸ்கூட்டரை எடுத்துச் சென்றவர்கள் மேலிட உத்தரவுக்கு இணங்க மூன்றாவது நாள் திரும்பிக் கொண்டுவந்து விட்டுள்ளார்கள்.

விடுதலைப் புலிகளின் நிர்வா கத்திறன் தான் அங்கு இப்போது பரபரப்பாகப் பேசப்படும் விடயம். நிழல் அமைப்பு மூலம் பாடசாலை நடைமுறைகளில் கவனம் செலு த்துவது, ஏனைய நிறுவனங்கள், நிர்வாகங்களில் தலையிட்டு சீர்திருத்தங்கள் செய்வ தை இங்கு குறிப்பிடலாம்.

மேலும் பொருளாதாரச் சுதந்திரத்துக்கான அவர்களின் முயற்சியும் முக்கிய மானது. பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் மற்றும் வெளி நிறுவனங்கள் மூலம் இந்த முயற்சியைச் செய்கிறார்கள். விடுதலைப் புலிகள் வயல், தோட்டங்களில் வியர்வை சிந்தி வேலை செய்வது மண்மீட்புக்கான அவர்களது போராட்டத்தின் மறுபக்கம். உயிரைக் கொடுக்க முன்வந்த அந்தப் போராளிகள் இவ்வாறு தங்கள் உடலையும் வருத்தி மண்ணை வளப்படுத்தப் பாடுப டுகிறார்கள் என்ற விடயம் மக்கள் மனதைத் தொட்டுள்ளது.

மக்கள் அங்கு, மின்சாரம் இல்லாமை, உணவுப் பொருட்கள் தட்டுப்பாடு, ஷெல்லடிப் பயம் விமானத் தாக்குதல் போன்ற மிக முக்கியமான கஷ்டங்களுக்கும் மத்தியிலும் ஒரு நெருப்புக் குச்சியுடன் வாழ்வில் ஒளிபெற்றவர்கள் போல வாழப் பழகி விட்டார்கள். விழாக்கள், கலைவிழாக்கள், திருவிழாக்கள் என்பன நடக்கின்றன. மக்கள் வாழ்வும் நடக்கிறது.

**இருந்தும்,**
**ஒவ்வொரு முகமும்**
**சுவரும்**
**யன்னல்கம்பியும்**
**வீதிகளும்**
**பெரு வெளியும்**
**கதைகள் சொல்லுகின்றன**

வழமைக்கு மாறாக, வெளிநாட்டிலிருந்து கொண்டு சொந்த நாட்டுக்குப் போய் வந்த பயணக்கட்டுரை எழுத நேர்ந்த, என் சோகம் போல.

**முற்றும்**

## பின்னிணைப்பு 1

### தடைசெய்யப்பட்ட பொருட்கள்

### Northern Province

01. Arms/Ammunitions
02. Explosives/Pyrotechnics
03. Toy Guns
04. Electric Wire
05. Remote Control Devices
06. Electrical/Electronic Equipment
07. Electrical/Electronic Toys
08. Helmets
09. Binoculars
10. Telescopes
11. Compasses
12. Cloth material similar to those worn by Security Forces
13. Iron and Iron Rods
14. Oxygen/Welding Equipment
15. Aluminium/Aluminium ware
16. Empty Gunny bags
17. Cement
18. Ball Bearings
19. Timber
20. Barbed Wire
21. Wire Cutters
22. Inflammable material except Kerosene

23. Camphor
24. Urea Fertilizer
25. Batteries of all varieties
26. Radio Spare parts
27. Plastic Cans
28. Motor Cycles
29. Motor Vehicle spare parts
30. Motor Vehicle tyres
31. Printing Papers
32. Typing/Duplicating Sheets
33. Printing Machines and other Equipment used in Printing
34. Roneo and Photostat machines
35. School Bags
36. Gold
37. Lead/Lead items
38. Surgical Equipment
39. Medicines except non prescriptives drugs in small quantities
40. Petrol/Diesel/Lubricants
41. Polythene/Polythene bags
42. Wax/Candles
43. Chemicals

## Eastern Province

01. Arms/Ammunitions
02. Exploxives/Pyrotechnics
03. Urea Fertilizer

## பின்னிணைப்பு 2

## மேலதிகமாகத் தடைசெய்யப்பட்ட பொருட்கள் ( ஏப்ரல் 20, 1994 முதல்)

01. Video Cameras
02. Video Cassette Pieces
03. Computers
04. Cameras
05. Film Rolls
06. Tin Food
07. Biscuits
08. Chocolates
09. Coconut oil
10. Vegetable Oil
11. Gum& Sprits used for boat repairs/fibreglass mats
12. PVC pipes
13. Out board motors (OBMs)
14. Canvas materials
15. Diving equipment
16. Rubber band/Balloons/Rain Coats
17. Solar Panels
18. Enamel paints/Anticorosive paints
19. Emulsion paints -Dark colours
20. Rice mill spare parts
21. Wire Rolls
22. Bicycle Chains
23. Audio Cassette pieces
24. All varieties of Shampoo
25. Nut & Bolts
26. Kerosene oil/Engine oil
27. push bicycle
28. Generators/Water Pumps and (Spares)
29. Box of matches
30. **Any other doubtful items**

மக்கள் அங்கு, மின்சாரம் இல்லாமை, உணவுப் பொருட்கள் தட்டுப்பாடு, ஷெல்லடிப் பயம் விமானத் தாக்குதல் போன்ற மிக முக்கியமான கஷ்டங்களுக்கும் மத்தியிலும் ஒரு நெருப்புக் குச்சியுடன் வாழ்வில் ஒளிபெற்றவர்கள் போல வாழப் பழகி விட்டார்கள். விழாக்கள், கலைவிழாக்கள், திருவிழாக்கள் என்பன நடக்கின்றன. மக்கள் வாழ்வும் நடக்கிறது.

இருந்தும்,
ஒவ்வொரு முகமும்
சுவரும்
யன்னல்கம்பியும்
வீதிகளும்
பெரு வெளியும்
கதைகள் சொல்லுகின்றன

வழமைக்கு மாறாக, வெளிநாட்டிலிருந்து கொண்டு சொந்த நாட்டுக்குப் போய் வந்த பயணக்கட்டுரை எழுத நேர்ந்த, என் சோகம் போல.

**ப. ஸ்ரீஸ்கந்தன்**



**மஞ்சரி வெளியீடு**